Registered as a News Paper in Sri Lanka

பக்கம் ரூபா 16/50

දිනමුරසු වාරමලර් ஜூன்.20 - 26, 2004

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONA... 567





## பிரிட்டனியின் பிணக்கு

## காலக் க வி தை

எதிரணிகளின் ஏட்டிக்குப் போட்டி!

## த ணி க் கை யை தாண்டும் திரை ஆபாசம்



## அரசியலுக்குள் மதவாதம் மதவாதத்துக்குள் அரசியல்

# சூரிய நமஸ்காரம்

சூரிய நமஸ்காரமென்பது யோகாசனமும், மூச்சுப் பயிற்சியும் (பிராணாயாமமும்) சேர்ந்த ஒன்றாகும். யோகாசனங்கள் செய்ய வசதி, நேரமில்லாதவர்கள் கீழே குறிப்பிடும் மந்திரங்களை தினமும் காலை 12 முறை பயபக்தியுடன் சொல்லி நமஸ்காரம் செய்ய வேண்டும். முதலில் தியானிக்க வேண்டிய மந்திரம்.

ஹிரண்மயேந பாத்ரேண ஸத்யஸ்யாபிஹிதம்முகம்!
தத்வம் பூஷந்நபாவ்ருணு ஸத்யதர்மாய த்ருஷ்டயே.

1. ஓம் ஹ்ராம் மித்ராய நமக!
2. ஓ்ம் ஹ்ரீம் ரவயே நமக!
3. ஓம் ஹ்ரூம் சூர்யாய நமக!
4. ஓம் ஹ்ரைம் பானவே நமக!
5. ஓம் ஹ்ரௌம் ககாய நமக!
6. ஓம் ஹ்ரக பூஷ்ணே நமக!
7. ஓம் ஹ்ராம் ஹிரண்ய கர்ப்பாய நமக!
8. ஓம் ஹ்ரீம் மரீசயே நமக!
9. ஓம் ஹ்ரூம் ஆதித்யாய நமக!
10. ஓம் ஹ்ரைம் ஸவித்ரே நமக!
11. ஓம் ஹ்ரௌம் அர்காய நமக!
12. ஓம் ஹ்ரக பாஸ்க ராய நமக!

*– சிவஸ்ரீ அ. அரசரெத்தினம், சேனையூர் – 06.*

# ஆன்மீகம்

## மனுக்குலம் மீது அன்பு



கடவுள் சாயலில் படைக்கப்பட்ட மனுக்குலத்திடம் அன்பை எதிர்பார்க்கின்றோம். ஆனால், அந்த அன்பு சுயநலம் என்ற போர்வையோடு போர்த்தப்பட்டுப் பொது நலம் இன்றி வெளிப்படும்போது, ஐந்தறிவு கொண்ட உயிரினங்கள் மிகவும் உயர்வானது என்று கருத நேரிடுகின்றது. இன்று அன்பு மறைந்து அநியாயம் தலைநிமிர்ந்து செயற்படுகின்றது. உலகத்தில் அன்பு மேலானது என்று திருவிவிலியம் (Bible) எடுத்துக் கூறுகின்றது. ஒருவன் "கடவுளை நேசிக்கின்றேன், கடவுளிடம் பயபக்தியாய் வாழ்ந்து வருகின்றேன்" என்று கூறி மனிதர்களை அன்பு செய்யாவிட்டால் அவனுடைய ஆன்மீகம் அறியாமையோடு பின்னி பிணைந்து உறவு கொண்டுள்ளது என்பது உண்மை. திருவிவிலியம் கூறுகின்றது "தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்" (யோவான் 4:20) எனவே, அன்பு முதன்மையானது. இந்த அன்பை அயலவன், அன்னியன் போன்றோரிடம் நீ பகிர்ந்துகொள்ளும்போது கடவுள் உன்னிலே செயற்பட்டு வெளிப்படுகின்றார்.

*சகோ:– அ. குணசேகரம், அக்கரைப்பற்று.*

# உலோபித்தனம்

"அல்லாஹ் தன் அருளினால் தங்களுக்குக் கொடுத்திருக்கும் பொருட்களில் யார் உலோபித்தனம் செய்கிறார்களோ அது தமக்கு நல்லது என்று (அவர்கள்) எண்ண வேண்டாம். அவ்வாறன்று. அது அவர்களுக்குத் தீங்குதான்."

(3:180)

"உலோபித்தனம் செய்வதுடன் பிற மனிதர்களையும் உலோபித்தனம் செய்யும்படி வேண்டி அல்லாஹ் தன் அருட் கொடையினின்று அவர்களுக்குக் கொடுத்ததை மறைத்துக் கொள்கிறாரகளே. அத்தகைய நன்றி கெட்டவர்களுக்கு இழிவான தண்டனையை நாம் சித்தப்படுத்தி வைத்துள்ளோம்" (4:37)

*– எம்.எச்.எம். ஆஸாத், பாலமுனை – 03.*

---

பரிசுக்குரிய கவிதை

## திட்டம்

கைது செய்து
விசாரணை செய்து
குற்றம் கண்டால்
தண்டனை வழங்குவது
சட்டம்!
கைது இன்றி
விசாரணை இன்றி
குற்றம் காணாமலே
கண்ட இடத்தில்
சுட்டுக் கொல்வது
திட்டம்!

*த. நகுலேஸ்வரன்,*
*மட்டக்களப்பு.*

*கவிதைப் போட்டி இல: 564*



இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

## விளைவு

ஆசை காட்டிய
அரசியல்வாதியை நம்பி
கள்ளவாக்குகள் போட்டேன்
கோடிகளை அவன் எண்ண
சிறைக் கம்பிகளை
நான் எண்ணுகிறேன்.

அ.சந்தியாகோ,
கண்டி.

## புரியவில்லை

காரணம் அறியாமல்
காலம் போவது தெரியாமல்.....
கம்பிகளுக்குப் பின்னால்......
எனைப் போல் இன்னும்
எத்தனை பேரோ.....?


ச.இரமேன்குமாரி,
நானுஓயா.

## தீர்ப்பே!

உன் மனதை மட்டும்
காதலித்த எனக்கு
உனது மௌனத்தினால்
உன் தந்தை
தந்த பரிசு
சிறைத் தண்டனை.

ஆ.நிஷாந்தன்,
திருமலை.

**கவிதைப் போட்டி இல: 567**



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி 26.06.2004

கவிதைப் போட்டி இல. 567
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.

## விடுதலை

தமிழனுக்கு இனி விடிவென்று
மார்தட்டிப் பேசியவர்கள் எங்கே.....?
தடுப்புக் காவலில் உள்ள
நாங்களும் தமிழர்கள்தான்.
எமக்கெப்போ பெற்றுதரப்போகின்றீர்கள்
விடுதலை....?

கி.ரமேஷ்,
பெரிய போரதீவு.

## கவலை வேண்டாம்!

உள்ளே இருப்பவர்கள்
எல்லாம்
கெட்டவர்களுமல்ல;
வெளியே
இப்பவர்கள் எல்லாம்
நல்லவர்களுமல்ல!

நாகேந்திரன் சசிதா,
ஆரையம்பதி - 03.

## வாய்ப்பூட்டு

மக்களின் பிரதிநிதி என்று
மன்றத்துக்குப் போனாலும்
மக்களிடம் தொடர்ந்து
மனப்பாடம் செய்து ஓதியதைக்
கூற வேண்டும்
சுகபோகம் கிடைத்த போதும்
சுயேச்சையாகப் பேச முடியாச்
சிறைக் கைதி எம்.பி.
நாங்கள்.

சீ.தங்கவடிவேல்,
மட்டக்களப்பு.

## கூண்டுக் கிளி

திட்டமிட்டு நீங்கள்
செய்த
கூரைத் தகடுக்
கொள்ளை என்னும் –
மோசடிக்
குட்டு வெளிச்சம்
ஆனதால் நீர் –
சிறையில்
கூண்டுக்கிளியாய்
நிற்கின்றீர்.

க.மலர்ராஜன்,
திருகோணமலை.

## விதி

இத்தாலி செல்ல
எண்ணிய தம்பி
வெலிக்கடையில்
எண்ணுகிறான்
கம்பி.

எம்.பி.எம்.ஸப்வான்,
யடவத்த.

## அதுதானே நடக்குது!

என்ன நண்பரே
எட்டிப் பார்க்கிறீர்
குற்றவாளிகள்வெளியிலும்
நிரபராதிகள் உள்ளுக்கும் என்றா?
அதுதானே நடக்குது நம் நாட்டில்!

எஸ்.பி.பி.கணேஷ்,
தாண்டியடி.

## நீதி

குண்டுவைத்தான் என்ற
குற்றத்திற்காய் குறைந்த பட்சம்
தண்டனை ஒருவனுக்கு
சமாதானம் ஏற்படுத்த முயன்றான்
என்பதற்காய்
சாகும் வரை தண்டனை
ஒருவனுக்கு.

ஏ.எல்.பர்சாத்,
கல்முனை -05.

---

# உங்கள் பக்கம்

## தாண்டியடிக்கு எப்போது மின்சாரம் வழங்கப்படும்?

தாண்டியடியில் வசித்து வருகின்ற பல மக்கள் எதிர்நோக்கும் மிக முக்கிய பிரச்சினை மின்சாரம் இல்லாத பிரச்சினையாகும். இதனால் மாணவர்களின் கல்வி கற்றல் நடவடிக்கை மிகவும் பாதிக்கப்படுகின்றது. மக்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் திண்டாடுகிறார்கள். ஏனைய தொழில் செய்யும் நுட்பம் தெரிந்தும் மின்சாரம் இல்லாமையினால் தொழில் செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள்.

எங்கள் அன்புக்குரிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அரியநாயகம் சந்திரநேருவின் பாரிய உழைப்பினாலும், விடாமுயற்சியினாலும், பிடிவாதத்தினாலும் ஐ.தே. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பீ. தயாரத்னவின் அனுசரணையுடன் எங்கள் கிராமத்தில் மின் இணைப்புக்கள் நடைபெற்று முடிந்த வேளை, சித்திரை மாதம் மின்சாரம் வழங்கப்படும் என்று கூறியிருந்தார்கள். ஆனால், இதுவரையும் வழங்கப்படவில்லை.

எங்கள் மக்களின் ஆசைகளை நிராசைகளாக்காமல், எங்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சியையும், எங்கள் கிராம முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து மின்சாரத்தைப் பெற்றுத் தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

- இங்ஙனம்,
பீ. சதீஸ்வரன்,
தாண்டியடி.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் - உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 4514282
தொலை நகல் (Fax): 4513266
ஈ-மெயில்: (E-mail):
murasu@sltnet.lk


# வாசக[ர்] சாலை



*வியக்க வைக்கும் வீர முரசே!*

## இனிய முரசே!

வார்த்தையால் வர்ணிக்க முடியாத உன்னை எழுத்தால் மட்டும் எப்படி வர்ணிப்பது...?

வாரந்தோறும் நீ கொண்டுவரும் ஆக்கங்கள் அத்தனையும் அருமையாகத்தான் இருக்கின்றன. கவிதைகள், சிறுகதைகள், பொது அறிவு போன்றவை என்னை வாசகனாக மட்டுமல்ல, எழுத்தாளனாகவே ஆக்கிவிட்டது. இந்த முரசு என்றும் வாழ வேண்டும்.

வாழ்க! பல்லாண்டு.

வேப்பங்குளம்
முஹிடீன் ஏ.றாஸிக்,
தம்பபண்ணி,
புத்தளம்.

வியாழனின் விடியலில்
வீணையின் இசை இராகங்களாய்
இசைத்திடும் இனிய முரசே!
ஆட்சி அரசியலின் அரங்கேற்றத்தை
தேடிவந்து
அதிசய உலகில் அலை பாயும்
சம்பவங்களைக் கொண்டுவந்து
சிறுவர்களின் சிந்தையில்
சிதறிவிடும் பாப்பா முரசாய்
தினந்தோறும் நடக்கும் விடயங்களை
கிழமையில் ஒரு நாளில்
தந்து அசத்திவிடும் தினமுரசே!
உன் பணி மென்மேலும்
சிறப்புடன் தொடர எனது வாழ்த்துக்கள்.

– தினமுரசின் வாசகி
ந. திலகராணி,
ஹாலி - எல.

## அன்பின் முரசே!

அன்பின் முரசே உனது
புதிய நண்பி நான் உன்னைப்
பாராட்ட விரும்புகிறேன்.
நான் இரசிப்பது
தினமுரசைத்தான்
ஏழு கடல் தாண்டி
வாழும் எங்களுக்கு உன்
வருகை
ஒரு தாலாட்டு. நீ சுமந்து வரும்
அத்தனை அம்சங்களும்
Super O
Super. மேலும் நீ புதுப் புது
அம்சங்களோடு வளர என்
வாழ்த்துக்கள்.

– தேவராஜா ராசாத்தி
லெபனான்.

## எட்டுத் திசையெங்கும் பரவட்டும்

அன்பு நேசங்களைப் பிடித்த
அன்பான முரசே!
உன் பணிகள், சேவைகள்
அனைத்தையும்
இடைவிடாமல் தொடர...!
எட்டுத்
திசைகளிலும் சென்று, உன்
பெயர் முரசு ஒலிக்கட்டும்.

– நாகராஜா சாந்தரூபன்,
கட்டப்பிராய்.

## தேவிடாத தினமுரசே!

தேனிலும் இனிய
தினமுரசே!
தமிழின்பன் இவனின்
தாழ்வான வணக்கங்கள்....

ஊடகத்துறையின்
ஊக்க மாத்திரைகளில்
நீயும் ஒருவன்...!

தமிழ் மொழிக்கு
தரணியில் பூத்த
மற்றுமொரு சக்தி நீ...!

இளம்
எழுத்தாளர்களுக்குக்
களம் அமைத்து
வளமான எதிர்காலத்தை
உருவாக்குவதில்
உனக்கு நிகர் நீயே!
வளர்க உன்
வளமான தமிழ்ப் பணி என
வாழ்த்துவதில்...
வானில் மிதக்கின்றான் –
இவன்!

– மலைக்கவி
கா.சுபாஷ்,
திருவள்ளுவர்புரம்,
டிக்கோயா.

# தர்மராஜ்ய, தமிழரசு எம்.பிக்களின் கூட்டுக்கு ஒரு நொண்டிச்சாட்டு
# அரசு, புலிகள் பேச்சுக்கு மட்டுமேன் இடைக்கால வேட்டு

'பாராளுமன்ற ஜனநாயகத்துக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கும் நிலையில் எதிர்க்கட்சிகள் வாய்மூடி மௌனிகளாக இருக்க முடியாது. பாராளுமன்ற விழுமியங்களையும் எம்.பி.க்களின் சிறப்புரிமைகளையும் பாதுகாக்க எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து போராட வேண்டுமென்று கடந்த பத்தாம் திகதி பாராளுமன்றத்தில் கூடிய ஐ.தே.க., தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இ.தொ.கா., ஜாதிக ஹெல உறுமய, மலையக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய அனைத்தும் ஒன்று சேர்ந்து முடிவெடுத்துள்ளன. பௌத்த ராஜ்யம் அமைக்கப் போராடுவதாகக் கூறிக் கொள்ளும் ஜாதிக ஹெல உறுமயவும் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளெனத் தம்மைத் தாமே வர்ணித்துக்கொள்ளும் புலிகளின் முகவர்களும் தமது சிறப்புரிமைகளைப் பாதுகாப்பதற்காகக் கூட்டிணைய முடியுமென்றால் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரையுமே அழித்தொழிக்கும் இந்த யுத்தத்தை நிறுத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஏன் இவர்களால் ஒன்றுபட்டுச் செயற்பட முடியாது' இவ்வாறு கேள்வி எழுப்பினார், கடந்த வாரம் அமைக்கப்பட்ட சமாதானத்துக்கான தமிழ்ப் புத்திஜீவிகளின் வெகுஜன அமைப்பின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான சட்டத்துறைப் பேராசிரியர் ஒருவர். பிக்குகளின் மஞ்சள் கட்சியான ஜாதிக ஹெல உறுமய சிறுபான்மை இன மக்களுக்கு எதிராகப் பச்சை வகுப்புவாதக் கருத்துக்களைப் பரப்பி வருகிறது. தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் பாரம்பரியப் பிரதேசங்கள் இல்லையென்றும், தமிழ்ப் புலிகளுடன் பேசக்கூடாதென்றும், தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து தமிழீழம் வழங்க வேண்டாமென்றும், நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களாக வரக்கூடாதென்றும் சமாதானப் பேச்சே தேவையில்லையென்றும் அடித்துக் கூறும் மஞ்சள் கட்சி இந்த ஜாதிக ஹெல உறுமய. இக் கட்சியில் நூற்றுக்கு நூறு வீதம் பிக்குகளே அங்கம் வகிக்கின்றனர். மறுபுறத்தில் தமிழர் பாரம்பரியப் பிரதேசம் தமிழர் தேசம், தமிழர் தேசியம், சுய நிர்ணய உரிமை, தமிழர்களுக்கென மட்டும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை, ஏகப் பிரதிநிதிகள் என்றெல்லாம் பேசிவரும் புலிகளின் முகவர்களாகச் செயற்படுபவர்களே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். புலிகள் இயக்கத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் நூற்றுக்கு நூறு சதவீதம் தமிழர்களே அங்கம் வகிக்கின்றனர். மொழி, மத, இன எல்லைகளுக்கு அப்பால் மனிதாபிமான ரீதியில் சிந்திக்கவோ செயற்படவோ முடியாத இந்த எதிரும் புதிருமான கட்சிகள் தமது நலன்களை மட்டும் பாதுகாப்பதற்காகக் கூடிக் குலாவுகின்றன.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் நடந்த யுத்தம் தமிழ், சிங்கள, முஸ்லிம் சகல தரப்பிலும் ஒன்றரை இலட்சத்துக்கு மேற்பட்டவர்களைக் காவு கொண்டுள்ளது. தமிழ், சிங்கள, முஸ்லிம் பிரதேசங்கள் அனைத்துமே சூறையாடப்பட்டுள்ளன. எனவே, இந்தக் கொடூர யுத்தத்துக்கு முடிவுகட்டுவதற்காக ஏன் இந்தக் கட்சிகள் ஒரே மேசையில் சந்திக்கக் கூடாது. உங்கள் சிறப்புரிமைகளைப் பாதுகாப்பதற்காக உங்களால் கூட்டுச் சேர முடியுமென்றால் மக்களின் அவலங்களைப் போக்கும் விடயத்தில் மட்டும் நொண்டிச்சாட்டுகளைக் கூறிக்கொண்டு பிரிந்து நிற்பது ஏன் என்று அவர் கேள்வி எழுப்பினார்.

நிபந்தனைகளை முன்வைக்காமல் பிரச்சினைகளை மேசையில் முன்வைத்து இலகுவான விடயங்களுக்கு முதலில் தீர்வு கண்டு பின்னர் கடினமான பிரச்சினைகளுக்குப் படிப்படியாகத் தீர்வு காண இவர்களால் முடியாமல் போவது ஏன் என்றும் அவர் கேட்டார். ●

## படுகொலைகள் கண்டனத்துக்குரியவை ஆனால், இக் கேள்விக்கு என்ன பதில்?

ஒரு சிலரின் படுகொலை குறித்து அனுதாபம் தெரிவிப்பவர்கள் வேறொரு சாரார் கொலைசெய்யப்படும்போது கண்டுகொள்ளாமலே இருப்பது ஏன் ஜனநாயகத் தமிழ் ஊடகவியலாளர்கள் அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது. "இந்தக் கேள்விக்கு என்ன பதில்?" என்ற தலைப்பில் இந்த அமைப்பு விடுத்திருக்கும் அறிக்கை வருமாறு:

ஊடகவியலாளர் நடேசன் அவர்களுக்கு எம் கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம். அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களையும் ஆறுதல் வார்த்தைகளையும் உரித்தாக்குகின்றோம். எந்தவொரு மனிதனும் அவர் எத்தகைய கருத்தைக் கொண்டிருக்கும்போதும் அவரது வாழ்வுரிமை மறுக்கப்படுவதும், அகால வேளையில் உயிர் பறிக்கப்படுவதும் கொடுமையானது, கொடூரமானது, கண்டனத்துக்குரியது. மனித குல நாகரிகம் வெட்கித் தலை குனியக் கூடிய காட்டுமிராண்டித்தனம் என்பதில் எவ்வித ஐயமில்லை.

ஆனால், ஒரு சிலருக்காக அனுதாபப்படும் அதேவேளை மற்றொரு சாரார் கண்டுகொள்ளாமல் விடப்படுவது ஏன்? உதாரணமாக, பேராசிரியர் குமாரவேல் தம்பையா, ஊடகவியலாளர் ஐ. நடேசன் போன்றவர்களுக்காக அனுதாபப்படுவர்கள், ராஜன் சத்தியமூர்த்தி போன்றவர்களின் கொலை குறித்து மௌனிப்பது ஏன்? ஊடகவியலாளர்களாகத் தொழில் புரிந்து வந்த ஈழநாடு இதழின் செய்தியாளர் ஐ.சண்முகலிங்கன் (ஐசண்), தினமுரசு இதழின் ஆசிரியர் அற்புதராசா நடராசா, தினகரன் செய்தியாளர் செழியன் பேரின்பநாகம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த அந்தோனி மரியதாஸ் மற்றும் சபாலிங்கம் போன்றவர்களுக்காக அனுதாபம் தெரிவிக்க முயலாதது ஏன்?

இந்தச் சம்பவங்கள் எல்லாம் கண்டுகொள்ளாமல் விடக்கூடியவைதானா? அல்லது இப் படுகொலைகளைப் புரிந்த புலிகளின் செயல் நியாயமானது என்றா? அல்லது இவ்வாறு படுகொலையுண்டவர்கள் தமிழ் ஊடகவியலாளர்கள் இல்லையா? தயவுசெய்து உதடுகளால் அல்லாமல் உங்கள் இதயத்தைத் தொட்டுச் சொல்லுங்கள்" என்று அந்த அறிக்கை கேள்வி எழுப்பியுள்ளது. ●

## மகேஸ்வரன் மீது புகார்கள்

முன்னாள் இந்து கலாசார அமைச்சரும், தற்போதைய கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி.யுமான மகேஸ்வரனும் அவரது சகாக்கள் சிலரும் கடந்த ஆட்சிக் காலத்தில் வேலை வாய்ப்புகள் பெற்றுத் தருவதாகக் கூறிப் பலரிடம் பெருந்தொகைப் பணம் பெற்றுள்ளதாகப் பல புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன. அரசாங்க வங்கிகளிலும் மற்றும் அரச திணைக்களங்களிலும் வேலைவாய்ப்புகளைப் பெற்றுத்தருவதாகக் கூறி பணம் பெறப்பட்டதாகக் கூறப்படுகிறது. பல மாதங்கள் கடந்த நிலையில் இன்னமும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை யென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இணைப் பதிகாரியான முன்னாள் யாழ். மாவட்ட எம்.பி. கே.வி. குகேந்திரனிடம் (ஜெகன்) முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ●

## அபிவிருத்தியையே முதன்னையாகக் கொண்டுள்ளோன்

*- தங்கேஸ்வரி எம்.பி.*

மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சி எம்.பி. தங்கேஸ்வரி கதிராமன், கடந்த 14ஆம் திகதி இரவு, தனியார் தொலைக்காட்சி யொன்றின் செய்திச் சேவைக்களித்த பேட்டியில் மட்டக்களப்பு மக்களின் பிராந்திய அபிவிருத்தியையே முதன்மையாகக் கொண்டு செயற்படுவதாகக் கூறியிருந்தார். "மட்டக்களப்புக் கிராமங்களில் வாழும் மக்கள் இன்னல்களை அநுபவிக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வித வசதிகளும் இல்லை. கிராமங்கள் தோறும் ஐந்து, ஆறு பேர்களைக் கொண்ட குழுக்களை அமைத்து, பிரச்சினைகளை இனங்கண்டு உலக வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களின் உதவியோடு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளேன்" என்று கூறினார். தமிழ்த் தேசம், தேசியம், இடைக்காலம் பற்றி எதுவுமே அவர் வாய் திறக்கவில்லை. "கருணாவின் அறிவுறுத்தலுக்கேற்பப் பிராந்திய அபிவிருத்தியை முன்வைத்துப் போட்டியிட்டவர் அவர். அவரின் திட்டங்கள் சரியானதுஎன்கிறார் மட்டுநகரைச் சேர்ந்த நாகலிங்கம் என்ற வயோதிபர். ●

## நயினை அம்மன் ஆலயத்தில் கோடி ரூபாவுக்கு மேல் மோசடியெனப் புகார்

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் மோசடி செய்யப்பட்டுள்ளதாக முன்னைய நிர்வாகத்தினர் மீது வழக்குத் தாக்கல் செய்வதற்கான முஸ்தீபுகளில் புதிய நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. கடந்த 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற புதிய தர்மகர்த்தாக்களின் கூட்டத்தில் மேற்படி மோசடி தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டன. முன்னாள் உதவி அரசாங்க அதிபர் தியாகராஜா என்பவரின் தலைமையில் பழைய நிர்வாகம் இயங்கியபோது இம் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கூறைச் சேலைகள் கொள்வனவு, படகுகள் வாங்கியமை மற்றும் வங்கிக் கணக்குகளில் மோசடியெனப் பல ஊழல்கள் இடம்பெற்றதாகப் புதிய நிர்வாக சபைக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் சிலர் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். முறையற்ற விதத்தில் வங்கியிலிருந்து பல தடவைகள் பணம் மீளப் பெறப்பட்டதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 'நேர்த்திக் கடன்'களுக்கென வழங்கப்பட்ட பெரும் தொகைப் பணத்துக்குக் கணக்கு வழக்கும் இல்லை.

கோவில் பணத்திலிருந்து புலிகளுக்கும் இலட்சக் கணக்கில் பெருந்தொகைப் பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏன் இவ்வாறு முறையற்ற விதத்தில் பணம் வழங்கப்பட்டதெனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. பழைய நிர்வாகத்தின் ரசீதுகள், பற்றுச் சீட்டுகள், ஆவணங்களைப் பரிசீலித்தபோதே இந்த ஊழல்கள் அம்பலத்துக்கு வந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது. ●

## கட்டுநாயக்கா விமான நிலையத்தில் குண்டுப் பயமுறுத்தல்?

கடந்த ஒன்பதாம் திகதி புதன்கிழமை மாலை முப்படை அதிகாரிகள், கட்டுநாயக்கா விமான நிலையப் பாதுகாப்புக்குப் பொறுப்பான அதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்ட உயர்மட்ட மாநாடொன்று கொழும்பில் நடைபெற்றது. வியாழக்கிழமை அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் குண்டுத் தாக்குதலொன்று நடத்தப்படவிருப்பதாக சுவீடன் தலைநகரான ஸ்டொக்ஹோமிலிருந்து கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இப் பாதுகாப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. அத்துடன் விமானப் படையைச் சேர்ந்த சுமார் 300 வீரர்கள், விமான நிலைய மற்றும் விமான சேவைகள் லிமிட்டெட்டின் சிரேஷ்ட பாதுகாவல் அதிகாரி ஏ.எம். மன்சூர் தலைமையிலான பாதுகாப்பு ஊழியர்கள், அதிரடிப்படைக் கமாண்டோக்களென விமான நிலையமெங்கும் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. கொழும்பிலிருந்து டுபாய், சூரிச் ஊடாக சேவையில் ஈடுபடும் செக் விமானமொன்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பயணியொருவர் குண்டுகளுடன் வியாழன் அதிகாலை பயணிக்கவிருப்பதாக சுவீடனிலுள்ள இலங்கைத் தூதரகம் அனுப்பி வைத்த அதிர்ச்சிச் செய்தியின் விளைவாகவே இந்த அதிரடி நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டிருந்தன.

பயணிகளும், பயணிகளின் பொதிகளும் துருவித் துருவிச் சோதனையிடப்பட்டன. விமானத்தில் அல்லது விமான நிலையப் பயணிகள் புறப்படும் இடத்தில் குண்டு வைக்கப்போகிறாரென்று குறிப்பிடப்பட்ட கந்தசாமி சிதம்பரப்பிள்ளையென்ற யாழ். வாசியும் விமான நிலையம் வந்து சேர்ந்தார். அவரின் அடி முடியெல்லாம் அதிகாரிகள் சோதனையிட்டுப் பார்த்தார்கள். அவரிடம் உரிய ஆவணங்களும் விமான டிக்கட் மற்றும் சாதாரண பொருட்களும் தவிர எதனையும் அதிகாரிகளால் கண்டுபிடிக்க முடியவில்லை. விமான நிலைய இரகசியப் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டு அவரது ஆதி அந்தமெல்லாம் பகுத்தறியப்பட்டன. அந்த மனிதர் 25 வருடங்களுக்கு முன்னரேயே சுவீடன் குடியுரிமையைப் பெற்றவர். தமது இனபந்துக்களைப் பார்க்க இலங்கை வந்திருந்தார். இறுதியில் அவர் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டார். இவர் வியாழன் அதிகாலை செக். விமானத்தில் பயணமாகக் குண்டுகளோடு வருகிறாரென்று சுவீடனிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அவரது எதிரிகளான சில தமிழர்கள் அனுப்பி வைத்த அநாமதேயக் கடிதம் கொழும்புக்கு இரகசியத் தகவலாக வந்து ஏற்படுத்திய கிலியே இது. ●

## வவுனியாவிலும் நீதிக்கு மிரட்டல்! 'வன்னியன் படை' பற்றி மக்கள் புகார்

'புதிய வன்னியன் படை' என்ற பெயரில் கடந்த புதன்கிழமை வவுனியா நகரில் படுகொலை அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் குறித்துப் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. சமூக விரோதச் செயல்களென்று இந்த அநாமதேயங்கள் கூறும் விடயங்களில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை விதிக்கப்படுமென்று அப் பிரசுரத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதாவது கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு ஆகிய செயல்களில் ஈடுபடுவோருக்கும் தமிழீழத்துக்கு எதிராகச் செயற்படுவோருக்கும் அப்படிச் செயற்படுபவர்களுக்கு ஆதரவு காட்டுவோருக்கும் மரணதண்டனை விதிக்கப்படுமென்றும் அப் பிரசுரத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்குப் பொலிஸ் நிலையங்களும் நீதிமன்றங்களும் இயங்குகின்றன. இந்த நிலையில் சட்டத்தையும் ஒழுங்கையும் தமது கைகளில் எடுத்துக்கொண்டு சட்ட ரீதியான நீதிமன்றங்களுக்குப் புறம்பாக காட்டுத் தர்பார் பாணியில் தண்டனை வழங்க முன்வருபவர்கள் யாரென்பதை இரகசியப் பொலிஸார் கண்டறிய வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 'சங்கிலியன்', 'எல்லாளன்' என்ற குறுநில மன்னர்களின் பெயர்களில் இயங்கும் கொலைப் படைகள், கொலை செய்யப்படுபவர்களின் கைகளைப் பின்புறம் கட்டிவிட்டு, கத்தியால் குத்திக் குதறிக் கொலை செய்கிறார்கள். நீதித்துறையினரும் பொலிஸாரும் இது குறித்துக் கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்று வவுனியா வாழ் பிரமுகர்கள் சிலர் கூட்டாகக் கையெழுத்திட்டுப் பொலிஸ் தலைமையகத்துக்கு அனுப்பி வைத்துள்ள முறைப்பாட்டில் கேட்டுள்ளனரென்று பொலிஸ் தலைமையகப் பேச்சாளரொருவர் கூறினார்.

## தரவையில் தாக்குதல்

கடந்த 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுக்குச் சற்று முன்னர் இரவு 11.10 மணியளவில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தரவைப் பகுதியில் நுழைந்த கருணா அணியினர், பிரபா அணியினர் மீது திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர். மேற்படி தாக்குதல் சுமார் 20 நிமிட நேரம் இடைவிடாமல் தொடர்ந்தது. தரவைப் பகுதியில் உள்ள பெண்டுகள்சேனையிலேயே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புலிகள் சற்றும் எதிர்பாராத விதத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர் உட்பட மூன்று பேர் ஸ்தலத்திலேயே பலியானார்கள். சுமார் பேர் கயமடைந்து வாழைச்சேனை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் . புலிகளின் முகாமிலிருந்த உழவு இயந்திரங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முகாமும் கருணா அணியினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. கருணா அணியினர் வாகனங்கள் சகிதம் வந்து தாக்குதல்களை நடத்திவிட்டு தொப்பிகல காட்டிற்கூடாகவே திரும்பிச் சென்றுள்ளனர். ●

## அசம்பாவிதங்கள் கண்டு ஆழ்ந்த கவலை கொள்கிறோம்!

*— ஈ.பி.டி.பி.*

"தென்னிலங்கையின் சில பகுதிகளில் வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த தனி நபர்களுக்கு இடையில் எழும் கருத்து முரண்பாடுகள் வாய்த் தர்க்கங்களாக மாறி மோதல் சம்பவங்களாக உருப்பெறும் ஆபத்து தொடர்வது கண்டு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். அதேவேளை, நுவரெலியாவின் கந்தப்பொல பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதம் முதல் களுத்துறையில் மில்லகந்த தோட்டப் பகுதியில் நடந்து முடிந்த வன்செயல்கள் வரை அனைத்துக்கும் இனவாதச் சாயம் பூசி தமிழினத்தின் மீதான திட்டமிட்ட தாக்குதல்களாகக் காட்டும் சுயநலவாத அரசியல் சக்திகளின் செயற்பாடுகளையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்" என்று ஈ.பி.டி.பி. விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் புலிகளின் அராஜகங்களுக்கு மத்தியில் தொடர்ந்து வாழ முடியாத இக்கட்டான நிலையில் பெருமளவு தமிழ் மக்கள் தென்பகுதியில் வாழ முற்பட்டு வருகின்றனர். இவ்வாறு வாழ முற்படுபவர்களின் எண்ணத்தைச் சீர்குலைத்து தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பில்லை எனக் காட்டும் திட்டமிட்ட இலக்கோடு சாதாரண தமிழ் மக்களை வன்முறைகளுக்குப் பலியாக்க சுயநலம் மிக்க தமிழ் அரசியல்வாதிகள் முயற்சி எடுத்து வருகின்றனர். வன்னிக்கு அடிக்கடி காவடி தூக்கிச் செல்லும் இத்தகைய அரசியல்வாதிகள் ஆங்காங்கே இடம்பெறுகின்ற அசம்பாவிதங்களை தமது பிரசாரப் பொருளாக்கி வருகின்றனர்.

இதேவேளை, அசம்பாவிதங்களால் பாதிக்கப்படும் மக்கள் மீண்டும் கண்ணீரும் கம்பலையுமாக அவல வாழ்வுக்கு உள்ளாகும் நிர்ப்பந்தம் ஏற்படுவது கண்டு மிகவும் கவலை அடைகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ●

## பனம்பண்ணைகளை உருவாக்க அபிவிருத்திச் சபை திட்டம்

யாழ்ப்பாணத்தில் பனை வளம் நிறைய உள்ளபோதிலும் பனந்தொழில் அபிவிருத்தி தொடர்பான ஆய்வை யாழ். பல்கலைக்கழகம் இதுவரை மேற்கொள்ளவில்லையென்பது வேதனைக்குரியதெனப் பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவர் எஸ்.சிவதாசன் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார். யாழ்.பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு முப்பது வருடங்கள் கடந்துவிட்ட இந்த நிலையிலும், யாழ். பல்கலைக்கழகம் இவ்வாறான ஆய்வுகளை மேற்கொள்ள முன்வராமை துரதிர்ஷ்டவசமானது என்றும் அவர் சொன்னார். பனை வளத்துக்கென ஒரு அபிவிருத்திச் சபை உள்ளபோதும் அது பனை சம்பந்தப்பட்ட சட்டவாக்கத்தின் கீழ் செயற்படவில்லை. தென்னை சம்பந்தப்பட்ட சட்டவாக்கத்தின் கீழேயே செயற்பட்டு வருகிறது. எனவே, பனைக்கெனப் புதிய சட்டவாக்கம் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

போர்ச் சூழலின் காரணமாகப் பல்லாயிரக் கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. பனை மரத்தையே நம்பி வாழும் இலட்சக்கணக்கான குடும்பங்கள் இங்கே உள்ளன. பனை மரங்கள் பத்து, பதினைந்து வருடங்களில் வளர்ந்து பலன் தரக்கூடியவை. இதனால் பனை மரப் பண்ணைகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். இதற்கிடையே ஊடுபயிராக ஐந்து வருடங்களில் பலன் தரக்கூடிய மரமுந்திரிகையைப் பயிர் செய்யலாம். பனை அபிவிருத்திச் சபையும், மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனமும் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சின் கீழேயே இயங்குகின்றன என்றும் அவர் சொன்னார். சபைத் தலைவர் பல இடங்களுக்கும் விஜயம் செய்து பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டார். ●

# முரசம்

## நிரந்தரத் தீர்வும் இடைக்காலத் தீர்வும்

**அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.**

புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின் தற்போது இடைநிறுத்தப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடருவதற்கான நம்பிக்கைகள் வெளிவந்திருந்தன. ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான தனது விருப்பத்தை வெளியிட்டதுடன் இது தொடர்பாக ஏற்பாடுகளைச் செய்யும்படி நோர்வே ஏற்பாட்டாளர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார். கடந்த அரசாங்க காலத்தில் ஜனாதிபதி சில அமைச்சுப் பொறுப்புகளைக் கையேற்றதை அடுத்து ஏற்பட்டிருந்த புதிய சூழ்நிலையில், தம்மால் மத்தியஸ்த செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதெனக் கூறித் தற்காலிகமாகப் பின்வாங்கிருந்த நோர்வே, ஜனாதிபதியின் தற்போதைய அழைப்பை ஏற்று மீண்டும் ஏற்பாட்டாளராகச் செயற்படுவதற்கு முன்வந்திருந்தது. புதிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் புலிகளுடனான பேச்சுவார்த்தையை ஏற்றுக்கொள்கின்றனவா? என்று சில தரப்பினர் கூறிவந்த சந்தேகம் நீங்கி, அரசாங்கம் புலிகளுடன் பேசுவதற்கு முன்வந்தது. இதன்போது புலிகள் தரப்பில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு ஜனாதிபதி இணங்கியிருந்தார். புலிகளைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகக் கொண்டு அவர்களுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தவும், புலிகள் கோரியபடி வெளிநாடுகளில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவும், புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்தவும் இணங்கியிருந்தார். அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்த புலிகளின் பிரதிநிதிகளாகச் செயலாற்றும் தமிழரசுக் கட்சியினர் ஜனாதிபதியின் கருத்துக்கள் குறித்துத் திருப்தி வெளியிட்டிருந்தனர். ஜனாதிபதியைப் பொறுத்தவரை புலிகள் கோரும் இடைக்கால நிர்வாக அதிகாரசபை பற்றிப் பேச்சுக்களை மேற்கொள்வதற்கு இணங்குகின்ற அதே நேரத்தில், நிரந்தரத் தீர்வு குறித்த பேச்சுக்களையும் ஆரம்பிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். இதனைத் தமிழரசுக் கட்சியினர் கொள்கை அடிப்படையில் நிராகரிக்காவிட்டாலும் இடைக்கால நிர்வாக சபைக்குப் பின்னர் நிரந்தரத் தீர்வு பற்றிய பேச்சுவார்த்தை என்று ஒழுங்கு வரிசைப்படுத்தி மாற்றி அமைக்க விரும்பினர். எனினும் ஜனாதிபதி குறிப்பிடும் நிரந்தரத் தீர்வு பற்றிய பேச்சுவார்த்தையின் முக்கியத்துவம் இவர்களால் சரிவர உணரப்படவில்லை. நிரந்தரத் தீர்வைத் தவிர்த்து இடைக்கால நிர்வாக சபையை மட்டுமே முதன்மைப்படுத்துவது அர்த்தமுடையதா என்ற கேள்வி உள்ளது. இடைக்கால நிர்வாக சபைக்குப் பின்னரே நிரந்தரத் தீர்வைப் பற்றிப் பேச வேண்டும் என்ற வாதத்திற்கு அடிப்படையான நியாயங்கள் என்ன என்று இவர்களால் தெளிவாகக் கூறக் கூடியதாக இல்லை. வெறுமனே நிரந்தரத் தீர்வு பற்றிப் பேசினால் இடைக்காலத் தீர்வு கிடைக்காது போய்விடும் என்ற அச்ச உணர்வை மட்டுமே காரணமாகக் காட்டுகிறார்கள். ஆனால், இடைக்காலத் தீர்வுடன் சேர்ந்து நிரந்தரத் தீர்வு பற்றியும் பேசுவதில் இந்த அச்சம் எழ நியாயமில்லை. புலிகள் கோரும் இடைக்காலத் தீர்வை வழங்குவதற்கும் அரசியல் யாப்பு மாற்றப்பட வேண்டியது தவிர்க்க முடியாதது. எனவே, அதற்காக அரசியல் யாப்பு மாற்றப்பட முடியுமானால் அதே யாப்பு மாற்றத்தின் மூலம் நிரந்தரத் தீர்வுக்கான வழிவகைகளையும் ஏற்படுத்திக்கொள்ள முடியுமல்லவா? அதற்கு நிரந்தரத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையும் சமகாலத்தில் முன்னெடுக்கப்படுவது அவசியமல்லவா!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

நரன்

# அரசியலுக்குள் மதவாதம் மதவாதத்துக்குள் அரசியல்

இலங்கையின் தற்போதைய பாராளுமன்றத்தில் ஒரு புதிய நிகழ்வு நிகழ்ந்துள்ளது. அதுதான் பிக்குகளின் பிரவேசம். மதத் தலைவர்கள் மதத்தை முன்வைத்து ஒரு அணியாகப் பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்திருப்பது இலங்கை வரலாற்றில் இதுவே முதற் தடவை.

கடந்த காலத்தில் சிஹல உறுமய என்று சிங்கள தேசியவாதத்தை முன்னிறுத்தி இயங்கி வந்த கட்சியானது அடுத்தடுத்த தேர்தல்களில் அதிக முன்னேற்றங்களைப் பெற முடியாத நிலையில் துவண்டுபோய் நின்ற வேளையில் அவ்வணி தனது பழைய சிங்களத் தோலைக் கழற்றிக் கொண்டு ஜாதிக ஹெல உறுமய என்ற பௌத்த தோலைப் போர்த்திய பிக்குகளின் அணியாக உருமாறிக் கொண்டது. இவ்வுரு மாற்றம் ஏதோ ஓரளவில் தேர்தல் ரீதியில் அதற்கு முன்னேற்றமாகவே அமைந்திருந்தது. அதனால் இம்முறை அவர்கள் ஒன்பது ஆசனங்களுடன் பாராளுமன்றத்திற்கு வருகை தந்துள்ளார்கள்.

பௌத்த மத குருக்களின் வருகையானது பௌத்த மதம் கூறும் அமைதியையும் சாந்தியையும் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவந்துள்ளதாவென்றால் அதுதான் இல்லை. மாறாக அவர்களின் வருகையின் ஆரம்பமே பாரிய சர்ச்சையாக, பெரும் குடுமிப் பிடிச் சண்டையாக அமைந்துவிட்டது.

பாராளுமன்றத்தின் முதலாவது நாள் அமர்விலேயே இந்த ஒருமித்த பௌத்த பிக்குகளின் அணி மூன்று நிலைப்பாடுகளில் பிளவுற்று நின்றது. சபாநாயகர் தெரிவில் சிலர் ஆளுங் கட்சி வேட்பாளருக்கு வாக்களித்தும் இன்னும் சிலர் எதிர்க் கட்சி வேட்பாளருக்கு வாக்களித்தும் மற்றைய சிலர் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமலும் இருந்தனர். ஆக மொத்தத்தில் மக்களுக்கு புத்த தர்மப்படி பாராளுமன்றத்தில் வழிகாட்டல்களை வழங்கப் போவதாகக் கூறிப் பாராளுமன்றம் வந்த இந்த ஒன்பது பிக்குகளுக்கிடையே கூட ஒருமித்த கருத்தோ ஒற்றுமையோ இல்லையென்பது முதல் நாளிலேயே வெளிப்படையாகியது.

இதன் தொடர்ச்சி அடுத்தடுத்த பாராளுமன்ற அமர்வுகளில் மேலும் சர்ச்சைகளைத் தோற்றுவிப்பதாக அமைந்தது. சபாநாயகர் தெரிவின்போது தன் இஷ்டப்படி வாக்களித்ததாகக் கூறப்பட்ட பிக்குவான ரட்ண சீகர தேரர் என்பவர் மீது பாராளுமன்றத்திலிருந்து இராஜினாமாச் செய்யும்படி அழுத்தம் செலுத்தப்பட்டது. இவரது முறைப்பாட்டின்படி, தான் வசித்த விகாரையில் வைத்து தன்னை ஒரு சில பிக்குகள் தாக்கி, பாராளுமன்றத்திலிருந்து இராஜினாமாச் செய்யும்படி மிரட்டி அச்சுறுத்தியதனாலேயே தான் இவ்வாறு இராஜினாமாச் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டதாகத் தெரிவித்திருந்தார். இவர் இராஜினாமாச் செய்ததையடுத்து ஜாதிக ஹெல உறுமய கட்சியின் வேட்பாளர் பட்டியலில் அடுத்ததாக இருந்த அக்மீமன தயாரத்ன தேரர் மே 19ஆம் திகதி இவரது இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. ஆயினும், இவ் வழக்கை விசாரித்த நீதிமன்றம் புதிய பாராளுமன்ற உறுப்பினராக அக்மீமன தயாரத்ன தேரர் சத்தியப்பிரமாணம் செய்வதற்கு இடைக்காலத் தடையுத்தரவு வழங்கியிருந்தது.

இதுவே கடந்த பாராளுமன்றக் கூட்டத் தொடரில் பாரிய அமளிதுமளியாக வெடித்தது. இத் தடையுத்தரவை மீறி சபாநாயகர் அக்மீமன தயாரத்ன தேரரை சத்தியப்பிரமாணம் செய்யும்படி அழைத்தார். அதை ஆளுங் கட்சி ஆட்சேபித்து நீதிமன்றத்தால் தடையுத்தரவு விதிக்கப்பட்டுள்ளதெனச் சுட்டிக்காட்டியது. ஆனால், சபாநாயகரோ அத்தகைய அறிவித்தல் எதுவும் தனது கைக்குக் கிடைக்கவில்லையெனத் தெரிவித்து, ஆளுங் கட்சியின் ஆட்சேபனையை நிராகரித்து, அக்மீமன தயாரத்ன தேரரை சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும்படி கூறினார். சத்தியப்பிரமாணம் செய்வதற்காக அக்மீமன தயாரத்ன தேரர் சபாநாயகரின் இருக்கையை நோக்கி எழுந்து சென்றபோது ஆளுங் கட்சித் தரப்பினர் குறுக்கிட்டு அவரை வழிமறித்து அமளிதுமளிப்படுத்தினர். பாராளுமன்றமே பெரும் சந்தைக் கடையாகக் காட்சியளித்தது. இதற்கிடையில் பாராளுமன்றத்தின் செங்கோல் காணாமல் போனது. செங்கோல் அற்ற நிலையில் சத்தியப்பிரமாணம் செய்வது சம்பிரதாயத்துக்கு முரணானதென ஆளுந் தரப்பினர் குரல் எழுப்பினர். இருந்தபோதிலும் செங்கோல் இல்லாமலேயே சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும்படி கூறி சபாநாயகர் அக்மீமன தயாரத்ன தேரரின் சத்தியப்பிரமாணத்தை ஏற்றுக்கொண்டார்.

இங்கே பாராளுமன்றத்தில் நிகழ்ந்த குழப்பமானது ஒரு தொடர் நிகழ்ச்சியாக நிகழ்ந்த ஒன்று. இதில் ஒரு சம்பவத்தை மட்டும் எடுத்து நோக்கி சரி பிழையை ஆராய்வது பொருந்தாதது. ஒரு பிழை இன்னொரு பிழைக்கு வழி விட்டதனால் ஈற்றில் நிகழ்ந்த பிழையை மட்டும் பிழையெனப் பார்ப்பது பிழையானது.

செங்கோல் மறைக்கப்பட்டது பாராளுமன்றத்தைக் கேலிக்கூத்தாக்கும் விடயமே. இவ்வாறான நிகழ்வுகள் பாராளுமன்றத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கையும் மதிப்பும் இல்லாத நிலைமையைத் தோற்றுவித்துவிடும். ஆனால், அதேவேளை நீதிமன்றத்தால் தடையுத்தரவு வழங்கப்பட்டிருக்கும் ஒரு விடயத்தை சபாநாயகர் அலட்சியப்படுத்தி நீதிமன்றத் தீர்ப்புக்கு முரணாகச் சத்தியப்பிரமாணத்தைச் செய்ய வைத்தது நீதிமன்றத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் இடையே இருக்க வேண்டிய



புரிந்துணர்வைச் சிதைத்துவிடும். அத்தோடு நீதிமன்றத் தீர்ப்புக்களின் சட்ட அந்தஸ்தையும் சிதைத்துவிடுவதுடன் மக்களுக்கும், நீதிமன்றம் பற்றிய பயபக்தியையும் அற்றுப் போகச் செய்துவிடும். பாராளுமன்றம் நீதிமன்றத்தினை மேவுகின்ற எதேச்சாதிகார அமைப்பு எனச் சித்திரித்துவிடும்.

நீதிமன்றத்தின் சட்ட ரீதியான வாதங்களின் மூலம் காணப்படுகின்ற ஒரு முடிவைப் பாராளுமன்றத்தின் சபாநாயகர் மாற்றியமைக்க முடியுமாக இருப்பின் அது பாரிய கேள்விக்குரிய விடயமாகும். சபாநாயகரின் முடிவு சட்ட விவாதங்களால் ஈட்டப்படுகின்ற ஒன்றல்ல.

ஆனால், இங்கே சபாநாயகர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தனது கைக்குக் கிடைக்கவில்லை என்ற காரணத்தைக் கூறி, இவ்வாறு செயற்பட்டுள்ளார். ஆனால், ஒரு நாட்டின்

**பௌத்த மத குருக்களின் வருகையானது பௌத்த மதம் கூறும் அமைதியையும் சாந்தியையும் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவந்துள்ளதாவென்றால் அதுதான் இல்லை. மாறாக அவர்களின் வருகையின் ஆரம்பமே பாரிய சர்ச்சையாக, பெரும் குடுமிப் பிடிச் சண்டையாக அமைந்துவிட்டது.**

நீதிமன்றத் தீர்ப்பு இத்தனை அலட்சியமாகக் கையாளப்படலாமா? நீதிமன்றம் என்ன வேறு நாடொன்றிலா இருக்கிறது? அதன் தீர்ப்பை அறிந்துகொள்ள சபாநாயகர் விரும்பினால் ஒரு தொலைபேசி அழைப்பில் உறுதிப்படுத்திக்கொண்டிருக்கலாமல்லவா? இத் தீர்ப்பானது பாராளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதென ஆளுங் கட்சியால் தெரிவிக்கப்பட்டும் கூட, குறைந்தது பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடமாவது விசாரித்திருக்க முடியாதா? இத்தனைக்கும் இவ்வாறான தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தி பாராளுமன்றம் கூடுவதற்கு முன்னரே ஊடகங்களில் வெளிவந்தும் இருந்தது. சபாநாயகர் இதனை அறிந்திருக்க முடியாதென்று கூறுவதற்கு நியாயமில்லை.

உண்மையில் விருப்பு வெறுப்புகளுக்கப்பால் நியாயப்படி நடக்க வேண்டும் என்று நினைத்திருந்தால் அதில் சபாநாயகர் மிக நிதானமாக இத் தீர்ப்பையிட்டு ஆராய்ந்து செயற்பட்டிருக்கலாம். இங்கே அக்கறைப்பட வேண்டிய இன்னொரு விடயம் என்னவென்றால், இன்னொரு உறுப்பினருக்கு அநீதி விளைவிக்கும் வகையில் இத்தகைய முடிவுகள் அமைந்துவிடுமென்பதுதான்.

அதாவது அக்மீமன தயானந்த தேரரின் சத்தியப்பிரமாணத்தை ஒத்திவைப்பதால், பாரிய பாதகமொன்றும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. அவர் சத்தியப்பிரமாணம் செய்வதற்குத் தடையில்லையெனத் தெளிவாக்கிக்கொண்ட பின் அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளது. ஆனால், மாறாக இவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டால் நீதிமன்றத்தில் தனது இராஜினாமாவை மிரட்டல் காரணமாக நிகழ்ந்ததெனக் கூறி வழக்குத் தாக்கல் செய்துள்ள ரட்ணசீகர தேரரின் குற்றச்சாட்டு ஒருவேளை உண்மையெனக் காணப்பட்டாலும் கூட அவர் பதவி பறிபோனவராகிவிடுவார். எனவே, ஒருவருக்கு அநீதி நிகழாதிருப்பதற்காக சற்று ஆராய்ந்தபின் இன்னொருவரை சத்தியப்பிரமாணம் செய்ய அனுமதிப்பதா எனத் தீர்மானிப்பதில் தப்பேதுமில்லை. அதுவே பொறுப்பு வாய்ந்த ஒரு நாட்டின் வழிகாட்டியாக அமைய வேண்டிய சபாநாயகருக்கு உகந்தது.

மத போதகர்களின் அரசியல் பிரவேசமானது எடுத்த எடுப்பிலேயே பெரும் பரபரப்பான சர்ச்சைகளுக்கேதான் வழி விட்டுள்ளது. இது அவர்களுக்கிடையேயும் பிளவுகளையும் ஒருவர் மீதொருவர் குண்டர்கள் போல் தாக்குதல்கள் நிகழ்த்தவும் அச்சுறுத்தவும், ஒருவருக்கெதிராக ஒருவர் நீதிமன்றம் செல்லவும், ஒருவரின் பதவியை மற்றவர் பறிக்கவும் என்ற விதமாக சீர்கேடானதாக ஆகிப்போனது.

பௌத்த தர்மத்தின் ஸ்தாபகரான புத்தபெருமான் காட்டிய வழியா இது? புத்தரோ பெரும் அரச வம்சத்தின் வழிவந்த ஒரு சக்கரவர்த்தியின் மகன். அவர் அரசியலினூடாகப் புத்த தர்மத்தைப் பரப்பலாமென நினைத்திருந்தால் காவி உடுத்து, போதி மரம் தேடி வந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அரியாசனத்தில் இருந்தபடியே தனது பண பலத்தையும், படை பலத்தையும், செல்வாக்கையும், இதர வசதிகளையும் பயன்படுத்தி தனது மதக் கொள்கைகளைப் பரப்பியிருக்க முடியும். ஆனால், அந்த வகையில் மதத்தை முன்னெடுப்பது தகாது எனக் கருதியதாலேயே அரச போகங்களை அடியோடு துறந்து, காவி தரித்து, பிச்சாபாத்திரம் ஏந்தி, போதிமரத்தடியில் அமர்ந்து போதனை செய்தார். தன்னைப் பின்பற்றும் மத குருக்களையும் அவ்வாறே நடந்துகொள்ளும்படி அறிவுறுத்தி அதற்கான ஒரு மார்க்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தார்.

ஆனால், அந்த மார்க்கத்தில் நம்பிக்கை இழந்ததாலோ என்னவோ இங்கே புத்த பிக்குகள் மீண்டும் படியேறி அரசாட்சியில் பங்கெடுக்க முனைகின்றனர். இவர்களின் தேர்தல் பிரசாரங்களுக்குப் பல கோடிக்கணக்கான பணம் எங்கிருந்து வந்ததென்றே தெரியவில்லை. மதம் அரசியலில் தலையிடுமாக இருந்தால் அது பெரும் குழப்பங்களுக்கு வழிகோலிவிடும் என்பதற்குப் பல உதாரணங்கள் உண்டு. இந்தியாவில் அண்மையில் நிகழ்ந்த குஜராத் மதக் கலவரம் மிகக் கிட்டிய உதாரணம். அது முன்னைய இந்திய அரசாங்கத்தையே ஆட்சி கவிழ்க்க ஒரு காரணமாக அமைந்தது. இதனை எண்ணியே முன்னாள் பிரதமர் வாஜ்பாய் இப்போது குஜராத் முதலமைச்சர் பதவி விலக வேண்டுமெனக் கூறியிருக்கிறார். இது கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரமாகவே இருந்தாலும் அதை உணர்ந்து கொண்டதே மெச்சத் தக்க விடயம். காந்தியின் படுகொலை கூட அரசியலில் நுழைந்த மதவாதத்தின் ஓர் விளைவே. நம் நாட்டிலும் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க படுகொலையும் ஒரு புத்த பிக்குவாலேயே நிகழ்ந்ததென்பது எண்ணிப் பார்க்க வேண்டிய பாடம். மதத்தினுள் அரசியலைக் கலப்பதோ, அரசியலில் மதவாதத்தைப் புகுத்துவதோ அழிவுகரமான விளைவுகளுக்கே இட்டுச் செல்லும் என்ற உண்மையை நாம் காலம் கடக்கு முன்னர் உணர்ந்துகொள்வது அவசியம். ●

# எதிரணிகளின் ஏட்டிக்குப் போட்டி

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசு பதவியேற்று இரு மாத காலங்கள் நிறைவடைந்துவிட்ட போதிலும், பெரும்பான்மையை ஏற்படுத்திக்கொள்ள முடியவில்லை. இது பாராளுமன்ற எதிர்க்கட்சி ஆசனத் தரப்பில் முன்வரிசை உட்பட கடைசி வரையான உறுப்பினர்கள் வரை பலத்த விமர்சனங்களை தோற்றுவித்துள்ளது. ஒருவகையில் ஜனநாயக ரீதியான இவ்வாறான செயற்பாடுகள் வரவேற்கக்கூடியவை. ஏனெனில், ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலும் சரி,




ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியாக இருந்தாலும் சரி, தற்போதைய இலங்கை பாராளுமன்ற சட்டவிதிகளின்படி 225 மொத்த ஆசனங்களில் குறைந்தது 113 ஆசனங்களை அரசமைப்பதற்கான அங்கீகாரமாகப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். தற்சமயம் ஐ.ம.சு.கூட்டணி அரசு 106 ஆசனங்களை மட்டுமே கொண்ட அரசாக உள்ளது. பெரும்பான்மையை நிரூப்பிப்பதற்காக இதர கட்சிகளான இ.தொ.காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளோடு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தபோதும் அது பலனளிக்கவில்லை. மறுபுறத்தில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு தன்னால் ஆன முயற்சியை மேற்கொண்டால் தமது அரசிற்கு ஆதரவாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு தரக்கூடும் எனவும் இவ்வரசாங்கம் எண்ணியிருக்கவும் வாய்ப்புகள் உள்ளன. இந்த இழுபறி நிலைக்குள் ஐ.ம.சு.கூட்டணி அரசு பல சிக்கல்களுக்குள் மாட்டியிருக்கிறது. இ.தொ.காங்கிரஸைப் பொறுத்தவரை மாகாணசபைத் தேர்தல்கள் முடிவுற்ற பிறகு அரசுக்கு ஆதரவளிக்கலாமென பெரும்பாலும் எதிர்பார்க்கப்படுகிறது. மறுபுறத்தே, எதிர்க்கட்சிகளைக் கூட்டமைத்து தற்போதைய அரசாங்கத்தை வீழ்த்துகின்ற எண்ணம் தமக்கு இல்லையென தெரிவித்துக்கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சி, அதற்காகவே மனப்போராட்டம் நடத்திவருவதை புரிந்துகொள்ள முடிகிறது. மூன்றாவது தடவையாக புதிய அரசாங்கத்தின் பாராளுமன்றம் கூடியபோது, ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர் பதவியேற்ற வேளை பாராளுமன்றத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் அருவருக்கத்தக்கவை. இச் சம்பவமானது பாராளுமன்றம் குறித்தும், பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் குறித்தும் சாதாரண மக்களிடையே இருந்து வந்த மதிப்பையும், மரியாதையையும் கேள்விக்குள்ளாக்கியது. இதற்குப் பிறகு, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில்




எதிர்க்கட்சிகளின் கூட்டுக் கூட்டம் கூடியது. அப்போது அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை சபாநாயகருக்கு 119 உறுப்பினர்களின் ஆதரவோடு சமர்ப்பிக்கவுள்ளதாக முடிவாகியது. மேற்படி கூட்டம் முடிவுற்று செய்தியாளர்களைச் சந்தித்த ஒவ்வொரு எதிர்க்கட்சி உறுப்பினரும் தெரிவித்த கருத்துக்கள் நகைப்புக்குரியதாக அமைந்தன. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கருத்துத் தெரிவிக்கையில் பாராளுமன்றத்தில் ஜனநாயக செயற்பாடுகளை உறுதி செய்வதற்காகவும், எதிர்க்கட்சி பா.உ.களின் கௌரவத்தைப் பாதுகாக்கின்ற நடவடிக்கையாகவும் எதிர்காலத்தில் எடுக்கக்கூடிய திட்டங்கள் குறித்தும் பேசியதாகத் தெரிவிக்கப்பட்டது. ஜாதிக ஹெலஉறுமய சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்து, மேற்படிச் சந்திப்பானது தற்போதைய அரசாங்கத்தை வீழ்த்துவதற்காகவோ, எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியோடு சேர்ந்துகொள்வதற்கோ அல்லாமல் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக பலம் சேர்க்கும் நடவடிக்கையாகும் என்று தெரிவிக்கப்பட்டது. இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்தில் ஜாதிக ஹெல உறுப்பினர்கள் தாக்கப்பட்டதற்கு எதிராகவும், எதிர்க்கட்சிகளின் ஜனநாயக செயற்பாடுகளுக்காகவும் இக்கூட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டது. இதில் குறிப்பிடவேண்டிய மற்றுமொரு விடயம், தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை அது தெரிவு செய்யப்பட்ட விதமும், அதன் அரசியல் வேலைத் திட்டங்களும் அது தன் எதிர்க்கட்சி குறித்த எண்ணப்பாடுகள் கொண்ட விதமும் ஜனநாயகத்தையோ மனிதக் கௌரவத்தையோ கொண்டமைந்ததில்லை என்பது வேறுவிடயம். மு.கா.வின் கருத்தில் தனிப்பட்ட விரோத எதிர்ப்பாக இருந்ததையே பெரிதும் அவதானிக்க முடிந்தது. இ.தொ.கா.வைப் பொறுத்தவரை வலுவான கருத்துக்கள் எதையும் கொண்டிருக்காமல் தற்சமயத்துக்கு எதிர்க்கட்சி என்ற வகையில் கூட்டுக் கூட்டத்தில் கலந்து கொண்டதாக இருந்தது. ஆக, இவ்வாறாக எதிர்க்கட்சிகள் எவையுமே அடிப்படையில் கடுகளவு இணக்கப்பாடுகள்கூட இல்லாமல் வெறுமனே அரச எதிர்ப்பு சம்பவங்கள் குறித்த அறிக்கை என்பவற்றில் மட்டுமே கூட்டுச் சேர்ந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. இது மக்களுக்குக் குழப்பம் என்பது ஒருபுறம். மேற்படி கட்சிகளுக்குள்ளும் குழப்பம் என்பதுதான் கவலை. எது எப்படியிருப்பினும், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம் தனது பெரும்பான்மையை நிரூப்பிப்பதிலும், சமாதானத்தை முன்னெடுப்பதில் தடையாக இருக்கக்கூடிய காரணங்களை இல்லாமல் செய்து சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதிலும் அதிக அக்கறை காட்ட வேண்டிய தேவை

**தமிழர்களாகிய நாம் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆட்சியில் இருக்கின்ற கட்சியை எதிர்ப்பதும், விமர்சிப்பதும் அடுத்த தடவை எதிர்க்கட்சி மீது நம்பிக்கை கொள்வதும், குறித்த எதிர்க்கட்சி மறுமுறை ஆட்சிபீடமேறும்போது மீண்டும் அதை எதிர்ப்பதும், விமர்சிப்பதும் வரலாறாகிவிட்டுள்ளது.**



ஏற்பட்டுள்ளது என்பதை புரிந்துகொள்ள முடிகிறது. தற்போதைய அரசாங்கத்தில் மக்கள் விடுதலை முன்னணி பங்கேற்றிருப்பதால் அதன் மீது சேறுபூசி அக் கட்சியை சமாதானத்திற்கு எதிரானதென அடையாளப்படுத்தி மக்கள் மனங்களில் எதிர்ப்பு அலையை உருவாக்குவதில் சிங்களக் கட்சிகள் உட்பட தமிழ்க் கட்சிகளும் முனைப்புக் காட்டுவது எதற்கான தந்திரோபாய நடவடிக்கை என்பது புரியவில்லை. அரசாங்கத்தை விமர்ச்சிப்பவர்கள் என்ற வகையில் தமிழரசுக் கட்சியோடு பேசவும், தேவை ஏற்பட்டால் புலிகளுடன் பேசவும் தயாராக இருப்பதாக ஜாதிக ஹெலஉறுமய தெரிவித்துள்ளது. இதே ஜாதிகஹெல உறுமய புலிகளுக்கு இடைக்கால நிர்வாக சபை வழங்கப்படுமாக இருந்தால் அதற்கெதிராக இலட்சம் பேரை திரட்டி எதிர்ப்புத் தெரிவிக்கவும் தாம் தயாராக இருப்பதாக ஜாதிகஹெலவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துருலிய ரத்தினதேரர் தெரிவித்திருக்கிறார். மறுபுறத்தில் வட - கிழக்கின் இடைக்கால நிர்வாக சபை தமிழீழத்தின் அடிப்படையென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்திருக்கிறது. இப்படியான ஜாதிகஹெலஉறுமயவுக்குத்தான் தமிழரசுக் கட்சியின் ஆதரவும், ஆலோசனையும் தொடர்ந்து வழங்கப்படப் போகிறதா அல்லது அரசுக்கு ஆதரவு வழங்குவதற்கான நிபந்தனையாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதும், அழிந்த வட-கிழக்கு மாகாணத்தை புனரமைப்பதுமான வேலைத்திட்டங்கள் குறித்து சந்திரிகா அரசோடு அனுகுமுறைகளை வகுத்துக்கொள்ளுவதா என்பது குறித்து சிந்திப்பது நல்லது. தமிழர்கள் விரும்புகிறார்களோ இல்லையோ இலங்கையின் மத்திய அரசில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி, பொ.ஐ.முன்னணி, ஐ.தே.க., ஐக்கிய தேசிய முன்னணி இப்படி பெயர்ப் பலகைகளை அவ்வப்போது மாற்றிக்கொண்டு பெரும்பான்மையான சிங்கள அரசு அமைவது சர்வ நிச்சயம்.



தமிழர்களாகிய நாம் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆட்சியில் இருக்கின்ற கட்சியை எதிர்ப்பதும், விமர்சிப்பதும் அடுத்த தடவை எதிர்க்கட்சி மீது நம்பிக்கை கொள்வதும், குறித்த எதிர்க்கட்சி மறுமுறை ஆட்சிபீடமேறும்போது மீண்டும் அதை எதிர்ப்பதும், விமர்சிப்பதும் வரலாறாகிவிட்டுள்ளது. இந்தச் சுழற்சி முறையான அரசியல் நகர்வுகள் நமக்கு கற்றுத்தந்துள்ள பாடமானது மத்தியில் யார் என்பதை பொருட்படுத்தாமலும் பகைமையை வளர்த்துக்கொள்ளாமலும் நியாயமான அணுகுமுறைகளோடு எமது அடிப்படைப் பிரச்சினையின் தீர்வுக்காக

அலசுவது
**- மதியூகி -**

ஒருமித்த குரலில் தமிழர் அழுத்தம் கொடுப்பதேயாகும். ஒருமித்த குரல் எனும்போது வட - கிழக்கில் எவ்வகையான அராஜகங்களையும் அமுல்படுத்தி மாற்றுக் கருத்துக் கொண்டவரை இல்லாதொழித்து ஏக தெரிவாக உருவாவதில்லை. ஜனநாயகப் பண்பு, மாற்றுக் கருத்து கொண்டோர் மதிக்கப்படும் நாகரிகம், ஒவ்வொரு மனிதனும் சுயகௌரவத்தோடு, சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் உருவாக்கம் என்பவற்றை பாதுகாத்துக் கொண்டு, அதனூடாகப் பெறப்படுகின்ற மக்களாணையை மத்தியில் அரசாங்கத்தின் மீதான அழுத்தப் பிரயோகமாக ஒன்றுசேர்ப்பதேயாகும். என்ன செய்வது இலங்கையின் துரதிர்ஷ்டம் அரசியலிலும்சரி, கொலைகளிலும் சரி, ஏட்டிக்குப் போட்டியாகவே நடந்தேறுகிறதென்பதை தெரிவிக்காமலும் இருக்க முடியவில்லை. இதுவே நீடிக்குமாக இருந்தால் நாம் இறுதியில் சேரப்போகுமிடம் பாதாளமாகவே இருக்கும்.

## அதிரடி அய்யாத்துரை



எங்கட தமிழரசு எம்.பி.க்கள் ஜனாதிபதியைச் சந்திச்சவையெல்லோ, அந்தச் சந்திப்பில சந்தோஷமாயிருந்தவர் எங்கட சம்பந்தமானவர் தானாம். இதால மற்றவைக்குக் கொஞ்சம் மனக்கசப்பாம். முந்தியும் அவர் அவவோட ரொம்பக் குழைவாய் இருந்தவர். பி.ஏ அரசாங்கம் தயாரிச்ச தீர்வு யோசனைகளைச் சரியெண்டு சொல்லி ஆதரிச்சதோட நில்லாமல் அந்த யோசனை தயாரிக்கிறதிலையும் இரகசியமாய் பங்கெடுத்தவர். அதில மும்முரமாய் ஈடுபட்ட நீலனுக்கு நடந்த கதியோடு கதிகலங்கிப் போயிருந்து பிறகு 2000ஆம் ஆண்டு அரசியலமைப்பு யோசனைகள் பாராளுமன்றம் வந்தபோது மற்றைய கூட்டணி எம்.பி.க்களை மீறித் தான் மனசாட்சிப்படி நடப்பனெண்டு சொல்லி நிண்டவர். இப்ப நிலைமைகள் இடைநடுவில படுபாதாளமாகிப் போனதால வன்னி விசுவாசத்தையே தன்ர வழியாய் மாத்திக் கொண்டவர். எண்டாலும் திரும்பவும் ஜனாதிபதியைச் சந்திக்க நேர்ந்ததால "அந்தநாள்.... ஞாபகம்.... நெஞ்சிலே.... வந்ததே நண்பியே நண்பியே நண்பியே! இந்தநாள்... அன்றுபோல்... இல்லையே! அது ஏன்... ஏன்... நண்பியே...?" பாவம் சம்பந்தர். தெரிஞ்சவையைக் கண்டால் சிரிக்கவும் ஏலாத நிலைமை!

"ஆயிரம் இருந்தும் வசதிகள் இருந்தும்
நோ பீஸ் ஒப் மைண்ட்!"

**பேச்சுவார்த்தை** என்ற வார்த்தையைப் பேசிறதே பிசகாய்க் கிடக்குதுங்கோ. எங்கட ரவியான ராயர் போன ஞாயிறு அரச தொலைக் காட்சியில சொன்ன விளக்கம் படிச்சவைக்கு விளங்கும். பேச்சுவார்த்தையெண்டு சொல்லக்கையே அங்க அனைத்தையும் இரண்டு பகுதியும் ஏற்றுக்கொண்டதாய் பொருளில்லை. அப்பிடி ஏற்றுக்கொண்டால் பேச்சுவார்த்தையே தேவையில்லை. இரண்டு பகுதியும் ஏற்றதுகளை வைச்சுக்கொண்டு, ஏற்காத விசயங்கள எப்பிடி இணக்கத்துக்கு கொண்டு வரலாமெண்டு இரண்டு பேரும் விட்டுக்குடுத்துப் பேசிறதுதான் பேச்சு எண்டு அவர் சொன்னத கேட்கப் புல்லரிச்சுதுங்கோ. உண்மையில அவர் இதையே போய் வன்னியிலயும் சொன்னா இருக்கிற தடைகளைக் கடக்கச் சுகமாயிருக்கும். ஆனால் பாருங்கோ, தாங்கள் விதிச்சது அத்தனையையும் ஏற்றாக வேணுமெண்டெல்லே அந்தத் தரப்பு நிக்குது. ரவியண்ணற்ர பார்வைப்படி இதுக்குப் பேச்சுவார்த்தையெண்டு அர்த்தம் குடுக்க ஏலாதோ? என்னவோ ஆகஸ்ட் மாசத்தோட பேச்சுத் தொடங்கலாமெண்டு ரவி அண்ணை கட்டியம் கூறிப்போட்டார். கேட்டுச் சொன்னாரோ கேக்காமல் சொன்னாரோ, தெரியாது. சொன்னபடி நடக்கப் பண்ணினால் சரி.

**எனக்கெண்டால்** ஒரு பொல்லாப்பும் விளங்குதில்லையுங்கோ. இரட்டை வேடமெண்டால் என்ன? எங்கட சிவாஜி ஒம்பது வேசத்தில நடிச்சதப் பெருமையா சொல்லிக்கொள்ளுற நாங்கள் இப்ப இரட்டை வேடமெண்டு சிறுமையாச் சொல்லுற விஷயமென்ன? ஆக இடைக்கால நிர்வாகத்தைப் பற்றி பேசிறதோட முழுமையான தீர்வைப்பற்றியும் பேச வேணுமெண்டு இரண்டு விசயத்தையும் வலியுறுத்திறதுதான் இரட்டை வேஷமோ? அதில என்ன தப்பெண்டதுதான் புரியுதில்லை. அவை கேட்ட இடைக்காலம் பற்றிப் பேச இணங்கித்தானே இருக்கு? அதோட சேர்த்துத்தானே முழுத்தீர்வு பற்றின பேச்சும்? பேசிப் பாக்கெட்டன். என்ன கெட்டுது?...

**எங்கட** முஸ்லிம் தலைவர் ஊடகங்களுக்கெதிராய் நஷ்டஈடு கேட்டு நானூறு கோடி கிளைம்ப் பண்ணியிருக்கிறதா பத்திரிகைச் செய்தி சொல்லுது. இப்பிடிக் கோடிக் கணக்கில கிளைம்ப் பண்ணலாமெண்டால் ஆளுக்கொரு கிசு கிசுவைக் கிளப்பிவிட்டு அமைச்சாமாரெல்லாம் அதிலையே உழைச்சுத் தள்ளிடலாமெல்லோ! ம்.... மற்றப் பக்கத்தால ஏதோ இந்தப் பொம்புளைச் சமாச்சாரத்தில தன்னையும் மாட்டிவிட்டதாச் சொல்லி ஜனாதிபதி வேற விசாரணையை முடுக்கிவிட்டிருக்கிறா. எல்லாத்துக்கும் மேலால உண்மை என்னவெண்டுதான் சனத்துக்குப் புரியேல்லை. ஏதோ சில பேருக்கு இதுவே பிழைப்பாயும் போட்டுது. நானூறு கோடி...! அடியம்மா!

**கொஞ்ச நாளுக்கு** முந்தித்தான் ஏதோ கள்ள நோட்டுக்கள் கட்டுக்கட்டாப் பிடிபட்டத அறிஞ்சு காசையும் நம்ப ஏலாமல் தவிச்சனான். கடையில சாமான் வாங்கினால் மிச்சக் காசை வாங்கிப் பிறம்பாப் பெயரெழுதி வைச்சிருக்க வேணுமெண்டு நினைச்சனான். எங்கட நாட்டுக் காசிலதான் இந்த விளையாட்டெண்டு பாத்தால் யாரோ ஒருத்தன் டொலரடிச்சு விநியோகிச்சுப் பிடிபட்ட பேப்பர் நியூஸ் வந்துச்சுது. இப்ப சாப்பாட்டிலயும் சுத்துமாத்தாம் எண்டு செய்தி வருகுது. வெளிநாட்டிலயிருந்து இறக்குமதி செய்த சாப்பாட்டுச் சாமான்களிண்ட காலாவதியாகிற தேதிய அழிச்சு மாத்திப் போட்டு, திரும்பவும் விக்கிறாங்களாம். பழசாப்போன சாப்பாட்டைக் கள்ள நோட்டுக் குடுத்து வாங்கி வாந்தியெடுத்துச் சாகிற காலத்தில வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இறைவா!

**புத்த பிக்குகள்** பாராளுமன்றத்துக்குப் படியேறிப்போய் அரசியல் குடுமிப்பிடிச் சண்டை பிடிச்சுக்கொண்டிருக்கிற நேரத்தில, இங்கால புத்தபெருமானிண்ட உருவப் படத்தைக் கண்ட மாதிரியும் பாவிச்சு வியாபாரம் நடந்துகொண்டிருக்குது. பெண்களிண்ட உள்ளாடையிலயும் புத்தற்ற படத்தப் பிரிண்ட் பண்ணி விக்கிறாங்களெண்டு பேப்பர்களில படம் போட்டுக் காட்டுறாங்கள். ம்......பாதுகாக்க வேண்டியவை படி தாண்டிப் போயிட்டால், பாவங்களெல்லாம் குடியேறத் துடங்கிடுமெல்லோ!

மினிக் கவிதை :-
ஆடையே பாவம் - அதனால் நான்
ஆண்டவனைக்கூட நேசிப்பதில்லை.

## மலையகக் கல்வியில் அக்கறையுடன் செயற்படும் சில அரச சார்பற்ற அமைப்புக்கள்!

மலையகம் கல்வியில் உயர வேண்டும் என்பதில் மலையக அரசியல்வாதிகளுக்கு அக்கறையும் ஆர்வமும் இருக்கிறதோ இல்லையோ, பல அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இதில் நிச்சயமாக அக்கறையிருப்பது வெள்ளிடைமலை. அந்த வகையில் கடந்த 21.4.2004 முதல் 25.4.2004 வரை ஹட்டன் 'இந்து இளைஞர் பேரவை' க.பொ.த. உயர்தர வர்த்தக மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கொன்றை ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரியில் நடாத்தியது. இதில் 300 மாணவர்களுக்கு மேல் பங்குபற்றிப் பயனடைந்தார்கள். வெறும் சமய சம்பந்தமான விடயங்களில் தங்களின் பார்வையைச் செலுத்தாமல், கல்வியிலும் கவனத்தைச் செலுத்தி மாணவர்களுக்குச் சேவையாற்றி வரும் ஹட்டன் இந்து இளைஞர் பேரவை உண்மையிலேயே பாராட்டுதலுக்குரியது. அதேபோன்று மலையக மக்களின் கல்வியில் மறுமலர்ச்சியையும், ஊக்கத்தையும், உத்வேகத்தையும் அளிப்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் இலங்கை வாழ் இந்தியத் தமிழர் கல்விப் பேரவை. இந்த அமைப்பின் மூலமாக வறிய மாணவர்களின் கல்விக்கு உதவுதல், பல்கலைக் கழகங்களுக்கு அதிகளவில் மலையக மாணவர்களை அனுப்புவதற்காக செயற் திட்டங்களைத் தயாரிப்பது, மேலும் மலையக ஆசிரியர்களைக் கௌரவித்து ஊக்குவிப்பது போன்ற பல நல்ல திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தவுள்ளார்கள். ஒவ்வொரு நகரத்திலும் இலவச கருத்தரங்குகளை நடத்தி மாணவர்களின் கல்விக்கு உதவுவதும் இதன் பிரதான நோக்கமாகும்.

மலையகத்தில் வாக்குச் சேகரிப்பதை மட்டுமே தங்களின் பிரதான நோக்கமாகக் கொண்டு அள்ளிக் கொள்வதில் கிள்ளியும் கொடுக்காமல் இருக்கும் சில அரசியல்வாதிகளுக்கு மத்தியில் இப்படியான அமைப்புகள் செய்யும் சேவைகள் மகத்தானவை யாகும். மலையகக் கல்வி மான்கள், புத்திஜீவிகள், நலன் விரும்பிகள் அனைவரும் ஒன்றிணைந்து இப்படியான அமைப்புக்களை உருவாக்கிச் செயற்படுவது உண்மையிலேயே பாராட்டத் தக்க செயலாகும்.

- பாலா. சங்குபிள்ளை -

## வெலிஓயா சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் வேண்டுகோள்!

கடந்த அரசை விட தற்போது ஆட்சியில் உள்ள அரசு உண்மையாகவே கடந்த காலங்களில் பின்தங்கிய மலையக தமிழ் சமூகங்களுக்குப் பல்வேறு சேவைகளைச் செய்துள்ளமை மறைமுக உண்மை. உதாரணம் சமுர்த்தி நியமனம், கிராம சேவகர் நியமனம், மின்சாரம் போன்றவை.

ஆகவே, இன்று ஏராளமான பொதுமக்கள் தற்போதுள்ள கூட்டு முன்னணி அரசினால் மலையக சமூக முன்னேற்றத்துக்குப் பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் எனப் பெரிதும் நம்பியுள்ளார்கள்.


* தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் உயர்வு,
* இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு, சுயதொழில்,
* விவசாயிகள் சமுர்த்திக்கு விசேட ஊக்குவிப்பு,
* மலையகக் கல்வியில் வேகமான முன்னேற்றம்,
* சுகாதாரம், தண்ணீர், இவை போன்ற பல விடயங்களை மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

இத்தோடு சுகாதார அமைச்சிடம் எமது வேண்டுகோள் என்னவென்றால், சுகாதார உத்தியோகத்தர்களை மலையகத்தில் உள்ள தோட்டங்கள் தோறும் நியமிக்கத் தகுந்த ஏற்பாடுகளை விரைவில் முன்னெடுக்க வேண்டும் என்பதே. கடந்த காலங்களில் தோட்டங்கள் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் (JEDB) கையில் இருக்கும்போது தோட்ட லயன்கள் தோறும் சுத்திகரிப்பாளர்களால் நுளம்புக்காக மருந்துகள் அடிப்பது வழமை. இதனால் நுளம்புத் தொல்லைகள் இருக்காது. ஆனால், தற்போது அவ்வாறான சேவைகள் இல்லை. இவை போன்ற பல சுகாதாரப் பிரச்சினைகளுக்கு மலையகத் தொழிலாளர்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. டெங்கு காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற வியாதிகள் வரவும் காரணமாக அமைகிறது. அதனால் மாண்புமிகு சுகாதார அமைச்சரும், அமைச்சும் இணைந்து இதற்கு ஒரு நல்ல தீர்மானத்தை முன்கொண்டு வருமாறு மலையக சமூக தோட்டத் தொழிலாள மக்கள் சார்பாக அன்புடன் வேண்டுகிறது, வெலி ஓயா அபிவிருத்தி ஒன்றியம். நன்றி.

ஜே.ஜேசுதாஸ் (இயக்குநர்)
வெலி ஓயா சமூக அபிவிருத்தி ஒன்றியம்.
வெலி ஓயா, அட்டன்.


## நான் நிரூபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம்





எனக்கு இறைவன் தந்த நன்கொடை.
இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை.
முடியாத வேலைகளை முடியும் என்று பாரம் எடுப்பதில்லை.
முடியும் என்றால் முடித்துக் காட்டுவது,
அத்தோடு நிறைவேறும் திகதியையும், வாங்கும் பணத்திற்கு ரசீதையும் கொடுப்பது.

**மட்டக்களப்பு அன்பர் கூறும் கதை** — பதிவேட்டு இல : 3504

த.சபேசன், வங்கி ரோட், செங்கலடி, மட்டக்களப்பு.
ஜோதிட பேராசிரியர் அவர்களே!
இதை உங்கள் பதிவேட்டில் எழுதிவைக்க நான் ஆசைப்படுகிறேன். ஐயா! எனக்கு வயது 33, இக் காலங்களில் உங்கள் துறையில் உள்ளவர்களில், ஒவ்வொருவரிடமும் அதாவது மாந்திரீகம், ஜோதிடம் இப்படிப் பல பேரிடம் பார்த்துள்ளேன். ஒரு சில அரைகுறைத் தேர்ச்சி பெற்றவர்கள், வாயில் வந்தவைகளைக் கூறி அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்கிறார்கள். அதற்கு மாறாக, தங்கள் செயலைக் கண்டு சந்தோசம் அடைகின்றேன். என்னைப் பொறுத்தவரை ஆழம் தெரியாமல் காலை விடமாட்டேன். என்னை மன்னிக்க வேண்டும். உங்கள் அருள் ஞானத்தையும் தசாவதானியின் தன்மையையும் கண்டுகொண்டேன். தங்களிடம் ஏனோதானோ என்று பலன் கேட்க வந்த எனக்கு நடந்தது என்ன? நான் உங்கள் கதிரையில் அமர்ந்தபோது அற்புதமாக என் வாழ்க்கைச் சரித்திரத்தையும், நான் சொல்ல வந்த காரியத்தையும், செய்ய வந்த காரியத்தையும் சில நொடிகளில் கூறினீர்கள். நிச்சயமாக நான் நம்புகின்றேன், என் வேலை பூர்த்தியாகுமென்று. தங்குதடையின்றி உங்கள் பணத்தை வங்கியில் செலுத்துவேன். ஆசீர்வாதத்திற்குரிய தசாவதானி ஐயா அவர்களே! என் பிரச்சினையை மின்சார வேகமாகச் செயற்பட வைக்க உங்களைக் கேட்கின்றேன். இன்று எனக்குத் தெரிகிறது, எத்துறையில் இருந்தாலும் அத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களிடம் சென்றால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும் என்று.

**கெக்கிராவ பரீனா என்ன கூறுகிறார்.** — பதிவேட்டு இல. 3505

நான் திருமணம் செய்து 7 வருட காலத்திற்குப் பின் கணவர் 3 வருட காலமாக வேறு ஒரு பெண்ணுடன் உறவுகொண்டு திருமணம் செய்யும் அளவிற்குப் போய்விட்டது. 2002ஆம் ஆண்டு நான் கொடுத்த பணத்திற்கு தகுந்தாக என்னைக் காப்பாற்றினீர்கள். சந்தோசம். மீண்டும் அப் பெண்ணோடு தொடர்புகொண்டு என்னை வெறுக்கின்றார். அவரை மீண்டும் அழைத்துக் கருணை புரியுங்கள்.

**சுவிஸ் - உதயகுமாரி என்ன கூறுகிறார்** — பதிவேட்டு இல. 3514

அருள் ஞான சித்தர் ஐயா அவர்களுக்கு!
திருமணம் முடித்து கடந்த 3 வருடங்களாக சுவிஸில் குடியும் கும்மாளமாகவும் இருந்து என்னையும் எனது மகளையும் தவிக்க விட்டுவிட்டு வேறு பெண்களோடு சுற்றித் திரிந்த எனது கணவனின் போக்கையும் குணத்தையும் மாற்றி, என்னை வாழ வைத்த தெய்வமே! எனது ஆயிரம் கோடி நன்றிகளை உங்கள் காலடியில் சமர்ப்பிக்கின்றேன்.

**கொழும்பு பர்சானா என்ன கூறுகின்றார்.** — பதிவேட்டு இல. 3515

எங்களைத் துன்பத்திலிருந்து காப்பாற்றிவிட்டீர்கள். உங்களிடம் வந்த பிறகு எனக்கு ஒரு புதிய தைரியமும் தெம்பும் ஏற்பட்டுவிட்டது.

**Swiss - சுரேஷ்** — பதிவேட்டு இல. 1093

ஐயா,
நான் எங்கு சென்றாலும், யாரிடம் சென்று என்ன மாந்திரீக பரிகாரம் செய்தாலும், ஐயாவிடம் வந்து பரிகாரம் செய்து ஆசீர்வாதம் பெற்றால்தான் காரியம் நிறைவேறும் என்பதை நான் நன்றாக உணர்ந்துகொண்டேன்.
நீங்கள் சொல்லி வைத்தது சொன்னபடி நடந்து வருகிறது. நன்றி.

**M.யோகேந்திரன் - Doha, Qatar.** — பதிவேட்டு இல. 30003

யோகேந்திரன் என்ன கூறுகிறார்.
அன்றும் இன்றும் என்றும் உலகம் போற்றும் மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, நீங்கள் அனுப்பிய மோதிரம் மற்றும் சாந்திப் பொருட்கள் பாவிக்க ஆரம்பித்தவுடன் மின்னல் வேகத்தில் என் எண்ணங்கள் நிறைவேறின.
என்னால் நம்பவே முடியவில்லை. ஐயாவின் ஆசீர்வாதம் என்றும் நிலைத்து எனக்குக் கிடைக்க வேண்டுகிறேன்.

எனது நுவரெலியா கிளை நிறுவனத்தில் மந்திரம், ஜோதிட வேலைகளுக்குக் கைமேல் பலன் கிட்ட எனது மூத்த சகோதரனாகிய P.T.R. அவர்களிடம் சென்று உங்கள் வேலைகளை அப்பொழுதே நிவர்த்தி செய்துகொள்ளலாம்.
(இங்கும் தீய வேலைகளுக்கு இடமில்லை)

என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம் சம்பந்தமாகத் தொலைபேசியில் ஆலோசனை பெற, இத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களை நியமித்திருப்பதால் அவர்களிடம் கதைத்து ஆடர்களோ, Appointmentகளோ பெற்றுக்கொள்ளலாம்.
தொலைபேசியில் நான் உரையாட கால அவகாசம் இல்லை.

**பேராசிரியர் டாக்டர் பி.கே.சாமி (J.D.G.A.N.) J.P.**
இல.162, ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம், மாந்திரீக உச்சாடன பீடம்
கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு 13. Cli No : 2342463, 2470615 Fax : 2344831
நுவரெலியாவில்: 33, Daily Fair Complex, Nuwara Eliya. Tel : 052 - 2222508, 2235097


## எழுத்தாளர்களின் கவனத்திற்கு

**மலையகச் செய்திகள் எமக்கு அரசியல் சாயம் பூசி அனுப்பப்படுவதால் எமது தெரிவுக்குட்படுவதில்லை. எனவே சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவரையும் நேரடியாகக் குறிப்பிடாமலும் உண்மைச் செய்திகளை எழுதக் கூடியவர்கள் தாராளமாக எமக்கு எழுதலாம். செய்தியாகவோ / கட்டுரையாகவோ உங்கள் மன எண்ணங்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

1. மலையகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் முறைப்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஏற்கெனவே கவிதை, சிறுகதை என்பவற்றுடன் முரசின் வளர்ச்சியில் ஒன்றித்திருப்பவர்களுக்கு எமது சிரம் தாழ்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பி.கு.**

துணிந்து உண்மைச் செய்திகளை நேர்மையாக எமக்கு எழுதக் கூடிய பிராந்தியச் செய்தியாளர்களின் பங்களிப்பும் வரவேற்கப்படுகிறது. வடக்குக் கிழக்குச் செய்திகளை விடவும், மலையகச் செய்திகள் தொடர்பிலும் முரசு கூடிய கவனம் செலுத்தவுள்ளதால் ஒத்தாசை புரிந்து செயலாற்றத் துடிப்பான எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

நம்மால் முடிந்த சேவையை நம் சமூகத்திற்குச் செய்வோம். நமக்கு என்ன கிடைத்தது என்பதை விடவும் நாம் என்ன கிடைக்கச் செய்தோம் என்ற கேள்வியை நம்மை நோக்கி நாமே கேட்போம்.

நன்றி.

- ஆ - ர்

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 05 - 03 - 1957



விண்ணில்: 15 - 06 - 2003

**அமரர்.திரு.பொன்னையா இராமச்சந்திரன் (பிரதாப் மாமா)**
**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**
**மட்டக்களப்பு**

ஓராண்டு சென்றாலும் எங்கள்
மனதைவிட்டு நீங்காத தெய்வமே!
பாசத்தின் உறைவிடமாய் பண்பின்
பிறப்பிடமாய் கொண்ட என் தந்தையே!
தவிக்கின்றோம் உங்கள் திருமுகம் காண.
ஓடிவருவீர்களோ உங்கள் அன்பு மடிதனில்
மழலை பொழிய உன் நெஞ்சத்தில்
எம்மைச் சுமந்து எம் நெஞ்சோடு
நிறைந்தாய்
இன்று மண்ணோடு மறைந்துவிட்டாய்
உன் பிரிவால் வாடுகின்றோம்.

4ஆம் குறுக்கு வீச் றோட்,
திருச்செந்தூர்,
கல்லடி, மட்டக்களப்பு.

பிரிவால் துயருறும்:
மனைவி (தேவகி)
பிள்ளைகள் : சுபா, சுதா, சுரேஷ்.

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்ப காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளை களை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்


## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Goverment Approved Charity Regd No - HA/4/BT/219

டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் - மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)

Theiveegam Srilanka — தெய்வீகம் ஸ்ரீலங்கா
Head Office — தலைமையகம்
Batticaloa — மட்டக்களப்பு
Tele/Fax : 065-2224825,0094077488219. Balu Sothidar @ hotmail.com

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"

இன்னொருவர் பார்வையில்

**அரசியல் ஆய்வாளர் சுபாஸ் விக்கிரமசிங்க 04.06.2004 திகதிய "டெய்லி மிரர்" ஆங்கில இதழில் எழுதிய அரசியல் ஆய்வுக் கட்டுரையின் தமிழாக்கம்**

# இறுதித் தீர்வு குறித்துப் பேசத் தயங்கும் காரணங்களே இடைக்கால நிர்வாகத்துக்கும் தடைக்கற்களாகின்றன!

அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தேவையான மூன்றிலிரு பங்கு பாராளுமன்றப் பெரும்பான்மையை தற்போது அரசாங்கம் கொண்டிருக்கவில்லை என்பதுதான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குள்ள பிரதான தடை எனக் கூறுகின்றனர் புலிகள். அதனால் இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காணும் பேச்சுக்களைத் தவிர்த்து, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் உடனடி வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான இடைக்கால நிர்வாகம் விரைவாக ஏற்படுத்தப்பட வேண்டுமென வற்புறுத்துகின்றனர். அதாவது இறுதித் தீர்வை விடவும் இடைக்கால நிர்வாகமே அவசியம் என்பதைப் புலிகள் தெளிவுபடுத்தியுள்ளனர். இறுதித் தீர்வு எத்தகையதாக அமையவேண்டுமெனப் பேசுவது கூட நேரத்தை வீணடிக்கும் செயல் எனப் புலிகள் கருதுகின்றனர். புரட்சிகரமான இராணுவ அமைப்பொன்று இவ்வாறான கருத்தை முன் வைப்பது வெகு அபூர்வம்.

ஆனால், புலிகளின் தலை தற்போது ஜனநாயக அரசியல் சூழலுககு ஏற்றவாறு பாசாங்குத்தனமாகப் பேசுவதற்கு நன்கு பழக்கப்பட்டுவிட்டனர் போலவே தோன்றுகிறது. அதாவது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது குறித்துப் அவர்கள் பேசுகின்றனர். எப்படியிருந்தபோதும் புலிகளின் தலைவர்கள் இறுதித் தீர்வு குறித்துப் பேச மறுப்பது எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. புலிகளின் இந்த நிலைப்பாடு அவதானிகள் மத்தியில் சந்தேகத்தையும், குழப்பத்தையும் தான் தோற்றுவிக்கின்றது.

இது புலிகள் இன்னமும் ஜனநாயக அரசியல் நீரோட்டத்துக்குள் புகுந்து கொள்வதற்குத் தயாராக இல்லை என்றே கருத வைக்கின்றது.

பாராளுமன்றத்தில் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மைப் பலம் இல்லையென்று புலிகள் சுட்டிக்காட்டும் அதே காரணத்தையே, இடைக்கால நிர்வாகம் குறித்து பேசுவதை அரசு தவிர்ப்பதற்கும் பொருத்தமானதாகிறது. அரசாங்கம் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மைப் பலத்தைப் பாராளுமன்றத்தில் பெற முடியாது என்ற நிலை இருக்கும்போது இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசுவதும் அர்த்தமற்றதாகவே இருக்கும். உண்மைதான். மூன்றிலிருபங்கு பெரும்பான்மைப் பலம் இல்லாமல் அரசியலமைப்பை மாற்றங்களுக்கு உட்படுத்த முடியாது. எனவே, இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு என்பதை அறிமுகப்படுத்த இயலாது. புலிகளின் நிலைப்பாடு இதுவரையில் சரியானதாக இருக்கக்கூடும். இதுவே இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுவதையும் கேள்விக்கு இடமற்ற வகையில் இயலாததாக்கி விடுகிறது. அதாவது புலிகள் தாங்கள் வைத்த பொறிக்குள்ளேயே தாங்கள் சிக்கிக் கொண்டுள்ள ஒரு நிலமையே காணப்படுகிறது. அரசியலமைப்பில் பொருத்தமான மாற்றங்களைச் செய்யாமல் இடைக்கால நிர்வாகத்தைக் கூட வழங்கமுடியாது என்ற உண்மையை புலிகள் இலகுவாக மறந்துபோய் விடுகின்றனர் அல்லது வசதியாக மறைத்து விடுகின்றனர். அல்லது அறிந்து கொள்ளாதது போலக் காட்டுகின்றனர். அதாவது ஒன்றை நிராகரிப்பதற்குத் தெரிவிக்கும் அதே காரணமே மற்ற ஒன்றையும் நிராகரிப்பதற்குப் போதுமானமாக உள்ளது.

புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக யோசனைகளில் அரசியல் அமைப்புக்கு முரணான பல விடயங்கள் இருக்கின்றன. சிலவற்றை உதாரணமாகப் பார்க்கலாம்.

புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகக் கோரிக்கையின் மூன்றாவது அம்சம் தேர்தல்களைப் பற்றியது.

**"சுதந்திரமான நியாயமான தேர்தல்களை நடத்துவதற்காக இடைக்கால நிர்வாகம் சுதந்திரமான தேர்தல் ஆணையத்தை நிறுவும்."**

இது தற்போதைய அரசியலமைப்புக்கு முற்றிலும் முரணானதாகும். ஐந்தாவது அம்சம் மதச் சார்பின்மை பற்றியது.

**"வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு மதத்திற்கும் எவ்வித முன்னுரிமையும் வழங்கப்படமாட்டாது."**

இதனை தற்போதுள்ள அரசியலமைப்பில் மாற்றங்களைச் செய்யாமல் நடைமுறைப்படுத்த முடியாது.

ஒன்பதாவது அம்சம் நீதித்துறையைப் பற்றியது.

**"வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிர்வாகம் நடத்துவதற்கான அனைத்து அதிகாரங்களையும் இடைக்கால நிர்வாகம் கொண்டிருக்கும். இந்த அதிகாரமானது வடக்கு - கிழக்கு மாகாணத்திலும், மாகாணத்திற்காகவும் இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கும் அதிகாரங்களையும், செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாக இருக்கும்."**

இதன்படி அனைத்து அதிகாரங்களும் என்பது ஏகபோக உரிமையைக் கோருகிறது. இதில் விதிவிலக்குகளுக்கு அல்லது எல்லைக்கு உட்பட்டது என்று எதுவும் வரையறை செய்யப்படவில்லை. இத்தகைய ஒரு அம்சம் நடைமுறைக்கு வரவேண்டுமெனின் அரசியலமைப்பு மாற்றம் அவசியமானது.

பத்தாவது அம்சம் அதிகார வேறாக்கல் பற்றியது.

**"நீதித்துறைப் பரிபாலனத்திற்காக தனியான அமைப்புக்கள் உருவாக்கப்படும். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நீதி பரிபாலனத்திற்கான அதிகாரங்கள் இந்த அமைப்புக்கே வழங்கப்படும்."**

இதன் கீழ் இலங்கை அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் சட்டங்கள் வடக்கு - கிழக்கில் செல்லுபடியற்றவை என ஆக்கப்படுகிறது. இதனை அரசியலமைப்பு மாற்றம் இல்லாமல் செயற்படுத்தவே இயலாது.

பதின்மூன்றாவது அம்சம் கணக்கீடு மற்றும் கணக்காய்வு பற்றியது.

**"இடைக்கால நிர்வாகம் கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நியமனம் செய்யும்."**

இது அரசியலமைப்பின் ஏற்பாடுகளைத் தெளிவாக மீறுகின்ற மற்றுமொரு அம்சமாகும்.

> **பாராளுமன்றத்தில் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மைப் பலம் இல்லையென்று புலிகள் சுட்டிக்காட்டும் அதே காரணத்தையே, இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசுவதை அரசு தவிர்ப்பதற்கும் பொருத்தமானதாகிறது. அரசாங்கம் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மைப் பலத்தைப் பாராளுமன்றத்தில் பெற முடியாது என்ற நிலை இருக்கும்போது இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசுவதும் அர்த்தமற்றதாகவே இருக்கும்.**

பதினான்காவது அம்சம் மாவட்டக் குழுக்கள் அமைப்பது பற்றியது.

**"இடைக்கால நிர்வாகம் சட்டபூர்வ மற்றும் நிறைவேற்று அதிகாரங்களை அமுல்படுத்துவதற்காக மாவட்ட மட்ட குழுக்களை அமைக்கவும், தேவைப்படும் போது அவற்றின் ஊடாக நடை முறைப்படுத்தவும் அதிகாரம் உடையது."**

"மீண்டும் இது அரசியலமைப்பின் தற்போதைய ஏற்பாடுகளுக்கு முரணான மற்றுமொரு அம்சம் ஆகும்.

பதினைந்தாவது அம்சம் நிர்வாகம் குறித்தது.

**"இடைக்கால நிர்வாகத்தின் நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் இடைக்கால நிர்வாகமானது அரசாங்கத்தின் அனைத்து நிர்வாக அமைப்புக்களையும் கட்டுப் படுத்தும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும்."**

இது தற்போதுள்ள அரசியலமைப்பைத் தெளிவாக மீறும் மற்றுமொரு அம்சமாகும்.

இவை காரணமாக அரசியலமைப்பைச் சீர்த்திருத்தங்களுக்கு உட்படுத்தாமல் இடைக்கால நிர்வாக கோரிக்கைகளை நிறைவேற்றுவது என்பது இயலாத விடயம் ஆகும். இத்தகையதொரு நிலமையில் புலிகள் இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையில் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமெனவற்புறுத்துவது ஏன் என்ற கேள்வி எழுகிறது. இடைக்கால நிர்வாகம் தொடர்பாக மட்டுமே பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டுமென்பதும் வேறு எது பற்றியும் பேச முடியாது என்பதும் புலிகளின் நிலைப்பாடாக இருக்கிறது. இறுதித் தீர்வு குறித்து சமாந்தரமாகப் பேசுவதைக் கூடப் புலிகள் விரும்பவில்லை.

நோர்வேஜியர்கள் தலையிடுவதற்குப் பொருத்தமான உச்சக் கட்ட நிலை இதுவாகும். புலிகளுக்குப் பொருத்தமான ஆலோசனைகளை வழங்கி, விடயங்களைச் சரியான திசைக்கு இட்டு வருவதற்கு அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும். இதைவிடுத்து குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் வகையில் முயற்சி எடுத்து அரசாங்கத்தின் கழுத்தைப் பிடித்து நெருக்க முற்பட்டால் அரசாங்கம், தேவைப்படும் பாராளுமன்ற பெரும்பான்மையைப் பெறுவதைக் கடினமான தாக்கும்.

தற்போது பதவியிலுள்ள அரசாங்கமும் சரி, முன்னைய அரசும் சரி, தத்தம் பின்னடைவுகளுக்கு அப்பால் புலிகளின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவே முயற்சி எடுத்துள்ளன. முன்னைய அரசாங்கமும்கூட பாராளுமன்றத்தில் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், புலிகள் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகள் குறித்துப் பேசவும், சிரான் போன்ற உப குழுவை அமைக்கவும் முன் வந்திருந்தனர். சிரான் போன்ற உப குழுவை நிறுவுவதற்கு அரசியலமைப்பு மாற்றம் தேவைப்பட்டு இருக்கவில்லை. சிரான் அமைப்பின் குறைபாடுகளுக்கு அப்பால் வேறு காரணங்களுக்காகவே புலிகள் பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அகதிகள் விவகாரங்களைக் கவனிப்பதற்காக அரசியலமைப்புக்கு புறம்பான வகையில் எத்தகைய ஏற்பாடுகளைச் செய்யலாம் என்ற ஆராய்ச்சியிலேயே புலிகள் காலம் கடத்தி வருகின்றனர். ஜனநாயக அரசியல் நீரோட்டத்தினுள் செயற்படும்போது "தெருச் சண்டியர்கள்" போல தொழிற்பட முடியாது என்பதைப் புலிகள் உணர வேண்டும். "தெருச் சண்டியர்கள்" மிரட்டல் என்பதை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தியே தமது கோரிக்கைகளை வென்றெடுக்கின்றனர். முன்னைய ஐ.தே.க.அரசும் சரி, தற்போதைய அரசும் சரி புலிகளைத் திருப்திப்படுத்த விசேட கவனம் எடுத்து வரும் நிலையில் உண்மையாகவும், பெருந்தன்மையோடும் நடந்துகொள்ளப் புலிகள் முயற்சிக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் புலிகள் நடந்து கொள்வது அவர்களது உள்நோக்கங்கள் குறித்த சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தவே செய்யும்.

உதாரணமாக இடைக்கால நிர்வாகம் அமைப்பது தொடர்பாக மட்டுமே அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முடியுமெனக் கூறுவது இடைக்கால நிர்வாகத்துக்கு அரசாங்கத்தை இணங்கச் செய்யும் நோக்கம் உடையதாகவே கருதப்படும். இது அரசியலமைப்பு ஏற்பாடுகளின் கீழ் இயலாத விடயம் ஆகும். அதாவது, மலடியைப் பிள்ளை பெற வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது போலானதாகும். அரசாங்கம் புலிகளின் கோரிக்கைக்கு இணங்குமானால், தனி அரசு அமைக்கும் முயற்சிக்கு இலங்கை அரசு அங்கீகாரம் வழங்கிவிட்டதான பிரசாரத்தைப் புலிகள் ஆரம்பிப்பர். இது நடைபெற்றுவிட்டால் புலிகள் அமுல்படுத்துவதைக் கூட சரியான திசையில் இடம்பெற அனுமதிக்க மாட்டார்கள். அரசாங்கம் பாராளுமன்றத்தில் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மையைப் பெறும் வரையில் காத்திருக்கப் போவதாக அவர்கள் கூறுவார்கள்; அல்லது அதனைத் தம்மிடம் தரும்படி கோருவார்கள். இதுதான் வெளியுலகில் புலிகள் குறித்த தற்போதைய கணிப்பாகும்.

இந்த நாணயத்தின் மறுபக்கமும் உண்டு. அதாவது அரசாங்கம், அல்லது அரசாங்கமும், எதிர்க்கட்சியும் இணைந்து இத்தகைய சூழலை எவ்வாறு எதிர்கொள்ளும் என்பதே அதுவாகும். கட்சிகளின் வேறுபாடுகளைக் கடந்து அரசியல் முன்னணி ஒன்றைத் தென்னிலங்கையில் தோற்றுவிப்பதே ஒரே மாற்று வழியாகும். புலிகள் அரசுக்கும், நாட்டுக்கும் ஆபத்தை விளைவிக்கும் ஒரே சக்தி என்பதை ஒத்த குரலில் எடுத்துரைப்பதுதான் பொருத்தமானதாக அமையும். எவ்வாறாயினும் இத்தகைய உண்மையான கட்சி வேறுபாடுகளைக் கடந்ததொரு முன்னணியை அமைப்பது தான் புலிகளின் பொறியிலிருந்து தப்புவதற்கு உதவும்.

மறு புறத்தில் பிரபாகரன் தந்திரமாகவும் மிரட்டல் மூலமும் வட பகுதியின் அனைத்துச் சக்திகளையும் ஒருங்கிணைத்துக்கொண்டு எவர் மீதும் அல்லது ஒவ்வொருவர் மீதும் தமது தீர்மானங்களைத் திணிக்கக் கூடியவராக உள்ளார். இது உண்மையானது. பிரபாகரன் இதுவரையில் எதனைப் பெற்றுக் கொண்டுள்ளாரோ அவற்றைத் தக்கவைத்துக் கொள்ள இயலுமான வராகவே உள்ளார். தென்னிலங்கைத் தலைவர்களால் அதனைத் தடுக்க இயலவில்லை.

தென்னிலங்கையர்கள் கட்சிகளின் நிறங்களை மறந்து ஒற்றுமைப்படுவார்களேயானால் போர்க்காலப் பதற்றமான சூழல் ஒரு முடிவுக்கு வந்துவிடும். ஆனால், தென்னிலங்கையர்கள் கட்சி நிறங்களைக் கடந்து ஒருபோதும் ஒன்றுபடப் போவதில்லை என்பதைப் பிரபாகரன் நன்கறிந்து வைத்துள்ளார்.

நன்றி :-
டெய்லி மிரர் - 04.06.2004


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## – வாழ்க்கை சரிதம் –

திருவல்லிக்கேணியில் இருந்த என் ஸ்ரீரங்கத்து நண்பன் திரு.செல்லப்பாவின் அறையில், திடீர் விருந்தாளியாகப் போய்த் தங்கிக்கொண்டேன். செல்லப்பா உருவத்தால் குள்ளமானவர்; உள்ளத்தால் உயரமானவர்.

இங்கிலாந்து தேசத்தில் லண்டன் மாநகரத்திலுள்ள டௌனிங் ஸ்ட்ரீட் எப்பொழுதும் திருவிழாக் கும்பலாக இருக்கும் என்பார்கள். நிறையப் பிரமுகர்களின் வருகைக்குக் காரணம், அது பிரதமரின் இல்லமாகத் திகழ்ந்ததுதான்.

அது போல், சென்னை, தியாகராய நகரில் 10, சின்னையாப் பிள்ளை ரோடு காலை வேளையில் அந்நாளில் வருவோரும் போவோருமாக அட்டகாசமான ஆரவாரத்தோடு இருக்கும். காரணம், எத்துறையைச் சார்ந்த எவர் வரினும் தன்னால் இயன்ற அளவு அவர்களுக்கு உதவுகின்ற உதாரகுணம் படைத்த திரு.வி. கோபாலகிருஷ்ணன் அந்த விலாசத்தில்தான் அன்று வாழ்ந்து கொண்டிருந்தார். கோபி, இப்பொழுதும் அதே வீட்டில்தான் இருக்கிறார்.



தினமும் திருவல்லிக் கேணியிலிருந்து பஸ் பிடித்து, வாணிமஹாலில் இறங்கி நான் கோபி வீட்டிற்குப் போவது வழக்கம். எப்படியும் எனக்கு திரைப் படத்தில் எழுதும் வாய்ப்பைப் பெற்றுத்தர வேண்டும் என்று தன் வீட்டிற்கு வருவோர் போவோரிடமெல்லாம் என்னைப் பற்றிய ஒரு ஐ கோபி எடுத்துரைப்பார். அங்கு எனக்கு நிறையப் பேரை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

ரசிகமணி திரு.டி.கே.சி.யைச் சுற்றி ஒரு வட்டத் தொட்டி இருக்கும் என்பார்களே, அதுபோல கோபியைச் சுற்றி அறிவு ஜீவிகளின் கூட்டம் அனவரதமும் இருந்து கொண்டேயிருக்கும்.


பிரபல திரைப்பட இயக்குநர் திரு.ஸ்ரீதரின் மூத்த சகோதரர் திரு.சேகர், கம்யூனிசக் கருத்தின்பால் ஈடுபாடுடைய எழுத்தாளரும், சினிமா வசனகர்த்தாவுமான திரு.எம்.எஸ். கண்ணன், திரு.ஜெயகாந்தன், திரு.கோவி.மணிசேகரன், வாசு என்னும் பெயரில் கோபியால் வாஞ்சையுடன் அழைக்கப்பெற்ற பிரபல இசையமைப்பாளர் திரு.எம்.பி.ஸ்ரீநிவாசன், இன்று தொலைக்காட்சியில் எடிட்டராகப் பணியாற்றும் மிகச்சிறந்த ஓவியர் திருநாவுக்கரசு, கேமராமேன் நிமாய்கோஷ் என்று பல்வேறு துறையைச் சார்ந்த அறிவார்ந்த பெருமக்களின் அணிவகுப்பை, அன்றாடம் அதிகாலையில் கோபியின் வீட்டில் பார்க்கலாம்.


தன்னுடைய ஸ்கூட்டரின் பின்னால் என்னை ஏற்றி வைத்துக்கொண்டு பல்வேறு தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், இசையமைப்பாளர்கள் என்று தினம் தினம் எவரிடமாவது என்னை அறிமுகப்படுத்தி, எனக்கு ஒரு வாய்ப்பு வழங்கும் பொருட்டு, கோபி வேண்டாத நாளேயில்லை. அவர்களிடமெல்லாம் என் எழுத்து திறனைக் காட்டுவதற்காக ஒரு சிறிய நோட்டில் நான் ஒரு சில பாட்டுகளை எழுதி வைத்திருந்தேன். சிலர் அவைகளைப் படித்துப் பார்த்துப் புன்னகைத்தது உண்டு; சிலர் அவைகளைப் படித்துப் பார்க்காமலே புன்னகைத்ததும் உண்டு. ஆக அந்தப் புன்னகைகளால் எனக்குப் எந்தப் பயனும் நேரவில்லை. யாரும் என்னை அலட்சியப் படுத்தவில்லை; அதே நேரத்தில் ஊக்கப் படுத்தவுமில்லை. பார்க்கலாம் என்று காமராஜர் பாணியில் பதிலிறுத்தார்கள். அந்த நேரத்திலெல்லாம் என் நம்பிக்கைதான் மெல்ல மெல்லத் தளர்ந்ததே தவிர, என்பால் கோபி வைத்திருந்த நம்பிக்கை தளரவேயில்லை.

நான் மிகச் சிறந்த கவிஞன் என்று ஆழமாக அவர் நம்பினார். இதில் வேடிக்கை என்னவென்றால், என்னுடைய கையிலிருந்து நோட்டை வாங்கி என்ன எழுதியிருக்கிறேன் என்று அவர் புரட்டிப் பார்த்ததே இல்லை. ஒரு பாடலைக் கூட என் வாயால் அவர் பாடிக் கேட்டதே இல்லை. ஆனால் எல்லோரிடமும் "வாலி நிறைய உள்ள ஆளு" என்று வாய் நிறையச் சொல்லி அறிமுகப்படுத்தி வைப்பார்.

இந்த விஷயத்தை இன்று நினைத்தால் கூட எனக்கு வியப்பாக இருக்கிறது. என் சரக்கு என்னவென்று எடை போட்டுப் பார்க்காமலேயே சினிமாச் சந்தையில் 'என் தமிழ் தரம் வாய்ந்தது' என்று சொல்லி என் பொருட்டு அவர் வாடிக்கையாளர்களை வலைவீசிப் பிடிக்கலானார்.

(தொடரும்.....)




எத்தனையோ நாள்களுக்குப் பிறகு முதல் தடவையாகச் சிரித்தேன். 11 மணியளவில் எனது விளக்கை நான் அணைத்தேன். எனது தளத்தைச் சேர்ந்த இரு மேற்கிந்தியர்கள் தமது சிறைக் கூண்டின் ஜன்னலூடாக உரத்துச் சப்தமிட்டுக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் கிரகிக்கவோ, புரிந்துகொள்ளவோ என்னால் முடியவில்லை. இது அநேகமான சிறைச்சாலைகளில் நடக்கும் சர்வசாதாரண நிகழ்ச்சி. இது இரவு பூராவும் தொடரும். அவர்களை "ஜன்னல் சண்டைக் காரர்கள்" (Window warriors) என்று அழைப்பர்) அவர்கள் இருவரும் விவாகரத்தை விரும்புகின்ற ஒரு தம்பதியர் போல் பரஸ்பரம் ஏசிக்கொண்டார்கள்.

நான் எத்தனை மணிக்கு உறங்கினேன் என்று எனக்குத் தெரியாது.

3ஆம் நாள் – சனி 21, ஜூலை 2001.

அதிகாலை 4.07.

நாலு மணி கடந்து சில நிமிடங்களில் நான் விழித்துக்கொண்டேன். ஆயினும் என்னைக் கூட்டிச் செல்வதற்கு எவருமே வராத காரணத்தால் இரு மணித்தியாலங்களுக்காவது எழுதுவதென்று தீர்மானித்தேன். நான் இப்போதெல்லாம் மிக மெதுவாக எழுதுவதாகவே எனக்குப்பட்டது. எனது கவனத்தைக் குலைக்கக் கூடிய சில விடயங்கள் என் வாழ்க்கையில் இருந்தன.

காலை 6.00 மணி.

ஓர் அதிகாரி என் அறைக் கதவைத் திறக்கிறார். தன்னை ஜோர்ஜ் என்று அறிமுகம் செய்துகொள்கிறார். எனக்குக் குளிப்பதற்கு விருப்பமா என்று வினவுகிறார். எனது டவலை எனது கட்டிலின் ஓரத்தில் ராத்திரி பூராவும் காயப் போட்டிருந்தேன். ஆயினும் அது ஈரமாய் இருந்தது. அவர்கள் எனக்கு Bic ரேஸர் ஒன்று தந்திருந்தார்கள். அதனால் இரண்டு நாள்களாக என் முகத்தில் வளர்ந்திருந்த ரோமத்தை அகற்ற முடிந்தது. நான் எனது கழுத்தை வெட்டிக்கொள்ள நினைத்தேன். ஆனால், அதில் நான் தோல்வியுற்றால் மருத்துவப் பகுதிக்கு அனுப்பப்படுவேன் என்ற நினைப்பு அந்த எண்ணத்தைக் கைவிட வைத்தது. மருத்துவப் பகுதி அநுபவம் மறக்க முடியாத ஒன்று. அநேகமான கைதிகளைத் தன்னைக் காயப்படுத்திக் கொள்வதிலிருந்து தடுத்தது. ஏனென்றால், அது விரும்பக் கூடிய ஓர் அநுபவம் அல்ல. நீங்கள் மேல் மாடிக்கு அனுப்பப்பட்டால் நீங்கள் நோய்வாய்ப்படுவது நல்லது. இல்லாவிட்டால் அந்த நேரத்தில் அவர்கள் உங்களை முடித்துவிடுவார்கள்.

நான் குளிப்பதற்காகப் போகிறேன். பொத்தானை எப்போது அழுத்தினால் தண்ணீர் விடாது கொட்டிக்கொண்டிருக்கும் என்பதை அனுமானிப்பதில் நான் மிகவும் பரிச்சயமானவனாகிக் கொண்டிருக்கிறேன்.

## தமிழில் தருவது ஜெஃப்ரி ஆர்ச்சர்

(பக்கங்கள் வளரும்)

உலகப் புகழ்பெற்ற ஹொலிவுட் பொப்பிசைப் பாடகி பிரிட்னி ஸ்பெயர்ஸ் கடந்த ஜனவரி மாதம் மூன்றாம் திகதி காலை 5.30 மணியளவில் தனது பாடசாலைக் கால நண்பரான ஜோபன் அலெக் ஸாண்டரை விவாகஞ் செய்து 55 மணி நேரம் கழிந்த நிலையில் விவாகரத்தும் செய்துகொண்டார். இச் சம்பவம் அப்போது மிகவும் பிரபலமாகப் பேசப்பட்டு வந்தது.

அலெக்ஸாண்டருடன் புது வருட ஓய்வு காலத்தை லாஸ்வேகாஸ் நகர விடுதியொன்றில் கழித்துக்கொண்டிருந்த வேளை நெருங்கிய ஒரு சிலரை மட்டும் அழைத்து அருகில் இருந்த தேவாலயம் ஒன்றில் வைத்து அவர் இத் திருமணத்தைச் சட்ட ரீதியில் செய்துகொண்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

# பிரபலப் பாடகி பிரிட்னியின் பின்னணியில்.....

விவாகஞ் செய்துகொள்வதற்குச் சில மாதங்கள் முன்பதாக பிரிட்னி பிரபல பொப்பிசைப் பாடகியான மெடோனாவுடன் இணைந்து பாலியல் உணர்ச்சிகளை வெகுவாகத் தூண்டக் கூடிய வகையிலான இசை நிகழ்ச்சியொன்றை வழங்கியிருந்தார். இதனால் ஊடகங்கள் இவரை 'புரட்சிகரப் பெண்' என வர்ணித்திருந்தது. இதே பிரிட்னி குறுகிய நேர திருமணம் செய்து அதனைத் தனது நிஜ வாழ்க்கையிலும் நிரூபித்துவிட்டார்.

'Baby one more time' மற்றும் In the zo he போன்ற மிகவும் பிரபலமான பாடல்களைப் பாடியுள்ள பிரிட்னி 22 வயதுடையவர். இவர்


பிரிட்னி திருமணம் முடித்த இடம்
குறுங்கால கணவர்

அமெரிக்க Billboard விருது, MTV இசை விருது மற்றும் Grammy விருது என 20க்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றவர்.

திருமணம் செய்துகொள்வதற்கு முன்பதாக பிரபல பொப்பிசைப் பாடகரான ஜஸ்டின் டிம்பர்லேக் உடன் காதல் வயப்பட்டிருந்த பிரிட்னி, இதன் காரணமாக ஊடகங்களில் தோலுரிக்கப்பட்டவர்.

சனிக்கிழமை திருமணம் முடித்த பிரிட்னி திங்கட்கிழமை விவாகரத்துச் செய்து கொண்டார். விவாகரத்துக்கான பத்திரத்தில் இருவருமே கைசாத்திட்டுள்ளனர். இதற்கான காரணத்தைத் தேடிய ஊடகங்கள 'பிரிட்னி' இதனை ஒரு நாடகமாகவே அரங்கேற்றியுள்ளார் எனக் கூறின.

'தனது பிரபலத்தை ஆராய்ந்து பார்க்கும் தேவை அவருக்கு ஏற்பட்டிருந்தது' என சில விமர்சகர்கள் கூறினர். ஆனால், இக் காலகட்டத்தில் பிரிட்னி ஊடகங்களின் முன்பாகத் தலை காட்டவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஹொலிவுட் மேடையைப் பொறுத்த வரையில் இவ்வாறான திருமணங்கள் புதிதல்ல;

பிரபல நடிகர் ரெடோல்ப் வெலென்டினோவுக்கும் பிரபல நடிகை ஜீன் ஏக்கருக்கும் இடையில் இடம்பெற்ற திருமணமானது ஆறு மணி நேரத்துக்குள் முடிவுக்கு வந்துவிட்டது. உலகில் இடம்பெற்றுள்ள திருமணங்களிலேயே மிகக் குறுகிய (6 மணி நேரம்) கால சட்ட ரீதியிலான தம்பதிகளாக வாழ்ந்தவர்கள் இவர்கள்தான். அது போன்றே சாஷாகெபர் – பெல்மி டீஎல்பா ஆகியோருக்கிடையிலான திருமணம் ஒரு நாளைக் (24 மணி நேரம்) கொண்டதாகும். ரொபர்ட் இவன்ஸ் மற்றும் கெத்தலின் ஒக்ஸென் பர்க் இருவருக்கிடையில் நடந்து முடிந்த திருமணம் 12 நாட்கள் நீடித்தன. டெனிஸ் ஹூப்பர் – மிச்செல் பிலிப்ஸ் ஆகியோருக்கு இடையிலான திருமணம் 8 நாட்களில் முடிவுக்கு வந்துள்ளது.

கடந்த காலத்தைப் போன்றே தற்போது கூட ஹொலிவுட் நட்சத்திரங்களிடையே உடனடித் திருமணங்களும் உடனடி விவாகரத்துக்களும் அடிக்கடி இடம்பெற்று வருவதைக் காணலாம்.

2001இல் ஜெனிப்பர் லோபஸ் – கிறிஸ் ஜூட் இடையே நடைபெற்ற திருமணம் 9 மாதகாலத்தில் முடிவுபெற்றதுடன் 2002இல் பிரபல பாடகர் எல்விஸ் பிரேஸ்லியின் புதல்வி லீஸா மாலி நிக்கலஸ் கேஜ என்பவரைத் திருமணஞ் செய்து மூன்றரை மாதங்கள் மாத்திரம் வாழ்ந்துள்ளார்.

பிரிட்னியும் ஜேஸனும் செய்துகொண்ட திருமணம் 55 மணித்தியாலங்களைக் கொண்டது என்றபோதிலும் அது தொடர்பில் பல வருடங்களாகப் பேசக் கூடிய வகையில் விடயங்கள் அன்றாடம் அலசப்பட்டு வருகின்றன.

பிரிட்னியின் தாயார் இந்தத் திருமணத்தை விரும்பாததால் இது ரத்துச் செய்யப்பட்டதாக ஒரு கதையும் உண்டு.

ஆனால், பிரிட்னி அண்மைக்காலமாக இயற்கைக்கு மாறான வகையில் நடந்து வருவதாகவும் இதனால் அவரை மனோதத்துவ வைத்தியரிடம் காட்ட வேண்டும் எனவும் அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் கூறின. இதே நேரம் ஒருவர் காதலில் தோல்வியடைந்தால் இவ்வாறான காரியங்களில் ஈடுபடுவார்கள் என மனோதத்துவ வைத்தியர்கள் கூறுகின்றனர்.

சுய கட்டுப்பாட்டை இழந்தவர்கள் இவ்வாறு அடிக்கடி திருமணம் முடிப்பதாலும் விவாகரத்துச் செய்துகொள்வதாலும் இவாக்ள் வக்கிரமான முறையில் உதவிகளைக் கோருகின்றனர் என்கிறார் ஜொயிஸ் பிரதர்ஸ் எனும் மனோதத்துவ வைத்தியர்.

இவ்வாறானதொரு நிலையில் பிரிட்னி 'In the John' எனும் தனது புதிய பாடல் அல்பத்தை உலக நாடுகள் தோறும் சென்று மேடையேற்றி வருகின்றார். இவரது அடுத்த நிகழ்ச்சிகளை ஷாங்காய், பெய்ஜிங் ஆகிய நகரங்களில் அடுத்த ஆண்டு நடாத்தவுள்ளார்.

1949இல் சீனாவில் கம்யூனிஸ்ட் அரசாங்கம் அமையப்பெற்றதன் பின்னர் அங்கு இசைக் கச்சேரி நடாத்த வரும் பிரபல பாடகி சிட்னியாவார். இதே நேரம் சிட்னியின் இசை நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்கியுள்ள சீனா, அதிகக் கவர்ச்சியான ஆடையை அணிந்து அவர் மேடையில் தோன்றக் கூடாது என ஒரு நிபந்தனையையும் விதித்துள்ளது. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் இதற்கு முன்கூட்டியே உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதே நேரம் சீன நிகழ்ச்சிக் காக என்று தனியாக ஆடை மற்றும் ஒப்பனை சமாச்சாரங் களை மாற்றுவது இயலாத காரியமாகும் என பிரிட்னிக்கு


பழைய காதலன் ஜஸ்டின் உடன் பிரிட்னி

நெருக்கமானவர்கள் கூறுகின்றனர்.

அரைகுறை ஆடைகளுடன் மேடைகளில் தோன்றுவது என்பது பிரிட்னிக்குக் கைவந்த கலையாகும். இது பற்றி விமர்சனங்கள் எழுந்தபோது அவர் கூறினார். இதைப்பற்றி தான் அந்தளவுக்கு பெரிதுபடுத்திக்கொள்ளப் போவதில்லை என.

தான் சிறுமியாக இருந்த காலத்தில் இருந்தே வீட்டில் இருக்கும்போது நிர்வாணமாக நடமாடித் திரிந்ததால் நிர்வாணம் என்பது தனக்குப் புதிதானதல்ல என்றும் அவர் கூறியுள்ளார்.

'நிர்வாணமாக இருப்பதென்பது எங்கள் வீட்டில் எனக்கு சகஜம். வெளியார் எவரும் வீட்டுக்கு வந்தால் உடம்பில் ஏதேனும் துணியைப் போர்த்திக் கொள்வதுண்டு' என அவர் தனது நிர்வாண மேடைகள் தொடர்பில் ஒரு பேட்டியின்போது கருத்துத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

என்ன இருந்தாலும் 'சீனா' கலாசார விடயங்களில் சில கட்டுப்பாட்டுத் தன்மைகளைக் கொண்டுள்ளது. மிக இறுக்கமாக இருந்த இந்தக் கட்டுப்பாடு இப்போது சற்றுத் தளர்த்தப்பட்டு வருவதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இதேநேரம் சிதறிப்போயுள்ள இலங்கையின் கலாசாரம் இப்போது இறுக்கமாக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத் தக்கது. இனிமேல் அரைகுறை ஆடைகளுடனான போஸ்டர்களை பாதைகள் தோறும் காண இயலாத ஒரு நிலை வரக்கூடிய சாத்தியப்பாடுகள் அதிகம்.

– பாரூக் –

# இலக்கைத் தீர்மானித்தால் தீர்வும் இலகுவாகிவிடும்

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் உயர்பீடமாக வர்ணிக்கப்படும் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற காடைத்தனம், இடைக்கால நிர்வாக சபை இல்லையேல் அரசுடன் பேசுவதில் பயனில்லையென்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அறிவித்தமை, இந்த அறிவித்தல் வெளியாகி மூன்று நாட்களின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்கள் இடைக்கால நிர்வாக சபை உட்படப் பல்வேறு விடயங்கள் பற்றிப் பேசியமை, ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை, அமெரிக்க இராணுவத்தின் ஆசிய – பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி ஜேம்ஸ் பி கம்பெலின் இலங்கை விஜயம் ஆகியன கடந்த வாரம் இடம்பெற்ற பரபரப்பான சில முக்கிய சம்பவங்களாகும்.

"தர்மராஜ்யத்தை அமைப்பதற்காகப் பாடுபடுவோம்" என்ற கோஷத்தோடு கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 'ஜாதிக ஹெல உறுமய' என்ற மஞ்சள் பதாகையின் கீழ் பிக்குகளைக் களமிறக்கியவர்கள், பச்சை வகுப்புவாதிகளான திலக் கருணாரத்னவும் சம்பிக ரணவக்கவும் என்பது பகிரங்கமான இரகசியமாகும்.


– பல தேர்தல்களில் போட்டியிட்டுத் தோல்வியுற்ற 'சிஹல உறுமய'வின் தலைவர் திலக் கரணாரட்னவும் அவரது சகபாடி சம்பிக ரணவக்கவும் பெற்றெடுத்த இந்தத் 'தத்துப்பிள்ளை'க்குப் பாராளுமன்றத்தில் ஒன்பது ஆசனங்கள் கிட்டின. வேட்பாளர்களாக இருந்தபோதே இரு கிளர்ச்சிப் பிக்குகள் தமது தர்மிஷ்டத்தின்படி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவை வெளிப்படுத்தினர். புதிய பாராளுமன்றத்தின் முதல் அமர்வின்போதே இந்த இரு பிக்கு எம.பி.க்களும் ஏனைய ஏழு எம்.பி.க்களுக்கு முரணான விதத்தில் ஆளும் கட்சிக்கு ஆதரவாக வாக்களித்தனர். இந்தப் புகைச்சல் பெரு நெருப்பாகி, பிக்குகளாலேயே ஒரு கிளர்ச்சிப் பிக்கு எம்.பி. கடத்தப்பட்டு, இராஜினாமாச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார். இதனையடுத்து புதிய பிக்கு எம்.பி.யாக அக்மீமன தயாரத்ன தேரரின் பெயர் மே 19ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியில் பிரசுரம் செய்யப்பட்டது. ஏற்கெனவே இராஜினாமாச் செய்துகொண்ட தேரர், தான் கடத்தப்பட்டு, இராஜினாமாச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டதைக் காரணங்காட்டி, கொழும்பு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்து, புதிதாக தயாரத்ன தேரர் சத்தியப் பிரமாணம் செய்யக் கூடாதென நீதிமன்றத் தடையுத்தரவையும் பெற்றிருந்தார்.

இந்தத் தடையையும் மீறிப் புதிய பிக்கு எம்.பி.யாகச் சத்தியப்பிரமாணம் செய்ய முற்பட்டபோதே பாராளுமன்றம் மீன் சந்தையாக மாறியது. ஆளும் தரப்பினரும் எதிர்த் தரப்பினரும் களத்தில் இறங்கி பரஸ்பரம் தாக்குதல்களை நடத்தினர். இழுபறிப்பட்டுக்கொண்டனர். பாராளுமன்ற சம்பிரதாயத்துக்கு முரணான வார்த்தைகளையும் அள்ளி வீசினர். கைகலப்பில் காயமுற்றதாகக் கூறப்படும் இரு பிக்குகள் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்.

இரு தரப்புமே வஞ்சகமின்றிக் கைகலப்பில் ஈடுபட்டபோதும் ஆளும் தரப்பை மட்டும் குற்றஞ்சாட்டி ஐ.தே.க.வோடு இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இ.தொ.கா, ஜாதிக ஹெல உறுமய, முஸ்லிம் காங்கிரஸ் எல்லாமே ஒன்றிணைந்து கூட்டாகக் கருத்துகளை வெளியிட்டனர். நீதிமன்றத் தடை உத்தரவையும் மீறி சபாநாயகர் புதிய பிக்கு எம்.பி.யைச் சத்தியப்பிரமாணம் செய்ய அழைத்தமையும் பிக்கு எம்.பி. சத்தியப்பிரமாணம் செய்ய முன்வந்தமையும் அவர்களின் உள் நோக்கத்தை நன்கு புலப்படுத்துகிறது. தடை பற்றிய உத்தரவு தமது கைகளுக்குக் கிடைக்கவில்லையென்று சபாநாயரும் தயாரத்ன தேரரும் சாக்குப்போக்குகளைக் கூறினாலும் இந்த நாட்டின் சகல தினசரிகளும் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளும் அதனை வெளிப்படுத்தியதை இவர்களால் மறுக்க முடியுமா? எனவே, வரலாறு காணாத இந்தப் பாராளுமன்றக் காடைத்தனத்துக்கு அடித்தளமிட்டவர்கள் யாரென்பதும் அதற்கான காரணம் என்னவென்பதும் இலகுவில் புரிந்துகொள்ளக் கூடியதாகும்.

கடந்த 5ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களை வன்னிக்கு அழைத்துப் பேசிய தமிழ்ச்செல்வன், ஜனாதிபதி பேச்சுவார்த்தை எனக் கூறி ஏமாற்றுகிறாரென்றும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனை பற்றிப் பேசி அதனை நிறுவிய பின்னரே முக்கிய விடயங்கள் பற்றிப் பேசலாமென்றும் புலிகளின் மரணப் பிடிவாத நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியிருந்தார். புலிகளின் ஒப்புதலோடு சில தினங்கள் கழித்து தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்கள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினர்.

புலிகளின் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளில் ஏற்றுக்கொள்ள முடியாத பல அம்சங்கள் இருந்தாலும் அதனை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் இடைக்கால சபை அமைக்கப்படுவதற்கு முந்திய இடைக்காலத்தில் முக்கிய பிரச்சினை பற்றிப் பேசுவதற்கும் ஜனாதிபதி இணங்கியிருந்தமை வரவேற்புக்குரியதாகும். ஜனாதிபதியின் இந்த நெகிழ்ச்சிப் போக்கும் விட்டுக்கொடுப்பும் புலிகள் தரப்பிலிருந்து பிரதிபலிக்கப்படவில்லையென்பது வேதனைக்குரியது. வடக்கு – கிழக்குத் தமிழ் மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்காகவே இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையைக் கோருவதாகக் கூறும் புலிகள், ஒஸ்லோ, டோக்கியோ பிரகடனங்களின் விதிமுறைகளை மீறிக் கோரிக்கைகளை முன்வைப்பது தமிழ் மக்களின் தலைகளில் மிளகாய் அரைப்பதற்குச் சமமானதாகும். வடக்கு – கிழக்கின் உடனடி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள இடைக்காலப் பொறிமுறையொன்றினை அரசும் புலிகளும் இணங்கி உருவாக்க வேண்டுமென்பதே ஒஸ்லோ பிரகடனத்தின் விதியாகும். எனவே, எந்த அரசாலும் ஏற்றுக்கொள்ள முடியாத அரசியலமைப்புக்குப் புறம்பான நிதி, நிர்வாகம், கடல் வள, நீதி சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை முன்வைத்துக்கொண்டே "அடித்தால் மொட்டை, வைத்தால் குடுமி" என்ற நிலைப்பாட்டில் விடாப்பிடியாக இருப்பது ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்களையே பாதிக்குமென்பதை உணர்ந்து புலிகள் படியிறங்கிக் கீழே வருவதே நல்லது. புலிகள் முன்வைத்திருக்கும் யோசனைகளில் அரசாங்கம் இணங்கக் கூடியவற்றை ஏற்றுக்கொள்வதும் இணங்க முடியாதவை பற்றிப் பேசி மாற்றுவழி காண்பதுவுமே பேச்சுவார்த்தை என்பதன் கருப்பொருள் என்பதைப் புலிகள் உணர்ந்துகொள்ள வேண்டும்.



அம்புலியைக் காட்டிப் பிள்ளைக்குச் சோறூட்டும் அம்மாவிடம், அம்புலியைப் பிடித்துத் தந்தால்தான் சாப்பிடுவேன் என்று கதறும் 'குழந்தை நிலைப்பாடு' புலிகளுக்கு இருக்கக் கூடாது.

இதற்கிடையில், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இந்தியா உதவத் தயாரென்று புதுடில்லியில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி பீடமேறியதையடுத்து கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் தெரிவித்திருந்த அறிவிப்புக்குத் தமிழ்ச்செல்வன் பச்சைக் கொடி காட்டியுள்ளமை வரவேற்கக் கூடிய விடயமாகும். இது இந்தியாவோடு நல்லுறவை ஏற்படுத்தப் புலிகள் பல வருடங்களாக எடுத்துவரும் பகீரத முயற்சியின் ஓர் அங்கமாக இருக்கலாம். ஆனால், புலிகள் இதே போன்று தமிழ் மக்களின் நலன் கருதி, இடைக்காலத் தன்னாட்சி விவகாரத்திலும் விட்டுக்கொடுப்புகளோடு நடந்துகொள்ள வேண்டும்.

அமெரிக்க இராணுவத்தின் ஆசிய – பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜேம்ஸ் ஜே கம்பலின் இலங்கை விஜயமும் முக்கியத்துவம் மிக்கது. குருநாகல் குக்குல் கங்கையில் நடைபெற்ற 'சமாதானப் பயணம்' என்ற ஒரு வார கால பல்தேசிய இராணுவப் பயிற்சியில் கலந்துகொள்ள இலங்கை வந்த இவர், இராணுவத் தளபதியைச் சந்தித்துப் பேசியுள்ளார். அத்துடன் யாழ்ப்பாணத்துக்குச் சென்று யாழ். இராணுவக் கட்டளையிடும் அதிகாரி தலைமையில் முப்படைகளின் சிரேஷ்ட தளபதிகளையும் சந்தித்துப் பாதுகாப்பு நிலைவரங்கள் பற்றிக்

**யாதவ்**


கலந்துரையாடியுள்ளார். காங்கேசன்துறை இராணுவ முகாம், காரைநகர் கடற்படை முகாம் ஆகியவற்றுக்கும் சென்று நிலைமைகளை ஆராய்ந்ததோடு, பல்குழல் எறிகணைத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் பார்வையிட்டுள்ளார். எனவே, அமெரிக்க இராணுவ அதிகாரியின் இந்த விஜயம் முக்கியத்துவம் வாய்ந்தாகும். இதேவேளை கடந்த வாரம் கம்பூச்சியாவுடன் இலங்கை இராணுவப் புலனாய்வு ஒப்பந்தமொன்றினைச் செய்துகொண்டிருப்பதாக வெளிவந்திருக்கும் செய்தியும் புலிகளைப் பொறுத்தவரை ஒரு கிடுக்குப் பிடிதான். எனவே, யுத்தமா? சமாதானமா? என்பதைச் சரிவரத் தீர்மானிப்பதும் அதற்காகத் தந்திரோபாயங்களை யுத்த முனையில் மட்டுமல்ல, அரசியல் முனையிலும் மேற்கொள்வதும் போராட்ட சக்திகளென்று தம்மை வர்ணித்துக்கொள்வோரின் தலையாய கடமையாகும்.


Over 10 Years in Directory Publishing
& Internet Advertising



CDL's Island Business Directory and Its Web Portal
www.srilankayellowpages.com
over the past 10 Years helped Small Businesses to Grow Big and
Big Businesses to Grow Bigger !

Corporate Directories (Pvt) Ltd.
6 1/2 Visakha Road, Bambalapitiya, Colombo 4, Sri Lanka.
Tel: 5376214, 5376218, 5378824, 5378825, 4513945
Fax: 5376216, E-mail: corporate@sltnet.lk



> சக்தி தனக்கே அடிமை யாக்கு - அது
> சத்தியத்தின் வெல்கொடியை நாட்டும் -மதி
> சக்தி தனக்கே அடிமை யாக்கு - அது
> தாக்க வரும் பொய்ப்புலியை போக்கும்
>
> -சுப்பிரமணிய பாரதியார்

# பாப்பா முரசு

## நண்பர்களுக்கிடையில் உண்டான பிரச்சினை

### பாப்பா முரசு சிறுகதை

ஓர் ஊரில் வர்த்தமானகன் என்றொரு வியாபாரி இருந்தான். அவன் மிகப்பெரிய செல்வந்தன் என்றாலும், அவன் தனது செல்வத்தை மேன்மேலும் பெருக்க வேண்டுமென்று விரும்பினான். பணத்தை சும்மா வைத்துக் கொண்டிருக்காமல் அதைக்கொண்டு பெரும் லாபம் ஈட்ட வேண்டும்; வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு ஒருவன் ஆர்வமுடையவனாகவும், கடும் உழைப்பாளியாகவும் இருக்க வேண்டும் என்று அவன் நினைத்தான்.

எனவே, அவன் ஏராளமான பொருள்களை வாங்கி, அவற்றை வெகு தொலைவிலுள்ள ஒரு ஊரில் விற்பதற்காக எடுத்துச் சென்றான். அவன் பொருள்களை எடுத்துச் சென்ற வண்டியில் இரண்டு காளை மாடுகள் பூட்டப்பட்டிருந்தன. அக்காளை மாடுகளுள் ஒன்றின் பெயர் சஞ்சீவகன் ஆகும். மற்றொன்றின் பெயர் நந்தகன் என்பதாகும்.

அவை பல நாட்கள் வண்டியை இழுத்துக்கொண்டு வேக வேகமாக ஓடி, ஒரு நாள் ஓர் அடர்ந்த காட்டுப் பகுதியை அடைந்தன. இரவு வேளை என்பதால் தங்கிச் செல்லலாம் என்று வர்த்தமானகன் வண்டியை நிறுத்த முயன்ற பொழுது, பெரும் களைப்புக்கு ஆளான சஞ்சீவகனின் லகான் அறுந்து போனது. அதே சமயம் வலதுகால் குளம்பு ஒரு குழியில்



இடறி, சஞ்சீவகன் நிலை தடுமாறி கீழே விழுந்தது.

சஞ்சீவகன் மீது மிகவும் அன்பு வைத்திருந்த வர்த்தமானகன் இதனால் பெரும் கவலையடைந்தான். சஞ்சீவகன் குணமாகும் வரை அதன் அருகில் இருக்க தீர்மானித்தான். ஒன்றிரெண்டு நாட்கள் கழிந்தன. ஆனால், சஞ்சீவகனோ மிகவும் பலவீனமாக இருந்தது.

“இனிமேலும் தாமதிக்க முடியாது. சரக்குகளை விற்பதற்காக நாம் உடனே புறப்பட வேண்டும்” என்று வர்த்தமானகன் தீர்மானித்தான். அதனால் அவன் சஞ்சீவகனை கவனித்துக் கொள்ள இரண்டு ஆட்களை நியமித்து விட்டு, நந்தகன் என்ற மற்றொரு காளையை வண்டியில் பூட்டிக்கொண்டு கிளம்பினான். அருகிலுள்ள ஊரை அடைந்த வர்த்தமானகன், அங்கு வேறொரு வலிமை மிக்க காளை மாட்டினை வாங்கி, வண்டியில் பூட்டி தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

சஞ்சீவகனை கவனித்துக்கொள்ள நியமிக்கப்பட்டிருந்த இரண்டு ஆட்களும், அதை அப்படியே காட்டில் விட்டு விட்டு, பொய்க் கதை கூறுவதற்காக வர்த்தமானகனைத் தேடிக் கிளம்பினர். அவர்கள் வர்த்தமாகனைக் கண்டு வருத்தம் தோய்ந்த குரலில், சஞ்சீவகன் இறந்துவிட்டதென்றும் அதற்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகள் அனைத்தையும் மிகுந்த அக்கறையுடன் தாங்கள் செய்து விட்டதாகவும் கூறினர். வர்த்தமானகன் அக்கதையை நம்பி, மேலும் தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

இதற்கிடையே சஞ்சீவகன் நொண்டியவாறே அக்காட்டில் சுதந்திரமாகத் திரிந்து, ஆற்றங்கரையருகே வளர்ந்திருந்த பசும்புற்களைத் தின்று வந்தது. விரைவில் அதன் காலில்பட்டிருந்த காயம் குணமடைந்தது. அதற்கு முந்தைய வலிமை வந்தது. ஒருநாள் அது தன் மனம் போல் புற்களை மேய்ந்து கொண்டிருந்தபொழுது, தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வண்ணம் உரத்த குரலில் ஒலி எழுப்பியது.

அச்சமயம் பிங்களகன் என்னும் சிங்கம் நீர் அருந்துவதற்காக ஆற்றங்கரைக்கு வந்தது. அது சஞ்சீவகன் எழுப்பிய பயங்கர ஒலியைக் கேட்டது. அதற்கு முன்பு அதுபோன்ற ஓர் ஒலியை அது கேட்டதில்லையாகையால், பயத்தால் நடுநடுங்கி அந்த இடத்தை விட்டு அலறிப் புடைத்துக் கொண்டு ஓடியது.

பிங்களகன் அவ்வாறு பயந்து ஓடுவதை, தமனகன் மற்றும் கரடகன் என்னும் இரண்டு நரிகள் பார்த்தன. அந்த இரண்டு நரிகளும், பிங்களகனிடம் முன்பு அமைச்சராக இருந்த ஒரு நரியின் மகன்களாகும். இவையிரண்டும்கூட பிங்களகனிடம் பணிபுரிந்தவைதான் என்றாலும், பின்பு பணிநீக்கம் செய்யப்பட்டன. எனினும், மீண்டும் தங்களுக்கு பிங்களகனிடம் பணி கிடைத்துவிடும். என்னும் நம்பிக்கையில் அவை பிங்களகன் செல்லும் இடமெல்லாம் பின்தொடர்ந்து சென்றன.

“பிங்களகன் பயந்து ஓடும் வண்ணம் நடந்தது என்ன?” தமனகன் ஆச்சரியத்துடன், உரத்த குரலில் தனது சகோதரனிடம் கேட்டது. “அதை நான் கண்டுபிடித்தாக வேண்டும்” என்று கூறியது.


“உனக்குத் தேவையில்லாத தவற்றில் நீ ஏன் தலையிடுகிறாய்? இவ்வாறு தலையிட்டு, தனது உயிரையே மாய்த்துக்கொண்ட குரங்கின் கதை உனக்குத் தெரியாதா?” என்று கரடகன், தமனகனிடம் வினவியது.

“எனக்குத் தெரியாதே, அதைக் கூறு” என்றது தமனகன்.

அதனால் கரடகன் தமனகனுக்கு அக்கதையைக் கூறத் தொடங்கியது....

தொடரும்.....

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26.06.2004

வர்ணம் தீட்டும் போட்டி இல: 550
தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772.
கொழும்பு.


### வர்ணம் தீட்டும் போட்டி இல: 548

**பரிசுக்குரியவர்:**
க.பா. கீர்த்தனா,
அமிர்தாம்பிகை வித்தியாலயம், நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

### பாராட்டுக்குரியவர்கள்

| | |
|---|---|
| ஜெ. ரனுஷியா, தரம் 4A, ப. தமிழ் மகளிர் மகாவித்தியாலம், பதுளை. | ஐ. எல். பாத்திமா ஜெனிபா, 165 1/B, மாதவன் வீதி, கல்முனை - 03. |
| கி. கிரித்திகன், தந்தை செல்வா பாடசாலை, பண்டாரிக்குளம், வவுனியா. | ர. பிரகதீஷ்வர்மா, தி/ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை |
| ஜே. ஜெசிக்கா, திருக்குடும்பக் கன்னியர் மடம், பம்பலப்பிட்டி. | சி. ரஜீவன், இல. 606/1 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். |
| அக்ஷா, இல. 84, டிலாசால் வீதி, கொழும்பு - 15 | எம். எச். அமானி, கஹட்டபிட்டியா முஸ்லிம் வித்தியாலயம், கம்பளை |
| பா. சீறீகுகன், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, வட்டுக்கோட்டை. | அ. எல்ரோய், 316, பாண்டிருப்பு - 02, கல்முனை. |

## புத்தகம் இதோ!



புத்தகம் இதோ
புத்தகம் இதோ
நித்தம் நித்தம் உதவுகின்ற
புத்தகம் இதோ!

முத்து முத்துக் கதைகளெல்லாம்
விரும்பி நாமும் படித்திட
உத்த மர்கள் வாழ்க்கை தன்னை
உணர்ந்து நாமும் நடந்திட

புத்தகம் இதோ
புத்தகம் இதோ
நித்தம் நித்தம் உதவுகின்ற
புத்தகம் இதோ!

குருவைப் போல நல்ல தெல்லாம்
கூறி நம்மை உயர்த்திட
அருமை நண்பன் போல் நமக்கு
அருகில் இருந்து உதவிட

மெத்தப் பெரிய கவிஞரோடும்
வேண்டும் போது பேசிட
சித்தம் மகிழச் செய்யும் நல்ல
சித்திரங்கள் பார்த்திட

இரவும் பகலும் எந்த நாளும்
ஏற்ற கல்வி கற்றிட
உரிய முறையில் அறிவு பெற்றே
உயர்ந்து நாமும் சிறந்திட

புத்தகம் இதோ
புத்தகம் இதோ
நித்தம் நித்தம் உதவுகின்ற
புத்தகம் இதோ!

## உங்கள் பொது அறிவு எப்படி?

### விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள்

| | |
|---|---|
| 1. ஊற்றுப்பேனா | - வாட்டர்மன் |
| 2. கைக்கடிகாரம் | - கிறெடம்ரைம்ப்சன். |
| 3 காஸ் விளக்கு | - வில்லியம் குறுஸ் மாடொக |
| 4.மின்காந்தம் | - ஸ்ரேர் கியன் |
| 5. காம்பூசி | - வால்டர் ஹன்ட் |
| 6. மோட்டார் கார் | - புல்மன் |
| 7 வெற்றிடக்குடுவை | - ஜேம்ஸ் டீவர் |
| 8. இயந்திரத் துப்பாக்கி | - டொக்கட்ர் கார்த்ரிங் |
| 9. போட்லன்ட் சீமெந்து | - ஜோர்ஜ் அப்ஸ்டன் |
| 10. நியூமடற்றிக் ரயர் | -ஜோன் பொயிற் டன்லப் |

## அதிசய உலகம்

### அழகிய கால்கள்!



துடுப்பு போன்ற கால்களை உடைய இப்பறவையின் பெயர் ‘பூபி’ பசுபிக் கடல் பகுதிகளில் உள்ள தீவுகளில் வசிக்கிறது. தண்ணீரில் வேகமாக நீந்தி மீன்களைப் பிடித்துத் தின்னப் பொருத்தமாக இவற்றின் உடல் அமைப்பு உள்ளது இதன் ஸ்பெஷாலிட்டி!

### சிகப்பு கிளிகள்!



பெரு நாட்டில் பெரிய..பெரிய... சிகப்புக் கிளிகள் உள்ளன. கற்பனை பண்ணிப் பாருங்க. ரொம்ப அழகா இருக்கும் இல்ல. இந்தக் கிளிகள் என்ன செய்யும் தெரியுமா? இங்கு ஹுரா என்று ஒருவகை மரங்கள் உண்டு. இதன் பழங்களை யாராவது தின்றால் அவர்களோட கண் பார்வையே போயிடும். இந்தப் பழங்களைத் தொட்டு விட்டால் கூட நமது தோலில் கொப்புளங்கள் வந்துவிடும். அத்தனை விஷத்தன்மையுடைய ரொம்ப கெட்ட மரம் இது. ஆனால், இந்த மரத்தின் பழுக்காத கனிகளைச் சாப்பிடுவது என்றால் இந்த சிகப்புக் கிளிகளுக்கு ஏக கொண்டாட்டம் தான். அவைகள் கூட்டம் கூட்டமாக வந்து இந்த மரத்தில் அமர்ந்து இந்தப் பழங்களை சுவைத்துச் சாப்பிட்டுவிடும். அதன் பிறகு எல்லா கிளிகளும் பறந்து சென்று ஒரு குறிப்பிட்ட ஆற்றங்கரையில் உள்ள ஒருவகை களி மண்ணை ஒரு உருண்டை ‘லபக்’ என்று விழுங்கி விடும். இந்தக் களிமண்ணானது இந்தப் பழத்தில் உள்ள விஷத்தை முறித்து விடும். எத்தனை அறிவு பாருங்க! இந்த சிகப்பு கிளிகளுக்கு அழகு மட்டுமல்ல, அறிவும் நிறைய இருக்கு இல்ல!


தகவல் பெட்டி

# புதிய வடிவமைப்பு

படத்திலுள்ள காரின் பெயர் லிமோசைன் டிஜிட்ஸ். இதனை லிண்டோமோர் எனும் அமெரிக்காவின் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி வடிவமைத்துள்ளார். இது தற்போது பாவனையில் உள்ள கார்களை விடவும் 5 மீற்றர் நீளமும் 2 மீற்றர் உயரமுமுடையது. இதில் மாபிள் பதிக்கப்பட்ட தரையமைப்பு, ரி.வி., மினி தியேட்டர், கேளிக்கை விளையாட்டுக்கள், டிஸ்கோ அரங்கம் ஆகியன உள்ளடக்கப்பட்டதோடு 18 பேர் இருந்து பயணிக்கவும், கேளிக்கைகளைக் கண்டு மகிழவும் முடியும். இந்தக் கார் அமெரிக்கப் பெறுமதிப்படி 95 ஆயிரம் அமெரிக்க டொலர். இது மிகச் சாதாரணம் என்பதால் தற்போது அமெரிக்காவின் நியூயோர்க், புளோரிடா, கலி:.போர்னியா ஆகிய மாநிலங்களில் பாவனையில் உள்ளது.



# தனியார் உருவாக்கிய முதல் ராக்கெட்!



நம் நாட்டில் வுன்னியில் விமானப் படை ஒன்று உள்ளதாகவும், ஷிமானங்கள் இருப்பதாகவும் அவர்களே தெரிவித்துள்ளார்கள். சர்வதேசத்துக்கு நம்பிக்கையில்லை என்பதால் படத்திலிருப்பதுதான் தனியார் உருவாக்கிய விமானம் என்று சொல்கிறார்கள். வன்னியில் விமானப்படை வைத்திருந்தால் கொழும்புக்கும் மற்றைய இடங்களுக்கும் ஏன் இலங்கைப் படையின் விமானங்களில் லிப்ட் கேட்க வேண்டும் என்று கேள்வி எழுப்பப்படுகிறது. நமக்கேன் வம்பு. விடயத்துக்கு வருவோம்.

முதன்முதலாகத் தனியார் உருவாக்கியிருக்கும் ரொக்கெட் 'ஸ்பேஸ்ஷிப் ஒன்' அமெரிக்காவைச் சேர்ந்த கோடீஸ்வரர் பால் ஆலனின் நிதி உதவியுடன் விமான வடிவமைப்பாளர் பர்ட் ரூதன் என்பவர் இந்த விண்கலத்தை உருவாக்கியுள்ளார். அதைப் பின்தொடர்ந்து பறப்பது பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஜெட் விமானமாகும். ஜூன் 21இல் பூமியின் வளிமண்டலத்தைத் தாண்டிச் செல்லும் முயற்சியில் இந்த விண்கலம் ஈடபடவுள்ளது. அது வெற்றிபெற்றால், புவி வளிமண்டலத்தைக் கடந்த முதல் தனியார் விண்கலம் என்னும் பெருமையைப் பெறும்.

# எதிர்ப்பு... எதிர்ப்பு!

பாலஸ்தீன மண்ணை ஆக்கிரமித்து அதில் குடியேறி வாழ்ந்து வருபவர்கள்தான் இந்த ஆர்ப்பாட்டக்கார யூதர்கள். இவர்கள் ஜனாதிபதி புஷ்ஷுக்கும், இஸ்ரேலிய பிரதமருக்கும் எதிராக ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். எங்கள் புனித மண்ணை யாருக்கும் கொடுக்கமாட்டோம் என்கிறார்கள். சமாதானம் என்பது கடினமான பாதைதான். யுத்தத்தின் கொடுமைகளை அநுபவித்தவர்களுத்தான் சமாதானத்தின் பெறுமதியைப் பற்றித் தெரியும். சமாதானப் பேச்சுக்கள் எங்கு நடைபெறுகிறதோ அங்கெல்லாம் எதிரானவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். இது கடந்தகால அநுபவங்கள். யார் எப்படி எதிர்த்தாலும் சமாதானத்தில் ஈடுபடும் இரு தரப்புகளும் உறுதியாகவும் உதட்டளவில் இல்லாமல் உள்ளத்தினாலும் சமாதானப் பாதையைத் தொடர்வார்களானால் யுத்தம் இல்லாத பூமி உருவாகும்.





# தடை!



ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் என்றால் காவல்துறைக்கு அதிக வேலைப்பளு தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. நகைப்புக்குரிய விடயமென்னவென்றால் மேற்படி போராட்டங்களை ஏற்பாடு செய்கிறவர்களே குழப்பங்களையும் ஏற்பாடு செய்துவிடுவதுதான். இதன் எச்ச சொச்சங்கள் இலங்கைக்கும் பொருந்தும். இருந்தாலும் ஒரு சும்மா சும்மாவுக்காக வீதி மறியல் போடுவது, காவல்துறையினரின் அட்டவணையில் உண்டு. இங்கே உக்ரேன் நாட்டுப் பொலிஸார் வேறு விடயம் ஒன்றுக்காக வீதி மறியல் செய்ய பொலிஸ் கார் ஒன்றை வீதிக்குக் குறுக்காக வைத்திருக்கிறார்கள். தேவை முடிந்ததனால் காரை அப்புறப்படுத்துகிறார்கள். மூன்று பேரால் கார் ஒன்றைத் தூக்க முடியுமா? ஆகவே, கார் வடிவிலான கட்அவுட் இது.

# பயணிக்கத் தயார்!

இந்தச் சிறிய அழகான கப்பல் அவுஸ்திரேலியாவில் கட்டப்பட்டது. 85 மீற்றர் நீளம் கொண்ட இக்கப்பல்5 மாடிகளைக் கொண்டது. 750 பயணிகளையும் 238 வாகனங்களையும் ஏற்றிச்செல்லக் கூடியது. மணிக்கு 80 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும் இக் கப்பல் அமெரிக்காவின் நியூயோர்க்கில் இருந்து கனடா ரொறன்ரோவிற்கு சேவையில் ஈடுபட இருக்கிறது. பயண நேரம் இரண்டு மணி 15 நிமிடம்.



# கண்டிக்கிறோம்!

ஸ்பெயினில் நடைபெற்ற புகையிரதக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சுமார் 300 பேர் இறந்தனர் என்பது அனைவரும் அறிந்த விடயம். இந்தக் குண்டுவெடிப்பைக் கண்டித்து இலட்சக்கணக்கான ஸ்பெயின் நாட்டவர்கள் கூடி, தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்ததையும் 'முரசு' ஊடாக அறிந்திருப்பீர்கள். மேற்படி எதிர்ப்பு ஆர்ப்பாட்ட சம்பவங்களில் பங்கெடுத்துக்கொண்ட துருக்கிய விளையாட்டு வீரர்கள், ஸ்பெயின் மொழியில் எழுதப்பட்டிருந்த எதிர்ப்பு வாசகங்களோடு நிற்கும் காட்சி இது. துருக்கி உதைபந்தாட்ட வீரர்கள் பயங்கரவாதத்திற்கு எதிராக அணிவகுத்திருப்பது துணிச்சலானதே. ஏனோ நமக்குத்தான் துணிச்சலும் இல்லை அதுக்கு முன்னால் உள்ள "து" வும் இல்லை.



# மணியின் டெக்னிக்

மணிரத்னத்தின் 'ஆய்த எழுத்து' பெரும் தோல்வி அடைந்திருப்பதைத் தொடர்ந்து படத்தில் நடித்த சூர்யா, மாதவன், சித்தார்த் ஆகிய மூன்று ஹீரோக்களுமே அப்செட்!

இதில் மாதவனின் அப்செட் சதவிகிதம் சற்று அதிகம். காரணம், தன்னை அறிமுகப்படுத்தி ஸ்டாராக்கிய இயக்குநரே தன்னை விடப் பெரிய ஸ்டாராக சூர்யாவை நினைத்து டைட்டில் கார்டில் முதல் பெயராக சூர்யாவைப் போட்டது. படத்தின் ரிலீஸ் தினம் வரை இந்தத் தகவல் யாருக்கும் தெரியாத நிலையில், படம் பார்த்தவுடன் நேராக மணிரத்னத்தைப் பார்த்து நீதி கேட்டார் மாதவன்.

"சும்மா டைட்டில் கார்டுல மட்டும் தான் சூர்யா பேர் முதல்ல வருது. மத்தபடி படத்துல உனக்குத்தான் நல்ல பேர் கிடைக்கும்" என்று மாதவனை ஆறுதல் படுத்தி வைத்திருக்கிறார் மணிரத்னம்.

டெக்னிக்கலான டைரக்டருக்கு சமாளிப்பு டெக்னிக்கையெல்லாம் சொல்லியா தர வேண்டும்!



படம் : செமரகளை
சத்தியராஜ் - தேவயானி

# முகப்பில் ❀❀❀ ஸ்ரீகாந்த்

காயத்திரி ஜெயராம்

## சினி விசிட்

## உஷ்ணம்

'ஆய்த எழுத்தில்' சற்று கிளாமராக நடித்ததால், அடுத்து போகிற நபர்களெல்லாம் 'சுவிம் சூட்டில் நடிக்கத் தயாரா?' என்று மீரா ஜாஸ்மினைக் கேட்கிறார்களாம். 110 டிகிரி கொதிப்பில் இருக்கிறார் அம்மணி.



# பிரசாந்த் நடிக்கும் 'ஷாக்' கதை என்ன?

நீண்ட இடைவெளிக்குப் பிறகு பிரசாந்துக்கு 'ஷாக்' படம் பெயர் சொல்கிற மாதிரி இருக்கும் என்கிறார்கள்.

தியாகராஜன் இதற்காக ஏராளமான பொருட்செலவில் படப்பிடிப்புகளை நடத்தி வருகிறார். சமீபத்தில் மும்பையில் ரூபா.80 லட்சம் செலவில் செட் போட்டு 6 காமிராக்கள், 20 அடி உயர இராட்சத கிரேன் உதவியுடன் படப்பிடிப்பு நடத்தியுள்ளனர்.

இந்தப் படத்தில் மீனாவின் கணவராக நடிக்கிறார் பிரசாந்த்.

புதிதாகத் திருமணமான பிரசாந்தும், மீனாவும் ஒரு அடுக்கு மாடிக் குடியிருப்பில் குடியேறுகிறார்கள். இவர்கள் குடியிருக்கும் பிளாட்டில் பேய் இருப்பதாக உணர்கிறார் மீனா.

அந்தப் பேய் பல சமயங்களில் மீனாவை ஆட்டிப் படைக்கிறது. இது பற்றிக் கணவர் பிரசாந்திடம் சொல்கிறார் மீனா.

"பேயா? அதெல்லாம் சும்மா? இது உன் மனப் பிரமை" என்று உதாசீனம் செய்கிறார் பிரசாந்த்.

ஒரு கட்டத்தில் மீனாவை பேய் பிடித்து ஆட்டுவதை நேரிலேயே பார்த்து அதிர்ச்சிக்குள்ளாகிறார். பிறகென்ன? பேய் வென்றதா? பிரசாந்த் வென்றாரா? என்பதுதான் க்ளைமாக்ஸ்.

ஒளிப்பதிவாளர் எம்.பன்னீர்செல்வம் இந்தப் படத்துக்காக பிரத்யேகப் பயிற்சி பெற்று விசேஷமாகப் படம் பிடித்து இருக்கிறாராம். பின்னணி இசையின் ஒளிப்பதிவு லண்டனில்தானாம்.

'ஷாக்' இரசிகர்களுக்கு எத்தகைய ஷாக்கை ஏற்படுத்தும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# சேரனுடன் நடிக்க மறுத்த முன்னணி நடிகைகள்!

*-அவரே சொன்ன வேதனைத் தகவல்*

'ஆட்டோகிராப்' படத்தின் பிரம்மாண்ட வெற்றியைத் தொடர்ந்து அதன் 100ஆவது நாள் விழாவுக்காக தஞ்சாவூர் வந்திருந்தார் சேரன்.

'தஞ்சை சோனா - மீனா' திரையரங்கில் சேரன், சிநேகா, கோபிகா, மல்லிகா என சினிமா நட்சத்திரங்கள் மேடையை அலங்கரிக்க, திரையரங்கம் முழுதும் இரசிகர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

விழாவில் சேரன் பேசும்போது கூறியதாவது:

பஸ் கண்டக்டர் சிவாஜி ராவை 'சூப்பர் ஸ்டார்' ஆக்கியது நீங்கள்தான். பரமக்குடி சிறுவன் கமல்ஹாசனை 'உலக நாயகன்' ஆக்கினீர்கள். டைரக்டர் மகன் விஜய்யை 'இளைய தளபதி' ஆக்கினீர்கள். அஜீத்தை 'அல்டிமேட் ஸ்டார்' ஆக்கினீர்கள்.

இவ்வளவு பெரிய நட்சத்திரங்களை உருவாக்கிய நீங்கள், உங்களில் ஒருவனாக என்னை, எனது படத்தை 100நாள் ஓடச்செய்து எனக்கும் ஒரு இடம் அளித்துள்ளீர்கள்.

இந்தத் திரை உங்களால் வாழ்கிறது. இது சேரனுக்குக் கிடைத்த வெற்றி அல்ல. இங்கிருக்கும் அனைத்துக் கலைஞர்களுக்கும் கிடைத்த வெற்றி.

இந்தப் படம் எடுக்க பணமே இல்லை. யாருமே என்னை நம்பவும் இல்லை. நல்ல நண்பர்களால்தான் இதைச் சாதித்தேன். இதில் நடித்த நடிகைகளுக்குக் கூட படம் முடிந்த பிறகுதான் சம்பளம் தந்தேன். இன்னும் கூட சிலருக்குப் பாக்கி இருக்கிறது.

இந்தப் படத்தில் நடிப்பதற்காக இரண்டு முன்னணி நடிகைகளை அணுகினேன். ஆனால், அவர்கள் என்னுடன் நடிக்க மறுத்து விட்டார்கள். சேரன் கறுப்பா இருக்கான். இங்கிலீஷ் பேசத் தெரியாது. சேரன் அழகா இல்லை என்று கேவலமாகக் கருதினார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் சிநேகா, 'நான் நடிக்கிறேன்' என்று சொல்லி, 30 நாள் இரவு, பகல் பாராமல் கஷ்டப்பட்டு நடித்தார். என் வாழ்நாள் முழுக்க சிநேகாவுக்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்.

இரசிகர்களாகிய நீங்கள் எப்போது வேண்டுமானாலும் என்னுடன் பேசலாம். எனது தொலைபேசி எண் : 28343737. உங்ககிட்ட மண்டியிடறதைத் தவிர எனக்கு நன்றி சொல்லத் தெரியலை!

இவ்வாறு சேரன் பேசினார்.



பாலா - சாயாசிங்

# தமிழில் கலக்க வருகிறது மலையாளப் படம்!


ஏராளமான தெலுங்குப் படங்கள் ரீமேக் செய்யப்பட்டு சமீப காலங்களாகப் பெரும் வெற்றி பெற்று வருகின்றன.

இந்த நிலையில் இந்தியில் மிகப் பெரிய வெற்றி கண்ட 'முன்னாபாய் எம்.பி.பி.எஸ்.' படம் தமிழில் 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்.' என்ற பெயரில் கமல் நடிக்கத் தயாராகி வருகிறது.

இதே பாணியில் '4 ஸ்டுடண்ட்ஸ்' என்ற பெயரில் ஒரு படம் தமிழில் தயாரிக்க ஆயத்தப் பணிகள் நடந்து வருகின்றன. இது மலையாளத்தில் வெளிவந்த 'போர் தி பியூப்பிள்' என்ற படமாகும். இந்தப் படம் கேரளத்தில் சக்கைப் போடு போட்டு வருகிறது. படம் மட்டும் அல்லாமல் இதில் வரும் அனைத்துப் பாடல்களுமே சூப்பர் ஹிட்டாகியுள்ளன.

'பாய்ஸ்' படத்தில் நடித்துள்ள பரத், கோபிகா, பிரணதி, தாரிகா ஆகியோர் இதில் நடித்துள்ளனர். இவர்கள் அனைவருமே தமிழில் அறிமுகமானவர்கள் என்றாலும், இங்கு கிடைக்காத புகழ் மலையாளத்தில் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழில் தயாராகும் '4 ஸ்டுடண்ட்ஸ்' படத்திலும் இவர்களே நடிக்கிறார்கள்.



# ரஜினிக்கு அப்பல லோவில் உதடு அழகு சிகிச்சை


நடிகர் ரஜினிகாந்த்துக்கு சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் உதடு அழகுச் சிகிச்சை நடைபெற்றது.

திங்கட்கிழமை இரவு அப்பல்லோ மருத்துவமனைக்கு ரஜினி சென்றார். இரத்தப் பரிசோதனை ஈ.சி.ஜி உள்ளிட்ட பரிசோதனைகள் செய்யப்பட்ட பின்னர் அவர் உதடு அழகுபடுத்தும் சிகிச்சை செய்து கொண்டார்.

இது சாதாரணமானதுதான் என ரஜினிக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

ரஜினியின் உதட்டில் இருக்கும் வெள்ளை தழும்புகளை நீக்க பிளாஸ்டிக் சர்ஜரி நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. ஜக்குபாய் படத்துக்காக இந்த சர்ஜரி நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது. சிகிச்சை முடிந்ததும் தனது பண்ணை வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார் ரஜினி.

# எம்.குமரன் சன் ஆப் மகாலட்சுமி பற்றி ஜெயம் ரவி !



**எம்**.குமரன் சன் ஆப் மகாலட்சுமி படம் எப்படி இருக்கும்? ஜெயம் ரவியைச் சந்தித்துப் பேசினோம். நீண்ட நேரம் மிக மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்தார் ரவி.

*** ஜெயம் படத்துக்குப் பிறகு ஏன் நீண்ட இடைவெளி?**

ஜெயம் படம் பண்ணும் போது நிச்ச யமா ஓடும். ஆனா எவ்வளவு நாள் ஓடும்னு தெரியாது. படம் வந்தபிறகு அது தமிழ் சினிமாவின் போக்கையே மாத்திடுச்சி. எனவே, ஜெயம் படத்தை விடவும் ஒரு நல்ல படத்தைத் தர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. இதைச் சரியாகச் செய்யவேண்டுமே என்பதற்காக ஒரு நல்ல கதைக்குக் காத்திருந்தேன்.

*** எம்.குமரன் சன் ஆப் மகாலட்சுமி எப்படி முடிவாகியது?**

கிட்டத்தட்ட 60 கதைகள் கேட்டோம். அவை எதுவுமே திருப்தியாக இல்லை. இதன் பிறகுதான் தெலுங்கில் இருந்து இந்தக் கதையை ரீமேக் செய்யலாம் என்று முடிவெடுத்தோம்.

*** சரி, எம்.குமரன் சன் ஆப் மகாலட்சுமி எப்படி இருக்கும்?**

நிச்சயமா ஜெயம் படத்தை விட பெரிய அளவில் பேசப்படும். தாயும் மகனும் - தந்தையும் மகனும் அன்பு காட்டற படம் எத்தனையோ வந்திருக்கு. இது இரண்டு பேர் கிட்டேயும் சரி பாதி அன்பு காட்டுகிற கதை. ரீமேக் படம் என்றாலும் கதைக் கருவை மட்டும் எடுத்துக்கொண்டு அமைத்திருக்கிறோம். ஆக்ஷன், லவ், செண்டிமெண்ட் எல்லாமே இருக்கும்.

*** சில முக்கிய விசேஷங்களைச் சொல்லுங்களேன்?**

படத்தில் நான் பாக்ஸராக வருகிறேன். இதற்காக தினமும் 3மணி நேரம் எக்சர்சைஸ் செய்து பாடியை ஏற்றியிருக்கிறேன். ஜெயம் படத்தின் போது 70 கிலோ இருந்த நான் இப்போது 74 கிலோ.

12 வயதிலேயே நான் பரதநாட்டியம் அரங்கேற்றியவன். இந்தப் படத்தில் நதியா மேடத்துடன் பரதநாட்டியம் ஆடுகிற மாதிரி ஒரு காட்சி. நிச்சயம் நல்ல வரவேற்பு இருக்கும்.

*** நதியா பற்றி உங்கள் அபிப்பிராயம்?**

உண்மையிலேயே நதியா மேடம் இந்தப் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டது எங்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய வரப்பிரசாதம். மொத்தம் 45 நாள் நடிச்சாங்க. கொஞ்சம் கூட பந்தா கிடையாது. படப்பிடிப்பு முடிந்து அவர் பிரியும்போது, ரொம்ப மனசுக்குக் கஷ்டமாக இருந்தது. என்னால் மறக்க முடியாத அனுபவம் அது.

*** முதல் படமும் ரீமேக். இதுவும் ரீமேக். அதே டைரக்டர். அதே தயாரிப்பாளர். என்ன விசேஷம்?**

இது எதிர்பாராமல் நடந்த ஒற்றுமை. இது மட்டுமல்ல, ஜெயம் படத்தில் எப்படி இடைவேளைக்குப் பிறகு க்ளைமாக்ஸ் தொடங்கி விடுகிறதோ, அதேபோல்தான் இந்தப் படத்திலும் இடைவேளை முடிந்ததுமே க்ளைமாக்ஸ் தொடங்கி விடும்.

*** ஜெயம் ரவிக்கும், குமரன் ரவிக்கும் என்ன வித்தியாசம்?**

4 கிலோ எடை கூடியிருக்கிறேன் என்பதைத் தவிர, நான் நானாகவேதான் இருக்கிறேன். மற்றபடி படத்தைப் பார்த்து விட்டு நீங்கள்தான் சொல்ல வேண்டும்.

ஜெயம் ரவியிடம் இருந்து விடை பெற்றுக்கொண்டோம்.






**இந்தியத்** தமிழ் சினிமாவில் நடிக்க விரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும்.
(இலவசமாக படப்பிடிப்பு)

**Director**
**No. 9 1/1, Hamden Lane, Wellawatta, Colombo - 06.**


## ஜூலை 5ஆம் தேதி பாலா திருமணம்!

**சே**து, நந்தா, பிதாமகன் என தமிழ் சினிமாவில் வித்தியாசமான படங்களை வழங்கி, தனக்கெனத் தனி இடத்தைத் தக்க வைத்துக் கொண்டவர் டைரக்டர் பாலா.

கடந்த ஏப்ரல் மாதம் டைரக்டர் பாலாவுக்கும், அவரது உறவுக்காரப் பெண்ணுக்கும் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டது.

இவர்கள் திருமணம் ஜூலை மாதம் 5ஆம் திகதி திங்கள்கிழமை மதுரையில் நடக்கிறது. பாலா திருமணத்துக்கான வரவேற்பு ஏற்பாடுகள் தடபுடலாக நடந்து வருகின்றன. முக்கிய வி.ஐ.பி.க்கள், நடிகர், நடிகையர், பத்திரிகையாளர்களுக்குத் தங்கும் வசதிக்காக இப்போதே அறைகள் ஒதுக்கப்பட்டுவிட்டன. திருமணத்துக்குப்பின் டைரக்டர் பாலா தனது மனைவியுடன் சென்னையில் தனிக்குடித்தனம் நடத்த இருக்கிறார்.

# சிக்கலில் தனுஷ், வடிவேலு



படம் : ஏய்
சரத்குமார் - நமிதா

**ந**டிக்க ஒப்புக்கொண்டு அட்வான்ஸும் வாங்கிக் கொண்டு நடிக்க மறுத்ததால் வடிவேலுவுக்கு தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் தடை விதித்துள்ளது.

இதேபோல, ட்ரீம்ஸ் படத்தை தனுஷ் முடித்துக் கொடுக்காமல், சுள்ளான் படத்தை திரையிட விடுவதில்லை என்று அவருக்கும் தடை விதிக்க முயற்சிகள் நடந்து வருகின்றன.

மறைந்த படத் தயாரிப்பாளர் ஜீ.வியின் படத்தில் நடிக்க நடிகர் வடிவேலு ரூ.2லட்சம் அட்வான்ஸ் வாங்கியிருந்தார். ஜீ.வி. மறைவினால் அந்தப் படம் எடுக்கப்படவில்லை. இதைத் தொடர்ந்து வாங்கிய அட்வான்ஸை திருப்பித் தருமாறு வடிவேலுவை ஜீ.வி.குடும்பத்தினர் கேட்டுக் கொண்டனர்.

இந்தா தர்றேன், அந்தா தர்றேன் என்று இழுத்தடித்த வடிவேலு, கடைசி வரை பணத்தைக் கொடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் நொந்து போன ஜீ.வி.குடும்பத்தினர் தயாரிப்பாளர் சங்கத்தில் புகார் கொடுத்துள்ளனர்.

இதேபோல, மதனகோபால் என்ற தயாரிப்பாளரிடம் வடிவேலு ரூ.1 இலட்சம் அட்வான்ஸ் வாங்கிக் கொண்டு திருப்பித் தரவில்லை என்?று தெரிகிறது. அவரும் தயாரிப்பாளர் சங்கத்தில் புகார் கொடுத்தார்.

இரு புகார்களையும் விசாரித்த தயாரிப்பாளர் சங்கம், புதிய படங்களில் நடிக்க ஒப்புக்கொள்வதற்குமுன் தங்களிடம் அனுமதி பெற வேண்டும் என்று வடிவேலுவுக்கு உத்தரவிட்டுள்ளது. இதனால் புதிய படங்களில் வடிவேலு நடிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இதேபோல நடிகர் தனுஷ் நடித்துள்ள சுள்ளான் படத்தை தடை செய்யவும் சிலர் முயற்சி மேற்கொண்டுள்ளர். ட்ரீம்ஸ் படத்தில் நடிப்பதாகக் கூறிவிட்டு, பின்னர் மறுத்ததால் அந்தப் படத்தின் தயாரிப்பாளர்கள் நீதிமன்றத்தை அணுகினர். பின்னர் நீதிமன்றத்திற்கு வெளியே இரு தரப்பும் ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

இந் நிலையில் பாலுமகேந்திராவின் ஒரு கனாக் காலம், தேவதை யைக் கண்டேன் என சில படங்களில் புக் ஆன தனுஷ், அவற்றை ஒதுக்கி விட்டு சுள்ளான் படத்திற்கு அதிக முக்கியத் துவம் கொடுத்து நடித்து வந்தார். தற்போது படம் முடிவடைந்து ரிலீஸுக்கும் தயாராகி விட்டது.

ஆனால், சமரசத் திட்டத்தில் ஒப்புக்கொண்டபடி ட்ரீம்ஸ் படத்தில் நடித்து முடித்து விட்டுத்தான் தனுசின் சுள்ளான் படத்தை ரிலீஸ் செய்ய வேண்டும் என்று ட்ரீம்ஸ் தயாரிப்பாளர்கள் தற்போது தனுஷை நெருக்கி வருகின்றனர். இதற்கு தனுஷ் ஒப்புக்கொள்ளாவிட்டால் அவரது படத்திற்குத் தடை விதிக்க தயாரிப்பாளர் சங்கத்தின் உதவியை நாடப் போவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.



படம் : சுள்ளான்
தனுஷ் - சங்கவி




## ‘கணவன்’ இறைச்சி சாப்பிட்ட மனைவி



கால ஓட்டங்கள் மனிதர்கள்
முன்பாக மனிதர்களை
மறைத்தும் மறைக்கத் தோன்றாமல்
மறுத்தும் வருகின்ற ஒரு நிலை
உலகில் சுழன்றுகொண்டிருக்கிறது

மகளைத் தகப்பனும், தாயை
மகனும், சகோதரிகளைச்
சகோதரர்களும், பேத்திகளைத்
தாத்தாமார்களும் எனக்
கற்பழிப்புக் கொலைகள்
நாளாந்தம் நடந்துவரும் பூமி

பரீட்சை எழுதப் பள்ளிக்கூடம்
சென்ற மாணவியை
‘பொசன்’ தினத்தன்று
பாலியல் பூஜை நடத்தியவர்கள்
சொந்த மனைவியையே
விபசாரச் சிக்கலில் மாட்டிவிட்டு
‘தூள்’ அடித்துக்கொண்டிருக்கும்
கணவன்கள்,

அரசியலில் அற்ப காரணத்தினால்
மதகுருவையே தாக்கித்
தூக்கிச் சென்று
கள்ளக் கையெழுத்து வாங்கும்
தர்ம தேசத்து மதகுரு
தலைவர்கள்,

ஏழைகளின் தலையாவது
நனையாதிருக்கட்டும் என
இந்தியா கொடுத்த
கூரைத் தகடுகளை
களவில் விற்றுத் தங்கள் வயிற்றை
மூடியவர்கள்,

‘பலகாரத்’ துண்டொன்றை
பசியாற உண்டதற்காய்
மகளின் கையில்
கொதி எண்ணெய் ஊற்றிய
சிற்றன்னை -
விபசார விடுதி நடாத்தி
பொலிஸில் சிக்கிய
78 வயது தாய் -
‘குடிக்க’ப் பணம் தராத
கோபம் காரணமாக
12 வருடம்
மலசல கூடமொன்றில்
தனித்து வாழ்ந்த கணவன் -
என

இலங்கையின் கலாசாரம்,
பண்பாட்டு விழுமியங்கள்
அலையடித்துக் கொண்டிருக்கையில் -
நேபாள மனைவிக்கு
கணவனின் இறைச்சி
கேட்டிருக்கிறது!
இந்திரா ஷமோ் நம் எனும்

மூன்று பிள்ளைகளின் தாய் -
மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி,
கோழி இறைச்சி இன்னும்
இன்னும் இறைச்சிகளெல்லாம்
போய்
கணவன் இறைச்சியில்
காதல் கொண்டதால்

48 வயதுடைய
கோபி கிருஷ்னன் பலியானார்.
நித்திரையில் இருந்த அவருக்கு
மனைவியின் ஆசை
கனவில் கூடத் தெரிந்திருக்க
நியாயமில்லை
தெரிந்திருந்தால் ஒருவேளை
மனைவியின் ஆசை
நப்பாசையாகவே இருந்திருக்கக் கூடும்

விழித்தெழு முன் அவள்
அவனை அறுப்பதில்
விழித்துக்கொண்டாள்

கடந்த இருபத்தைந்தாம் திகதி
கணவன் இறைச்சியாக்கப்பட்டிருக்கிறான்

தொடர்ந்து ஐந்து நாட்கள்
உடம்பின் பாகங்களை
சிறு, சிறு துண்டங்களாக
அறுத்து
ருசித்துச் சாப்பிட்டுள்ளாள்

தனியறை மூடி
நடந்த கதையால்
ஐந்து நாட்களாக
தாய், தந்தை காணாத
பிள்ளைகள்
புகார் செய்ய -
துர்வாடையும் எழ -
அக்கம் பக்கத்தார் வந்து
அறை உடைத்துப் பார்க்கும்போது
கோபி கிருஷ்ணனின் தலை
ஆவி பறக்க
‘பிரஷர்’ குக்கரில்
உணவுக்குத் தயாராகக்
காத்திருந்ததாம்.
அத்துடன் ஒரு ஜாடியில்
இரத்தமும் காணப்பட்டதாம்.
கணவனைக் கொன்றதாக
ஒப்புக்கொண்ட மனைவி
மன்நோய் கொண்டவளா
எனச் சோதனை
நடாத்தப்படுகிறது..
அடிப்பாவி!
இனியெப்படி
“பெய்யெனப் பெய்யும்?”

- இப்னு அஸாமத் -

## ஆறுதலைத் ★ சிதைவுகள்...

## தேடி...!

பிரபஞ்சங்கள் அனைத்தும்
உறங்கிக் கிடந்தாலும்...
உன் நினைவுகளால்
மூடாத என் விழிகளுடன்
மீண்டும் ஒரு
கண்ணீர்க் காவியம்...!

கலைந்திட்ட என்
காதலுக்கும் - காயப்பட்ட
என் இதயத்துக்கும்...
கவிதைப் பூக்களில்
ஒத்தடம் தேடுகிறேன்!

கடந்து செல்கின்ற
காலத்தின் கதியில்...
நாதியற்று
கண்ணீர் வடிப்பது,
நானன்றோ...!

இங்கு உனக்காக - நான்
செத்துக்கொண்டிருக்கிறேன்!
என் இதயத்தின் கதறலும்...
ஒப்பாரி ராகமும்...
உன் காதுகளை
எட்டவில்லையா...?

உன் ஞாபக வெப்பத்தில்
தினம் தினம்
வற்றிக்கொண்டிருக்கும்
என் உதிரத் துளிகள்
முழுமையாய்
காய்ந்து விடுமுன்...
ஒரு நகலாவது...
எத்திவை!

– ஜனா,
எருக்கலம்பிட்டி.

உரிமைகள்,
மறுக்கப்பட்டவனாய்...
நானிருந்தும்
விதிக்கப்பட்ட
தண்டனைகளை
சிறைக்குப் பின்னால்
தினமும்
செதுக்கிக்கொள்கிறார்கள்
அவர்கள்.

உணர்வுகளெல்லாம்
மரத்துப்போயும்
உரிமைப் போராட்டம்
எனக்குள்...
இன்னும்
ஊசலாடிக்கொள்கிறது
அவர்களுக்கெதிராக...

விழுகின்ற
அடிகளுக்குப் பின்னால்
விதியென்பதை
நினைத்துவிட்டு,
தாயன்பின்,
நினைவினைக் கொண்டு
தழும்புகளை மட்டும்
ஆற்றிக்கொள்கிறேன்!

இருட்டறை வாழ்க்கை
இம்சைப்படும்
போதெல்லாம்...
சிறைச்சாலைக் கம்பியோடு
சிலநேரம்,
சண்டையிட்டவனாக...
அமைதி காண்கிறது
என்னுள்ளம்.

இன்னும்...
எத்தனை பொழுதுகள்
இச்சிதைவுகள்...
இருட்டறை கடந்து
வெளியுலகில்...
வீறு நடைபோடுமோ!
அதற்குள்...
என்னாயுள்...?

– செயின் தம்பி ஸியாம்,
கல்முனை – 06.

## காதல் ஜாதி

லைலா எனப்படுபவளே
என்
புன்னகைத்
திரையரங்குகளில்
சப்தங்களின் நிச்சயதார்த்தம்...
பூக்களின் தொப்புள் கொடியில்
ஷேக்ஸ்பியரின்
சொற்றொடர்கள்...

உன் சிரிப்பொலியில்
இத்தனை சிறப்பம்சங்களா...?


இந்த மஜ்னுவின்
விழித்திரையில்
ஈரநிலாவின் ஒலிபரப்பு,
ஆதாம் ஏவாள்
எச்சில்படுத்திய
ஒக்ஸிஜன் துணுக்குகள்!

ஓ... லைலா
உனக்காக புதிய கிரகம்
கண்டு பிடித்தேன்
இங்கே ஜிப்ரானின் கவிதைகள்
இலவசம்...
தங்கத்தில் நிலவு...
பூக்களால் மழைவீழ்ச்சி
மேகங்களால் ஒரு மெத்தை...
தினந்தோறும் வானவில்...
வருடம் முழுக்க விடுமுறை...
வா...
புதுக்குடித்தனம் நடாத்துவோம்!

உனது சுடிதார் சோலையில்
எனது வண்ணத்துப்பூச்சிக்கு
விருந்தோம்பல் நிகழ்த்து...
உனக்குப் பணிவிடை புரிய
என் வாலிபத்திற்கு
அழைப்பிதழ் அனுப்பு...!

எனைத் திரும்பிப் பார்
உனைப் பார்த்துவிட்டு
பாடையில் போகிறேன்...!

– நியாஸ் முஸாதிக்,
கிண்ணியா – 05.



## என் உயிர் நீயம்மா

நிலா காட்டிச் சோறூட்ட
நித்தம் இங்கு நீயுமில்லை
உன் நிழல் வழியே நடைபயில
அம்மா உன் விரலுமில்லை...

சுட்டித்தனம் காட்டிவிட்டு
ஒட்டிக்கொள்ள நீயுமில்லை
பகலெல்லாம் உனை
சுற்றிவந்து
இரவில் படுத்துறங்க உன்
மடியுமில்லை.

கண் விழித்த நாள் முதலாய்
என் கண்ணில் கூடப்
பட்டதில்லை
என்ன பாவம் செய்தேனோ
உன் காலைக் கூடத்
தொட்டதில்லை.

பத்து மாதம் அவஸ்தைப்
பட்டு - எனை
பத்திரமாய் பாரில் விட்டு
நீ மட்டும் சென்றதேனம்மா?...

அடி வயிற்றில் உதைத்தபோது
வலிக்குதென்று
சொல்லியிருந்தால்
கருவிலேயே கலைந்திருப்பேன்
நானம்மா...

– ஆர். பிரேம்,
சங்கமன் கிராமம்,
தாண்டியடி.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

கவிதையின் சிறப்பு, அதன் மொழியைக் காத்திரமாகவும் அதேசமயம் மிகவும் சிக்கனமாகவும் பயன் கொள்கிற பாங்கில் அமைகிறது. வாக்கியங்கள் இறுகும்போது வார்த்தைகளும் அதன் அர்த்தப் பரிமாணங்களும் பல தொனிகளைப் பெறுகின்றன. இந்த அம்சமே மொழியின் சாதாரண பயன்பாடுகளை மீறிய புதியதான வீச்சுக்களுக்குக் கவிதையை இட்டுச் செல்கிறது. இளைய கவிஞர்களில் ஒருவரான எஸ்.ஆர்.ஸ்ரீநிவாஸ் அதிகம் எழுதியவரல்ல. பத்திரிகைகள் எவற்றிலும் இவர் கவிதைகள் பிரசுரமானதில்லை. இரண்டு சிறிய கவிதைத் தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறார். அன்றாட வாழ்வின் நிகழ்வுகளில் மனம் கொள்ளும் பேதமைகளைச் சுட்டி நிற்கும் கவிதைகள்.

எஸ்.ஆர்.ஸ்ரீநிவாஸின் ‘ஏதுமறியாத இறகு’ தொகுதியிலிருந்து சில கவிதைகள்.



### நாயின் மரணம்

அகன்ற தார்ச்சாலையின் நடுவே
கனரக வாகனமொன்றில்
அடிபட்ட நாயினுடல் கிடந்தது.
அதன் மீது
நெடுஞ்சாலையின் அமைதியைக் குலைத்தவாறு
வந்துகொண்டிருந்த டிராக்டர் ஒன்றின்
பெருஞ் சக்கரமொன்றேறி
குறியும் - குடல் பகுதியும் சிதறிப் பரவியது.

வட்டமிட்டுக் கொண்டிருந்த
காக்கைகளில் ஒன்று
அவைகளை லாவகமாக கொத்திச் சென்றது.

அவ்வழியே சென்ற மூவரில் ஒருவன்
சிதைந்த நாயைப் பார்த்துச் சொன்னான்.
இதற்கு நேற்றிரவு இரவுச்சாப்பாடு அளித்தேன்.

மற்றொருவன் கூறினான்
எங்கள் தெருநாய்களோடு சண்டையிட்டு
தோற்றோடியது என்று

மூன்றாமவன்
இந்த நாய்தான் எங்கள் வீட்டு
நாய்களிலொன்றைப் புணர்ந்ததென்று

ஒரு நாயின் மரணம்
இவ்வாறு காற்றின் பேரேடுகளில்
குறிக்கப்பட்டது.

### ஷியாம் சுந்தருடன் கவிதையெழுதுதல்

மொழிகளில் சிக்கித் தெளிவு தேடும்
அயர்ச்சியில்
தொலைக்காட்சிப் பெட்டியின் பக்கம் பார்க்க
அறியா குழந்தைச் சிறுவன்
டி.வி.யெல்லாம் பார்க்காத மாமா!
எழுது மாமா! எழுது என்றான்
அவன்
குரல் கேட்டு எழுதுகோலின் முனை பார்த்து
காத்திருந்தேன்.

இருளமைதியின் தூக்கத்திலமிழ்ந்த போதும்
இடைவிழித்துக் கூறினான்
“நான்தான் உன் பக்கத்திலேயே
இருக்கேன்ல
வேடிக்கை பார்க்காத மாமா!
எழுது மாமா! எழுது...” என்றெனது
வெறுமையை உடைத்தருகில் வந்தவன்
இருக்கையின் கையில் சாய்ந்து
விடிவெள்ளியின் வருகையுணர்த்தி
கண்ணயர்ந்தான்.

### உயிர் உயிர்த்திருக்க

காத்திருந்ததிலிருந்து
கரம் பற்றிய முதலாய்
என்னை உன்னுள் பொழிந்தேன்

உயிர்ப்பிண்டம் துளிர்க்கையில்
ஒற்றைக் குளிகையால்
அணுவெடித்த பிரதேசமாக்கிவிட்டாய்.

கலைத்தது யாதென்றறியாது
பெருமூச்செறிந்து சுவாசத்தை நிறுத்தி
காற்றோடு கரைந்து கதறுகிறேன்

சோகங்களில் இற்றுப் போனதென்
நாடி நரம்புகளை உயிர்த்திருக்க
வேண்டுகிறேன் - மீண்டும்
என்னை உன்னுள் பொழிய.

### சிதைவு

வேரைப் பிளக்கும் உன்னுடைய
வார்த்தையைப் பற்றி
துளிகளுக்குள் நுழைகிறேன்
பிரமிப்புமில்லை - சலிப்புமில்லை
ஒவ்வொரு துளியும்
ஒவ்வொரு உலகமாய் சிதைந்தவாறு.

### அடையாளம்

பயணத்தினூடே
பச்சிளஞ் குழந்தை
பார்த்தது - பார்த்தேன்.

என்னைப் பற்றி
எனக்குத் தெரியாது
அதைப் பற்றி
அதற்குத் தெரியாது

நாங்களிருவரும்
சிரித்துக் கொண்டோம்.

### தனியறைச் சலனம்

அறையின் மூலையில்
அலைந்து கொண்டிருந்தது
மயிர்ச் சுருள்.

சுழன்று கொண்டிருக்கிறேன்
சுருள்களுக்குள் சுருள் சுருளாய்.

### அப்பால்

நடந்தேன்
பாதை இருந்தது.
கடந்தேன்.
நீ இருந்தாய்.


## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி



பெயர் : பி.செல்வன்
வயது : 21
முகவரி : அரச பண்ணை விடுதி, யாழ் வீதி, தாண்டிக்குளம், வவுனியா.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை.



பெயர் : எஸ்.சாந்தி
வயது : 22
முகவரி : C/o Mohamad Qabouq, P.O.Box 15008, Amman merka, Amman Jordan.
E-mail : shanthymathavan@yahoo.com
பொழுதுபோக்கு : பத்திரிகை, வானொலி.



பெயர் : கா.ஜெயசிறிதரன்
வயது : 19
முகவரி : மெயின் வீதி, திருக்கோவில்—03
பொழுதுபோக்கு : பத்திரிகை, வானொலி.



பெயர் : ரி.அகிலா
வயது : 21
முகவரி : C.C.பாடசாலை ஒழுங்கை, கோப்பாய் மத்தி கோப்பாய்.
பொழுதுபோக்கு : வழமையானவை




# குழந்தை பயப்படுகிறதா...?

குழந்தைகளின் பயங்கள் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டியவை. அப்படியே விட்டால் அது நாளடைவில் அவர்களை தன்னம்பிக்கை இல்லாத மனிதர்களாக மாற்றி விடும். உங்கள் குழந்தையின் பயங்களைப் போக்க இதோ சில ஆலோசனைகள்...

குழந்தைகளின் வயதுக்கேற்ப, அவர்களின் பய உணர்வுகளும் மாறுகின்றன.

பிறந்த குழந்தைக்குப் புதிய பொருட்களும், சத்தங்களும் பயத்தை உண்டாக்கலாம்.

ஒன்றிரண்டு வயதுக் குழந்தைக்கு அம்மா - அப்பாவின் பிரிவும், தனிமையும் பயமுண்டாக்கலாம்.

அதற்கடுத்த வயதில் உள்ள குழந்தைகளுக்கு இருட்டு, பிராணிகள் போன்ற விஷயங்கள் பயம் தரலாம்.

ஐந்து, அதற்கு மேலான வயதுக் குழந்தைகளுக்கு குடும்பத்தாரின் மரணம் உண்டாக்கிய பயம், பள்ளிக்கூட பயம், ஆசிரியர் பயம் போன்றவை இருக்கலாம்.

அதற்கடுத்து பாடங்களைப் படிப்பதில் உள்ள சிரமமும், பரீட்சையில் தோல்வியும் ஒருவித பயத்தை ஏற்படுத்தும்.

**பிள்ளைகளின் பயத்தை எப்படிப் போக்குவது?**

வீட்டுச் சூழல் அமைதியானதாக, நட்பானதாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். தான் பயப்படும் விஷயங்களைக் குழந்தை பெற்றோரிடம் வாய் திறந்து சொல்லும் அளவுக்காவது வீட்டுச் சூழல் சகஜமானதாக இருக்க வேண்டும்.

குழந்தை ஒரு விஷயத்தைக் கண்டு பயப்படுகிறதா? அதைச் செய்யச் சொல்லி, அதன் பயத்தை அதிகரிக்காதீர்கள். உதாரணத்துக்கு உங்கள் குழந்தைக்கு நாய் என்றால் பயம் என்று வைத்துக் கொள்ளுங்கள். குழந்தையைக் கட்டாயப்படுத்தி நாயிடம் அழைத்துச் செல்வது, தொட வைப்பது போன்றவை வேண்டாம். அதே மாதிரி புதிய மனிதர் யாரையாவது கண்டு குழந்தை பயப்படுகிறதா?

அதை வற்புறுத்தி அந்த மனிதரின் கைகளில் தூக்கிக் கொடுப்பதுதான் பயத்தைப் போக்கும் என நினைக்காதீர்கள். குழந்தை அந்த நபரிடம் இயல்பாக இருக்கட்டும். ஆபத்தில்லாத நபர்தான் என்ற நம்பிக்கை வந்த பிறகு குழந்தை தானாகவே அவரிடம் சகஜமாகும்.

குழந்தைக்குக் குறிப்பிட்ட ஏதோ ஒரு பொம்மையைக் கண்டால் பயமா? அந்த பொம்மையைத் தற்காலிகமாக அப்புறப்படுத்துங்கள்.



வீடு மாறி புதிய வீட்டுக்குப் போவதுகூட சில குழந்தைகளுக்குப் பயத்தை உண்டாக்கும். முன்னதாகவே புதிய வீட்டைப் பற்றி பாசிட்டிவான விஷயங்களைக் குழந்தையிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

விடுமுறை நாட்களில் குழந்தைகளை வெளியூருக்கு அனுப்புகிறீர்களா? பெற்றவர்களைப் பிரிவதால் ஏற்படுகிற பயம் குழந்தைகளிடம் ரொம்பவும் சகஜம். ஊருக்கு அனுப்பும் முன்னரே, குழந்தையிடம் அதைப் பற்றிப் பேசி மனத்தளவில் தயாராக்குங்கள். முன்பின் அறிமுகம் இல்லாத நண்பர்கள், உறவினர்கள் வீடுகளுக்கு அனுப்புவதைவிட, குழந்தைகளுக்குப் பரிச்சயமானவர்கள், பிடித்தவர்கள் வீடுகளுக்கு அனுப்பிப் பழக்குங்கள்.

வைத்தியசாலை என்றாலே உங்கள் குழந்தை அலறுமா? திரும்பி வரும்போது குழந்தைக்குப் பிடித்த ஏதோ ஒன்றை நிறைவேற்றுவதாக வாக்குறுதி கொடுங்கள். பயத்தைப் போக்கும் வழிகளில் இதுவும் ஒன்று.

குழந்தைகள் முன்னிலையில் எக்காரணம் கொண்டும் சண்டையே போடாதீர்கள். எப்பேர்ப்பட்ட பிரச்சினையையும் அவர்கள் முன் பெரிதாக்காதீர்கள். தவிர்க்க முடியாமல் அப்படி நிகழ்ந்து விட்டாலும், சண்டை ஓய்ந்த பிறகு குழந்தையை அழைத்து அதை நீங்கள் எந்தளவு நேசிக்கிறீர்கள் என்று புரிய வையுங்கள்.

உங்கள் குழந்தை கூச்ச உணர்வுடனோ, தனிமை விரும்பியாகவோ இருந்தால் திட்டாதீர்கள். நட்பின் மகத்துவத்தைக் குழந்தைக்குப் புரிய வையுங்கள்.

நீச்சல், சைக்கிள் ஓட்டுதல் மாதிரி குறிப்பிட்ட விஷயங்களைச் செய்ய உங்கள் குழந்தை பயப்படுகிறதா? கட்டாயப்படுத்த வேண்டாம். அவர்களுக்குப் பிடித்த வேறு பொழுது போக்குகளில் ஈடுபடுத்துங்கள்.

பரீட்சைகளில் தோல்வியடைகிற போது திட்டாதீர்கள். அடுத்த முறை நன்றாக எழுத ஊக்கம் கொடுங்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக உங்கள் குழந்தைகளிடம் பெற்றோர் என்பதை மீறி நல்ல நண்பர்களாக இருங்கள்.

இது தவிர...

குழந்தைகளுக்கு நான்கைந்து வயதாகும் போதே தனியே படுக்க வைக்கப் பழக்குங்கள். குழந்தையின் அறை வண்ணமயமானதாக, அமைதியானதாக இருக்க வேண்டும்.

குழந்தையின் அருகில் உட்கார்ந்து அதன் விருப்பப்படி கதைகள் சொல்லுங்கள். தூங்கும் வரை அருகிலிருங்கள். ராத்திரி நேரங்களில் திகில் கதைகள் படிப்பதும், திகில் காட்சிகள் நிறைந்த படங்களைப் பார்ப்பதையும் தவிருங்கள். குழந்தை தூங்கும் அறை உங்கள் பார்வையில் படும்படி இருக்கட்டும். தேவைப்பட்டால் இடையில் சென்று ஒரு முறை சரி பார்க்கலாம்.

# பொடுகுத் தொல்லை போயே போச்!

*வீட்டிலேயே இருக்கு பியூட்டி பார்லர்!*

இப்போதெல்லால் வெளிர் பழுப்பு, அடர் பழுப்பு போன்ற நிறங்களில் கல்லூரி மாணவிகள் தங்களின் கூந்தல் நிறத்தை மாற்றிக் கொள்கிறார்கள். அது ஃபேஷனாக இருந்தாலும், முறையான பராமரிப்பின்றி அந்தக் கூந்தல் அதே நிறத்தில் வெளிறிப் போகும்போது 'செம்பட்டை முடி' என்றே அழைக்கப் படுகிறது.

செம்பட்டை முடிக்கு உடனடியாக ஆரோக்கியத் தோற்றம் தரவைக்கச் சுலபமான சிகிச்சை ஒன்று உண்டு.

பீட்ரூட் 1,

மருதாணி - 1கப்,

கத்தா (நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும்) - 2 கப்,

வெந்தயப் பவுடர் - 2 டீ ஸ்பூன் எடுத்துக் கொள்ளுங்கள்.

முதலில் பீட்ரூட்டை மசிய அரைத்துக் கொள்ளுங்கள். தண்ணீரை நன்றாகக் கொதிக்க வைத்து அதில், பீட்ரூட், கத்தா, வெந்தயப் பவுடர் போட்டு மூடி வைத்து இறக்குங்கள். இதன் சாறு தண்ணீரில் இறங்கி விடும். வெதுவெதுப்பு நிலையை அடைந்ததும் இந்தத் தண்ணீரை வடிகட்டி, மருதாணிப் பவுடர் கலந்து ஒரு இரவு வையுங்கள்.

மறுநாள் இந்தக் கலவையை கூந்தல் முழுக்கவும் பூசி, ஒரு மணி நேரம் கழித்துத் தலையை அலசுங்கள். தொடர்ந்து இப்படி நாலைந்து தடவை செய்தாலே கூந்தலின் நிறத்தில் நல்ல வித்தியாசம் தெரியும்.

'இதையெல்லாம் செய்ய எங்களுக்கு நேரம் ஏதுங்க?' என்பவர்களுக்கு கொஞ்சம் சுலபமான வைத்தியம் உண்டு. தேங்காயை நன்றாக அரைத்து, பால் எடுத்து, கூந்தலில் தேய்த்து அரைமணி நேரம் கழித்துத் தலையை அலசுங்கள். இதைத் தொடர்ந்து செய்து வந்தால் கூந்தல் பளபளக்கும்.

குழந்தைகள் நீச்சல் குளத்தில் நீந்தும்போதும்கூட தண்ணீரில் குளோரின் கலந்திருப்பதால் முடி செம்பட்டையாகும். ஒவ்வொரு முறை நீந்தியபிறகும் முடியை நல்ல தண்ணீரில் நன்றாக அலச வேண்டும். தலைக்கு 'ஷவர் கேப்' எனப்படுகிற சிறு தொப்பி அணிந்தும் நீந்தலாம்.

முடி கருகருவென்று வளர்வதில்லை என்பது நிறையப் பேரின் கவலை. இதற்கு சுலபமான சில கை வைத்தியங்கள் உண்டு.

சோற்றுக் கற்றாழையை வெட்டி, வெந்தயத்தை அதன் வெள்ளைப் பகுதியில் தூவி, மூடி வையுங்கள். இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்துப் பார்த்தால் வெந்தயம் நன்கு முளை விட்டு இருக்கும். அந்த வெந்தயத்தை எடுத்து, நிழலில் காயவைத்து, தேங்காய் எண்ணெயில் போட்டு, இந்த எண்ணெயைத் தொடர்ந்து தடவி வந்தால் முடி கருகருவென்று வளரும். இது உடலுக்குக் குளிர்ச்சியும்கூட. சைனஸ், தலைவலி இருப்பவர்கள் மட்டும் இதைத் தேய்க்கக் கூடாது.

அவர்களுக்கான இன்னொரு வைத்தியம் சொல்லட்டுமா?

கறிவேப்பிலையையும், பெரிய நெல்லிக்காயையும் நன்கு அரைத்து வடை மாதிரி தட்டிக் கொள்ளுங்கள். இந்த வடைகளைச் சுத்தமான தேங்காய் எண்ணெயில் போட்டு வெயிலில் இரண்டு வாரம் வையுங்கள். பச்சை நிறத்தில் கிடைக்கிற அந்தத் தேய்காய் எண்ணெயைத் தொடர்ந்து உபயோகித்து வந்தால், கன்னங்கரேலென்ற அழகு கூந்தல் கிடைக்கும்.



பொடுகுத் தொல்லை பெரும் தொல்லை. ஒருநாள் தலையை அலசவில்லையென்றால்கூட அரிப்பெடுத்து, காலி பண்ணிவிடும். இந்தப் பொடுகைக் காலி பண்ண சில டிப்ஸ்...

வசம்பைத் தேங்காய் எண்ணெயில் காய்ச்சி, அந்த எண்ணெயைத் தலைப்பகுதியில் படும்படி தேய்த்து, ஒரு மணி நேரம் ஊறவைத்து அலசி வந்தால் பொடுகு ஓடிப்போகும்.

தேங்காய் எண்ணெயுடன் வேப்பம்பூவைக் காய்ச்சி இந்த எண்ணெயைத் தொடர்ந்து தடவி வருவதும் நல்ல பலன் தரும்.

இன்னொரு வழியும் உண்டு. வேப்பிலை, வசம்பு, வால் மிளகு மூன்றையும் நன்கு அரைத்து, மயிர்க்கால்களிலும் தலையிலும் படும்படி, தடவி அரைமணி நேரம் கழித்துத் தலையை அலசுங்கள்.

"அட.... இப்போதெல்லாம் நீங்க தலையில கை வைக்கிறதே இல்லையே...?!" என்று அக்கம்பக்கத்துத் தோழிகள் ஆச்சரியப்படுவார்கள்.

# நலமாக வாழ்வோம்


## பஸ்சிமோத்தானாசனம்

***பஸ்சிமோத்தானாசனம் செய்வதால் ஏற்படும் பலன்கள்:***

1. தசைவலி, வாத கோளாறுகள் ஆகியவற்றைப் போக்குகிறது.

2. அதிக உடல் எடை, தொப்பை, தூக்க கலக்கம் ஆகியவற்றை குறைக்கிறது.

3. பசியின்மை, நீரழிவு, அஜீரணம், மலச்சிக்கல், கல்லீரல் அலற்சி, மண்ணீரல் வீக்கம் ஆகியவற்றைச் சரி செய்கிறது.



4. இடுப்பு வலி, மூலவியாதி, அடிக்கடி பேதி ஆகுதல் அல்லது மலம் போகுதல் ஆகியவற்றைப் போக்குகிறது.

5. நரம்பு மண்டலம் புத்துணர்ச்சி பெறுகிறது.

6. விந்து ஒழுக்கைத் தடுக்கிறது.

7. ஆண், பெண்களின் எல்லா வியாதிகளையும் இந்த ஆசனம் போக்கும் என்று யோக நூல்களில் காணப்படுகிறது.

8. நுரைமீரல், பலவீனத்தால் ஏற்படும் மூச்சு சம்பந்தமான நோய்களையும், நாளமில்லா சுரப்பிகள் சரியாக வேலை செய்யாத தன்மைகளையும் சரி செய்கிறது.

9. தொடர்ந்து செய்து வந்தால் மஞ்சள் காமாலை, புற்று நோய் ஆகியவை தோன்றுவதில்லை.

10. சிறு வயதிலிருந்து தொடர்ந்து செய்து வந்தால் 60 வயது ஆன பிறகும் தோல்களில் சுருக்கங்களோ, முடி நரைப்பதோ ஏற்படாது என்கிறது பழைய யோக நூல்கள்.

11. சிறுநீரகம், விந்துப்பை சம்பந்தமான குறைபாடுகளை வெகு சீக்கிரம் நீக்குகிறது.

12. உடல் உறவில் நாட்டமில்லாத மனமான பெண்கள், கணவனுக்குரிய சுகத்தை தர முடியாதவர்கள் இவ்வாசனம் செய்து வருவதன் மூலம் நல்ல ஆசைப் பெருக்கை அடைந்து கணவனுக்கு ஏற்ற சுகத்தைத் தர முடியும்.

13. பெரும்பாலும் பெண்களுக்கு சிறுநீரகம் மற்றும் கருப்பை வழியாகவே வியாதிகள் தோன்றுவதால் இந்த ஆசனத்தைச் செய்வதன் மூலம் தங்கள் உடலின் பூர்ண ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். குறிப்பாக கருப்பையில் தோன்றும் வியாதிகள் யாவும் பூரணமாக சரியாகும்.

14. பிரசவத்திற்குப் பிறகு ஏற்படும் அடி வயிற்றுப் பெருக்கத்தை இந்த ஆசனம் சரி செய்து விடும்.

15. குண்டலினி சக்தியை எழுப்புகிறது.

***செய்முறை:***

1. விரிப்பின் மீது கால்களை நீட்டி கிழக்கு திசை நோக்கி அமரவும்.

2. கைகளை பக்கவாட்டில் கொண்டுவந்து மடிக்காமல் தலைக்கு மேல் உயர்த்தவும்.

3. மெதுவாக முன்னால் குனிந்து கால்களை மடிக்காமல் கால் விரல்களைத் தொட முயற்சிக்கவும். கால் கட்டை விரல்களைப் பற்றி மேலும் குனிந்து நெற்றியை கால் முட்டிகளின் மீது வைத்து, கைகளை மடித்து, கை முட்டியை விரிப்பின் மீது வைக்கவும்.

4. சாதாரண மூச்சு, கண்கள் மூடியிருக்க வேண்டும். 50 எண்ணிக்கை இருக்கவும்.

5. கட்டை விரலைப் பிரித்து கைகளை நீட்டி மெதுவாக எழுந்து நிமிர்ந்து உட்காரவும். மறுமுறை செய்யவும். இரண்டிலிருந்து ஐந்து முறை வரை செய்யலாம்.

6. மூன்று மாதப் பயிற்சிக்குப் பிறகு மல்லாந்து படுத்து கைகளை தலைக்கு மேல் கொண்டு வந்து அப்படியே எழுந்து கால்களை மடிக்காமல் முன்னால் குனிந்தும் செய்யலாம். இந்த முறையால் அதிகப் பலனை அடையலாம்.

***குறிப்புகள்:***

1. அடி முதுகுவலி, முதுகுத்தண்டு கோளாறு உள்ளவர்கள் இந்த ஆசனத்தை செய்யக்கூடாது.

2. கல்லீரல், மண்ணீரல் வீக்கம், அல்சர் நோய் உள்ளவர்கள் அதிகம் சிரமம் எடுக்காமல் முடிந்தளவு செய்து வரவும். வலி தோன்றினால் சில நாட்கள் ஓய்வு எடுத்து பிறகு தொடரவும்.

3. இந்த ஆசனம் நின்று செய்யும் நிலையில் செய்யும்போது பாதஹஸ்தாசனம் என்றும், படுத்த நிலையில் செய்யும் போது ஹலாசனம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆனால், பலன்கள் வித்தியாசப்படும்.

# சமைப்போம் சுவைப்போம்

***தொகுத்துத் தருவது : ஷோபா***

## தேன் ஐஸ்கிரீம்

***தேவையான பொருட்கள் :***

| | |
|---|---|
| முட்டை வெள்ளைக்கரு | 5 |
| மில்லி பால் | 500 |
| மில்லி கிரீம் | 250 |
| கோப்பை தேன் | 1/2 |
| வெண்ணிலா எஸ்ஸென்ஸ் | 1 தேக்கரண்டி |

***செய்முறை:***

முட்டையையும் தேனையும் ஒரு பாத்திரத்தில் போட்டு நன்றாக அடித்துக்கொள்ளவும். பாலை ஒரு பாத்திரத்தில் அது கொதிநிலை வரும் வரை சூடாக்கவும். அதன் பின்னர் மெதுவான தீயாகக் குறைத்து விடவும். இதில் பால் தேன் கலவையைக் கொட்டி கெட்டியாகும் வரை கலக்கவும். இதனை தீயிலிருந்து எடுத்து வடிகட்டி குளிரவைக்கவும். இதில் கிரீமைச் சேர்த்து கலந்து வெண்ணிலா எஸ்ஸென்ஸ் கலந்து இதனை ஐஸ்கிரீம் கோப்பைகளில் ஊற்றி இரவு முழுவதும் உறையும் குளிர்சாதன பெட்டியில் உறைய வைக்கவும். அடுத்த நாள் எடுத்து உண்ணலாம்.

# துரோகம் ரத்துகிறது!

## அங்கம் 7



நெற்றியில் ஓர் உக்கிரம்! குங்குமப் பொட்டினாலா தெரியவில்லை. பார்வையிலும் பேச்சிலும் பத்திரகாளித்தனம்.

அப்பாவியான ஒரு பெண்மணியிடம் இதை எதிர்பார்க்கவில்லை.

ஆத்திரம் என்று வந்தால் இப்படி ஆகிவிடுவார்களோ?

"போ! போ! வெறும்னே திரும்பினா உயிரோட இருக்கமாட்டே!"

வாயில் தீ வீசியது.

இன்ஸ்பெக்டர் வீட்டுக்கு ஓடினான்.

மூன்று வாரமாகப் போய்கொண்டிருக்கிறான் 'செய்யலாம் செய்யலாம்' என்று சொல்லிக் கொண்டிருந்தார். நினைத்தால் முடியும்! கோர்ட்டா, கேஸா, வழக்கா? எமர்ஜென்ஸி ஆயிற்றே! நல்லவனைத் திருடன்னு சொல்லி உள்ளே போடலாம். திருடனை நல்லவன்னு சொல்லி வெளியே அனுப்பலாம்! அப்படித்தான் யோசிக்கறாங்க!

"இன்ஸ்பெக்டர் இருக்கிறாரா?"

உள்ளே வாளியை வைத்து ஒருவன் வெள்ளையடித்துக்கொண்டிருந்தான்.

"இன்ஸ்பெக்டர் ஐயாவா! மாத்திப் புட்டாங்க! வடக்கே போய்ட்டாங்க!"

கேட்டதற்கு மேலே ஒரு முழம் சொன்னான்.

'பொட்'டென்று மனசில் ஓட்டை.

நிஜந்தானா!


சொல்லாமல் கொள்ளாமல் இன்ஸ்பெக்டர் போய்டுவாரா? லீவா?

ஊர்ச் செய்தி எதுவுமே தெரிவதில்லை.

திரும்பினான்.

வேறு யாரைத் தெரியும் போலிஸில்?

எவரையும் தெரியாது. ஒரு இன்.ஃபார்மராகவே இருந்துவிட்டான். சீதாபதிக்கு மட்டும் அந்தரங்க சுத்தமாக! போலீசில் இது போன்ற இன்.ஃபார்மர்களைப் பற்றி ஒருத்தருக்கொருத்தர் பொதுவாகப் பேசிக்கொள்வதில்லை. அவரவர் தங்கள் தங்கள் மூலங்களை இரகசியமாக வைத்திருப்பார்கள். துப்புகளுக்குப் பணம் கொடுப்பது கூட நேரடியாக இன்.ஃபார்மர்களுக்குப் போகாது. அந்தந்த இன்ஸ்பெக்டர் மூலமாகத்தான் இன்.ஃபார்மர்களுக்குப் போகும். ஒவ்வோர் அதிகாரியும் தங்களது வெற்றிக்காக இந்த இரகசிய உறவுகளை வைத்திருப்பார்கள். சிலர் இன்.ஃபார்மர்களை மற்றவர்களுக்குக் காட்டவோ அறிமுகப்படுத்தவோ மாட்டார்கள்.



பொதுவான நிலைவரத்தில் இருந்த இந்த விஷயங்களை குரு அறிந்திருந்தான்.

அதனால்தான் இப்போது கலவரப் பட்டான்.

இன்ஸ். சீதாபதியும் அவனும் இரகசியமாகவே பேசி வந்தார்கள். இரவில்தான் சந்திப்பான். அதுவும் அவர் வீட்டில்தான்! அவருடன் யாராவது பேசிக் கொண்டிருந்தால் கூட குரு தலை காட்டமாட்டான். அப்படி ஓர் உடன்பாடு.

சந்திப்புகளை அந்தரங்கமாக வைத்துக்கொள்வதற்கு சீதாபதி இன்னொரு காரணமும் கூறுவார் 'போலீசிலே நல்லவங்களும் இருக்காங்க! கெட்டவங்களும் இருக்காங்க! நாளைக்கு உன்னைப் பற்றிய சமாசாரம் - நீ எனக்குத் துப்புக் கொடுக்கிறது, போறது வாரதெல்லாம் கடத்தல் ஆசாமிகளுக்கே போயிடுத்துன்னா உன் உயிருக்கேல்ல ஆபத்து வரும்?'

அவர் சொன்னது சரிதான்!

ஆனால், இப்போது அவசரத்துக்கு ஒரு காரியம் ஆக வேண்டி வந்தபோது ஓர் ஆள் இல்லாமல்...

பெண்மணியின் கத்தி! ஆக்ரோஷமான கத்தி...

பிள்ளையார் கோவில் ஸ்டாப் அருகில் பஸ்ஸை நிறுத்தி வைத்திருக்க, ஒரு வேலையாள் கனமான லக்கேஜ்களை டாப்பில் போட்டுக் கொண்டிருந்தான்.

அந்த வேலையாளுக்கு உத்தரவு கொடுத்த வண்ணம் இருந்த அந்த ஆளைப் பார்த்தால்...

சரபோஜி மீசைக்காரர்!

காட்டு பங்களாவில் பார்த்தது.

"ஸார் என்னைத் தெரிகிறதா?"

மீசைக்காரர் திரும்பிப் பார்த்து 'இவன் யார்?' என்று ஒற்றையா இரட்டையா போட்டுக்கொண்டிருந்தபோது,

"நான்தாங்க! அன்னிக்கு ஃபாரஸ்ட் பங்களாவுக்கு வந்தேனே இன்ஸ்பெக்டர் சீதாபதியைத் தேடி!"

"ஆமாமாம்! நினைவிருக்கு!"

"இன்ஸ்பெக்டர் எங்கே போனாரு!"

"அஸ்ஸாம் பார்டர் ஸ்பெஷல் போலீஸ் எஸ்டாபிளிஷ்மெண்ட்ல கொண்டு தள்ளிட்டான்."

"ஏன் சார்?"

"அவரை மட்டுமில்லே! இந்த ஹோல் போலீஸ் டிவிஷனைத் தூக்கி வெளியிலே தள்ளிட்டாங்க. ஒரே லஞ்சப் புகார். பார்லிமெண்டிலே கேட்டுட்டாங்க! தூக்குடான்னு ஒரே ராத்திரிலே எல்லாரையும் அப்பாலே போட்டுட்டான். ஜாயினிங் டைம் கூடக் கொடுக்கலே! யார் என்ன செய்ய முடியும்? எமர்ஜென்ஸி! பேப்பர் படிக்கிறதில்லையா?"

"ஒரு அர்ஜெண்ட் விஷயம், ஸார்! காட்டு பங்களாவிலே ஒரு ஆசாமி ஆப்டிருந்தானே! இப்போ எங்கே இருக்கான்?"

சரபோஜி சிரித்தார்.

"மேலே இருக்கார்," என்று வானத்தைக் காட்டினார்.

குருவின் முதுகுத் தண்டுக்குள் ஒரு விரல் பாய்ந்தது. ஜில்லிட்டுவிட்டது.

லக்கேஜ் எல்லாம் ஏறி உட்கார்ந்துகொள்ள, சரபோஜி துள்ளி ஏற, அந்த பஸ் அபரிமிதமான எக்ஸாஸ்டை விட்டுக்கொண்டு ஏதோ ஓர் ஆந்திரப் பிரதேச நகரத்தைப் பார்த்து ஓடியது.

பாலுசாமி இறந்துவிட்டான். இல்லை, இறக்கடிக்கப்பட்டான். ஜனத்தொகையைக் குறைக்க போலீஸ் உபயம்!

பால........

சொல்லிவிட்டுச் செத்துப் போயிருக்கக் கூடாதா?

அந்தப் பெண்ணின் கத்தி கண் முன்னால் விளையாடியது!

அதிர்ச்சிதான். இப்படிச் சாகடிப்பார்களா?

ஒரு வேளை மிசாவில் பிடிபட்டவர்கள் எல்லாரையும் இப்படித்தான்...

பேப்பர் படிக்கவில்லை. படிக்க வேண்டும்.

பங்க் கடையில் பேப்பர் வாங்கி வீட்டுக்கு வந்தான். பேப்பரைக் கை பிடிக்க மாட்டேன் என்கிறது. அந்தப் பெண்மணி கத்தியால் 'ஸ' காட்டிக்கொண்டிருந்தாள். இவள் என்ன, ஒரு பொடி விஷயம்! ஆனாலும் தள்ள முடியாது. விரக்தியில் இருந்தாள். காசியை விட! என்ன வேண்டுமானாலும் செய்வாள்.

........ ஓர் அஜாக்கிரதை வேளையில் அவள் 'படீர்' என்று குத்த, அவன் 'ஆ'வென்று அலற....

மனத்தைத் தேற்றிக்கொண்டு பேப்பரைத் தொடங்கினான்.

அவனுக்கு என்ன சுவாரஸ்யம் வரும்!

எல்லாம் நாட்டு முன்னேற்றங்களைப் பற்றியே பேச்சு! இருபதைப் பற்றி ஒருவர், அஞ்சைப் பற்றி ஒருவர்! எல்லாம் பீடு நடைச் செய்திகள்! எங்கும் சுபிட்சம், அமைதி, ஆனந்தம்.

கடத்தல் தலைப்பு அவனை இழுத்தது. சம்பந்தமில்லாத மந்திரி பேசியிருந்தார். கிழக்குக் கடற்கரை நகரங்களில் பெரிய அளவு போலீஸ் சீரமைப்பு நடந்துவிட்டது. டாப் டு பாட்டம்! இனி ஒரு பிளேடு கூட இந்தியாவுக்குள் வராது. தொடர்ந்து கவர்ன்மெண்ட் ஊழியருக்கும் போலீஸுக்கும் எச்சரிக்கை! ஒழுங்காக நடக்காவிட்டால்...

பேப்பரில் அதற்கு மேல் விருப்பம் இல்லை!

பகல் முழுவதும் தூங்கினான்.

சாயங்காலம் எழுந்தபோது கத்திக்காரியின் ஞாபகம் வந்தது. இதென்ன சீ! அட்டை போல் ஒட்டிக்கொண்டிருக்கிறாளே! சங்கடத்தில் அனாவசியமாய் மாட்டிக் கொண்டோம்! பணத்தாசை இழுத்துவிட்டது. இப்போது இந்த அவஸ்தையை யார் படுவார்கள்?

ரோட்டுப் பக்கம் ஒரு கெட்டியான உறுமல்! அதைத் தொடர்ந்து பல உறுமல்கள் கேட்டதும்,

மாடி முன் வராந்தாவுக்கு ஓடினான்.

லேலண்ட் உறுமல்களுடன் போலீஸ் லாரிகள் ஒன்றை ஒன்று துரத்திக்கொண்டு போயின.

டைமண்ட் வலைக்குள் நிறையத் தலைகள்.


எங்கேயோ வேட்டை நடந்திருக்க வேண்டும்!

இந்தப் பக்கத்திலிருந்து வருவதால் வேலங்காட்டுக்குள்ளேதான். இதுவரை இவ்வளவு லாரிகளை இப்படிச் சேர்ந்து பார்த்ததில்லை.

(துரோகம் துரத்தும்......)


எழுதுவது
**புஷ்பா தங்கதுரை**

# அபிநயம்




உக்ரைன் நாட்டின் கெய்வ் நகரில் ஐரோப்பிய ஜிம்னாஸ்டிக் சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்றன. இதில் ஐரோப்பா முழுவதும் இருந்து பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் கலந்துகொண்டனர். போட்டியில் உக்ரைன் நாட்டு மங்கை அன்னா போஸ்னோவா தனது திறமையைக் காட்டினார். அவர் அந்தரத்தில் அபிநயம் பிடிப்பதைப் படத்தில் காணலாம்.

# தடை.. தடை!



இறைவன் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்பது உண்மைதான். ஆனால், அவர் இருக்கக்கூடாத சில இடங்களும் இருக்கின்றன அல்லவா? இத்தாலி நாட்டைச் சேர்ந்த ராபர்ட்டோ கவாலி என்ற ஆடை வடிவமைப்பாளர் அவர் பாட்டுக்கு ஒரு புது டிசைன் நீச்சல் உடையைத் தயாரித்து அதன் முக்கிய பாகங்களில் இந்து மதப் பெண் தெய்வங்களைப் பொறித்துத் தள்ளிவிட்டார். இங்கிலாந்தில் இந்த நீச்சல் உடை விற்பனைக்கு வந்தபோது அங்கிருந்த 5லட்சம் இந்திய சமூகத்தினர் கொதித்துப் போனார்கள். என்ன ஆச்சரியம்? வழக்கமாக இப்படி யாரும் குற்றச்சாட்டுக் கூறினால் மேலைநாட்டு டிசைனர்கள் அதைக் காதில் போட்டுக் கொள்வதில்லை. ஆனால், இத்தாலி ஆடை வடிவமைப்பாளர் கவாலி உடனடியாக இதற்கு மன்னிப்புக் கேட்டு, வணிக வளாகங்களில் இருந்த பக்தி நீச்சல் உடைகளை உடனே வாபஸ் வாங்கிவிட்டார். இந்து பெண் தெய்வங்களின் படங்களைக் கொண்ட அந்த நீச்சல் உடையை இங்கே படத்தில் காணலாம்.

# சாதனைதான்!



சன நெரிசலான இடத்தில் இருப்பது சிலருக்குப் பிடிக்கும். தனிமையில் இருப்பது சிலருக்குப் பிடிக்கும் - எப்படி இருப்பதென்றாலும் அந்த நேர மன நிலையைப் பொருத்ததே. இதைக் கூட சில நிமிடங்கள் அல்லது சில மணித்தியாலங்கள் செய்யலாம். நாட்கணக்கில் செய்வதென்பது இயலாத காரியம்.


இயலும் என்கிறார் இந்த இளைஞர்.

பூட்டப்பட்ட தனி அறையில், 75 நாட்களுக்கு எந்த உணவும் உட்கொள்ளாமல் சாதனை படைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார் 37 வயதான இந்தச் சீன இளைஞர் பெங் இயோங். கடந்த சனிக்கிழமையோடு 4 நாள்கள் முடிந்து விட்டன. தனக்கு வந்த ஈ - மெயில்களைப் பார்க்கிறார் பெங். இந்தச் சாதனை, இணையத் தளத்தில் நேரடியாக ஒளிபரப்பாகிறது.



எனது பெற்றோர்கள் வாழ்க்கைக்கு முகம் கொடுக்கக்கூடிய அளவிற்கு கடுமையாக இருக்கும்படி பயிற்சியளித்திருந்தனர். வாழ்க்கை எம்மீது எதை வீசினாலும் சரி, நானும் எனது சகோதரர்களைப் போலவே சொந்தக்காலில் எழுந்து நிற்கவேண்டும் என்பதை எதிர்பார்த்திருந்தனர். நாம் பார்க்ரிட்ஜிக்கு போன பிற்பாடு நான், விளையாடுவதற்கு வெளியே செல்வதை விரும்பவில்லை என்பதை எனது அன்னை அவதானித்தார். சில வேளைகளில் நான் அழுதுகொண்டே வருவேன். தெருவிற்கு அப்பால் இருக்கும் ஒரு பெண் எப்போதும் என்னைத் தள்ளிவிடுவாள். சூஸி ஓ கொலகனிற்குப் பெரிய சகோதரர்கள்

# 14 ஒரு பெண்ணின் வாழும் வரலாறு



## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்

இருந்தனர். முரட்டுத்தனமாக விளையாடுவது அவளது பழக்கம். எனக்கு வெறுமனே நாலு வயது மட்டுமே. ஆனால் நான் எனது பயத்திற்கு விட்டுக்கொடுத்துவிட்டால் அது என் எஞ்சியுள்ள வாழ்க்கை பூராகவும் அதன் சுவடுகளைப் பதித்துவிடும் என்று எனது தாயார் பயந்தார். ஒரு நாள் அழுதுகொண்டு நான் வீட்டினுள் ஓடிவந்தேன். அவர் என்னை நிறுத்தினார்.

"வெளியே போ" அவர் ஆணையிட்டார். "உனக்கு சூஸி அடித்தாள்: அவளைத் திருப்பி அடிப்பதற்கு நான் உனக்கு அனுமதியளிக்கிறேன். நீதான் உன் சொந்தக் காலில் எழுந்து நிற்க வேண்டும். இந்த வீட்டில் கோழைகளுக்கு இடமில்லை" பிற்பாடு எனது தாயார் சொன்னார்: அவர் என்னை சாப்பாட்டறையின் திரைக்குப்பின்னால் இருந்து அவதானித்ததாகவும் நான் எனது நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு வீதியைக் கடந்துபோனதாகவும். ஒரு சிலநிமிடங்கள் கழித்து நான் வெற்றிக் களிப்பில் வந்து சொன்னேன். "என்னால் இப்போது பையன்களோடு விளையாட முடியும்; சூஸியும் எனது நண்பியாக இருப்பாள்" என்று.

அவள் அன்று மட்டுமல்ல இன்றும் அப்படித்தான். ஒரு சாதாரண பெண்ணாக ஜுலை நான்கு கொண்டாட்ட அணிநடையில் கலந்துகொண்டேன். உணவு விடுதிகள், தின்பண்டங்கள் விற்பனையில் மற்றும் மூத்தவர்களது அங்கீகாரத்தைப் பெறும் அல்லது எனக்கு ஏதும் ஒரு இலட்சினையைப் பெற்றுத்தரும் எதிலும் நான் கலந்துகொண்டேன். அத்துடன் நான் எமது அண்டை அயலிலுள்ள குழந்தைகளை வைத்துக்கொண்டு விளையாட்டுப்போட்டிகளை நடத்துவேன்.

நான் உயர் கல்லூரியில் கற்ற நாட்களில் எல்லா விடயங்களும் சிறப்பாக இல்லாதிருந்தபோதிலும் அதிகமான கல்லூரி நாட்கள் ஓரளவு சிறப்பாகவே கழிந்தன. 1963ஆம் ஆண்டு நவம்பர் 22ல் நான் கல்லூரியில் கற்கின்ற காலப்பகுதியில் "கணிதப் பிரிவில்" இணைந்திருந்தேன். ஒரு நாள் டொக் என்ற ஆசிரியர் விடுகதையொன்றை எங்களுக்கு சொல்லிக்கொண்டிருந்தார். அது முடிந்து இன்னுமொரு ஆசிரியர் வகுப்புக்கு வந்தபோது, ஜனாதிபதி கென்னடி "டல்லாவில்" வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார் என்ற அதிர்ச்சிச் செய்தி கிட்டியது. அப்பொழுது என்னுடைய விருப்புக்குரிய ஆசானும் எங்களுடைய வகுப்பாசிரியருமான "கிரடொக்" சப்தமிட்டுக் கத்தினார். "அப்படி அது நடந்திருக்காது" என்று உயர்ந்த சப்தத்துடன் கத்திக்கொண்டு எமது கல்லூரியின் முற்றத்தை நோக்கி ஓடினார். அங்கு சென்று அவர் திரும்பி வந்தபோது ஜனாதிபதி கென்னடி சுடப்பட்ட செய்தி உண்மையென்பதை அவர் மூலம் உறுதியாகத் தெரிந்து கொண்டோம். யாரோ ஒருவர் ஜனாதிபதி கென்னடியை சுட்டுவிட்டதாகவும்; ஜனாதிபதியைச் சுட்டவர் ஒரு வலதுசாரி அமைப்பின் அங்கத்தவரான ஜோன் பிரச்சர் என்றும்; அவர் எப்போதும் ஜனாதிபதி கென்னடியின் எல்லா நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்பாகவும், விரோதமாகவும் செயற்பட்டவர் என்பதும் பின்பு தெரியவந்தது. அதன் பிறகு மேற்கொண்டு தகவல்கள் கிடைத்தபொழுது மாணவர்களாகிய எல்லோரையும் ஒன்றுகூடி மகாநாட்டு



மண்டபத்தினுள் இருக்குமாறு எங்கள் பொறுப்பாசிரியர் கிரடொக் கூறினார். அதன்பிறகு எல்லா மண்டபங்களும் நிசப்தமாகின. ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஜனாதிபதி சுடப்பட்ட அந்தச் செய்தியைக் கேட்டு நம்பமுடியாதவர்களாக மகாநாட்டு மண்டபத்தினை நோக்கி அமைதியாகவும், சோகமே உருவெடுத்தவர்களாகவும் நடந்துசென்று அங்கு அதிபரின் அடுத்த அறிவிப்புக்காக காத்திருந்தார்கள். அதன் பின்பு எங்களுடைய கல்லூரி அதிபர் அங்கே வந்து "நாம் கல்லூரியை நேரகாலத்துடன் விடுமுறை விடுகிறோம். எல்லோரும் போகலாம்" என்றார். உடனே எல்லோரும் எமது வீடுகளை நோக்கி மிகப் பதற்றத்துடன் வெளியேறினோம்.

கல்லூரியில் இருந்து வீடு சென்றவுடன், அங்கே எனது தாயார் டி.வியின் முன்னாள் அமர்ந்துகொண்டு ஜனாதிபதி கென்னடியின் மரணச் செய்தியைப் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது ஜனாதிபதி கென்னடி பிற்பகல் 1.00 மணிக்கு மரணித்ததாக டி.வியில் செய்தி ஒளிபரப்பப்பட்டது. அந்த வேளையில், எனது தாயார் - தான் உட்பட குடும்பமே, ஜனாதிபதி கென்னடிக்கே தமது வாக்குகளை அளித்ததாகக் கூறி; அவருடைய இறப்புச் செய்தி கேட்டு அவருடைய மனைவி மற்றும் பிள்ளைகளுக்காக எங்களிடம் அனுதாபம் தெரிவித்துக்கொண்டிருந்தார். நானும் அந்த அனுதாபச் செய்தியில் இணைந்துகொண்டேன்.

ஒரு நல்ல தலைவரை நாடு இழந்துவிட்டதே என்று நானும் அனுதாபங்கொண்டேன். எங்களுடைய நாடு, அதனுடைய எதிர்கால வளர்ச்சி, முன்னேற்றம் இவைகளுக்கு என்னாலான உதவிகளை எதிர்காலத்தில் செய்யமுடியும் என்ற சிந்தனை அப்பொழுது என்னை ஆட்கொண்டது. ஆனால், அவற்றை எவ்வாறு நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பது பற்றி எவ்வித ஆக்கபூர்வமான திட்டங்களும் அப்போதிருக்கவில்லை. தொடர்ந்தும் இது பற்றிய சிந்தனையிலேயே நான் திளைத்திருந்தேன். அச்சிந்தனைகள்தான் எனது மனதினுள் மீள மீள எழுந்துகொண்டிருந்தன.

எனது மக்களின் நல்வாழ்வுக்காக எதிர்காலத்தில் நான் பாடுபடவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே ஒவ்வொரு கணப்பொழுதும் கழிந்தது. இது விடயத்தில் நான் ஒருபோதும் வரையறைக்குட்பட்டவளாக இருக்கக் 'கூடாது; பரந்த மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும் என்று, என்னை நான் திடப்படுத்திக் கொண்டேன்

(இன்னும் வரும்...)


இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.

ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்தவைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களினூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல. அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகியுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.

19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத்துகிறது.

## திடீரென வெடித்த எரிமலை!



**1906ம்** ஆண்டு ஏப்ரல் 7ம் திகதி திடீரென வெடித்த ஒரு எரிமலை, இத்தாலியில் ஒட்டாவியானோ நகரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால் ஆயிரக்கணக்கான இத்தாலியர்கள் மரணித்தார்கள். அத்தோடு பலர் காயமடைந்து மிகவும் பாதிக்கப்பட்டார்கள். அவ்வாறு வெடித்த மிகப்பெரிய எரிமலையின் வெடிப்புக் காட்சியையே இங்கு காண்கிறீர்கள்.

## நோர்வே சுதந்திரம் அடைகிறது




**சு**வீடிஸ் பிரபுக்களால் 1905 ஜூன் 07ம் திகதி சுவீடிஸ் - நோர்வேயின் அமைப்பிலிருந்து தனியாக நோர்வே பிரிந்து சென்றவுடன், அவ்வமைப்பு நோர்வேயை சுதந்திரமான நாடாக பிரகடனப் படுத்தியது. 13ம் திகதி ஆகஸ்ட் 1905ம் ஆண்டு நடைபெற்ற மக்கள் விருப்பு வாக்கெடுப்பொன்றில் 80% நோர்வே மக்கள் நோர்வே தனியாகப் பிரிந்து செல்வதற்கு விருப்பம் தெரிவித்தார்கள். அத்துடன் நோர்வே மக்கள், தங்களுக்கு புதியதொரு அரசைத் தெரிவுசெய்ய விரும்பி, புதிய மன்னராக இளவரசரான கார்ல் என்பவரை தெரிவுசெய்தார்கள். இந்த கார்ல் என்பவர் டென்மார்க்கின் மன்னர் பிரட்டிர்கின் இரண்டாவது மகனாவார். அவர் தனது பெயரை மன்னர் ஹாகன் என்று மாற்றிக்கொண்டார். மன்னர் ஹாகனுக்கும் அவருடைய அன்பு மனைவியான, ஏழாவது மன்னர் எட்வர்டின் மகள் ராணி மௌட்டுக்கும் பிறந்த இளம் இளவரசர் ஓல்.ஃப்பையும் இங்கு படத்தில் காணலாம்.

# இனப்பிரச்சினையை புறம் தள்ளும் சிறுபான்மைக் கட்சிகள்

இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் இன்று வரை ஆட்சி புரிந்தவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டமைப்பிலுள்ள சிங்களக் கட்சியினருமாகும். மொத்தத்தில் மக்கள் விடுதலை முன்னணியையும் தற்போதைய சிஹல உறுமயவையையும் தவிர்ந்த மற்ற ஏனைய சிங்களக் கட்சிகள் தமிழர்களின் இன்றைய துர்ப்பாக்கிய நிலைக்கு துயர்களுக்குக் காரணமாகும். இதில் ஐ.தே.கட்சி 34 வருடங்கள் இந்த நாட்டை ஆட்சி செய்தது. இவர்கள் ஆட்சிக்காலத்தில் தமிழருக்கு இழைத்த கொடுமைகள்.

01. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் தமிழர் பிரதேசம் சுவீகரிக்கப்பட்டன. சிங்களப் பிரதிநிதிகள் 6 பேர் தமிழ்ப் பகுதியில் வர வழிவகுத்தது.

02. இந்திய – பாகிஸ்தானியப் பிரசாவுரிமைச் சட்டத்தின்மூலம் மலைநாட்டுத் தமிழர்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்தும் பறிக்கப்பட்டது.



03. 1944ஆம் ஆண்டு மே மாதம் 24ஆந் திகதி சட்ட நிரூபண சபையில் ஜே.ஆரால் கொண்டு வரப்பட்ட சிங்கள மொழிச் சட்டத்தை எதிர்த்து மட்டக்களப்புப் பிரதிநிதி வீ.நல்லையாவின் சிங்களமும், தமிழும் இந்த நாட்டின் அரசகரும மொழிகள் என்ற பிரேரணையை, எஸ்.டபிள்யூ ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆதரிக்கச் சபை ஏகமனதாக நிறைவேற்றிய மொழிச்சட்டத்தை நிறைவேற்றாது 1956ஆம் ஆண்டு மாசி மாதம் 1ஆம் 2ஆம் 3ஆம் திகதிகளில் களனியில் நடந்த ஐ.தே.கட்சியின் மகாநாட்டில் மீண்டும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சிங்களம் மட்டும் தான் இந்த நாட்டின் ஆட்சி மொழி என்று பிரேரணை கொண்டு வந்து சும்மா கிடந்த மொழிச் சங்கை ஊதிக்கெடுத்து – பண்டாரநாயக்காவுக்கு தனிச்சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவர வழிவகுத்து மட்டுமன்றி அதை ஆதரித்து வாக்களித்தவர்களும் ஐ.தே.கட்சியினராகும்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கொண்டு வந்த தரப்படுத்துதலையும் ஏற்றுத் தமிழிளைஞர்களின் கல்வியில் மண் போட்டவர்கள் பண்டா – செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்துக் கண்டிக்கு யாத்திரை சென்று கிழித்தெறிய வைத்ததோடு, 1958ஆம் ஆண்டின் இனக்கலவரத்தின் சூத்திரதாரிகளும் ஐ.தே.கட்சியினர்தான். 1977ஆம் ஆண்டு ஐ.தே.கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையோடு ஆட்சிக்கு வந்தது. வந்த நாள் முதல் 1979 – 1981 – 1983 – 1986ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியான இனவெறிக் கலவரங்கள் வடமராட்சி நோக்கிப் படைஎடுப்பு, அத்தியாவசியப் பொருட்களுக்குத் தடை, பயங்கரவாதத் தடைச்சட்டம், பாராளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகளின் பிரதிநிதித்துவம் பறிப்பு, உயர் பதவிகளிலிருந்த தமிழர் குறைப்பு, 1978ஆம் ஆண்டு புதிய ஒற்றையாட்சி அரசியல் சபைத் தமிழர்களின் விருப்பின்றி நிறைவேற்றப்பட்டது. அடுத்து மிகுதி 22 வருடங்கள் ஆட்சி செய்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனிச் சிங்களம் மட்டும் சட்டம், தரப்படுத்துதல் 1972ஆம் ஆண்டு கொண்டுவந்த அரசியல் திட்டப்படி தமிழரை இரண்டாம் பிரசையாக்கியது. தொடர் யுத்தம், அழிவு என்பன ஏட்டிக்குப் போட்டியாகவே செய்யப்பட்டன. தமிழரைப் பொறுத்தவரை ஐ.தே.கட்சி செய்த கொடுமைகளை விட ஸ்ரீலங்கா கட்சி கூடுதலாக ஒன்றும் செய்யவில்லை. தமிழருக்கு 100 க்கு 80 வீதமான துரோகம் செய்த கட்சி ஐ.தே.கட்சியாகும். அப்படி இருந்த போதிலும் தமிழர்கள் கூடுதலாக ஐ.தே.கட்சியைத்தான் ஆதரிக்கிறார்கள். தான் சாக மருந்து குடிக்கும் கொடியவனின் நிலை. முன்னாள் பிரதமர் ரணில் 1990ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டு சந்திரிகாவால் தோற்கடிக்கப்படும் வரை பிரதமராக இருந்தார். ஜனாதிபதியாக அவர் கட்சியைச் சேர்ந்த விஜயதுங்கா இருந்தார். அப்போது ஐ.தே.கட்சியின் தனிப்பலம் 125 பாராளுமன்றப் பிரதிநிதிகள். அவரோடு கூட்டாக ஈ.பி.டி.பி. 10 பேர், தொண்டமானும் அவர் சகாக்களும் சேர்ந்து மொத்தம் 141 பேர் இருந்த காலகட்டத்தில் கூடத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முயலவில்லை. பிரேமதாசா அனில் முனசிங்க தலைமையில் ஒரு குழு அமைத்தார். அந்தக் குழு மாகாண சபைக்கு வழங்கியுள்ள அதிகாரத்தை விட சற்றுக் கூடிய அதிகாரத்தை வட – கிழக்கு தமிழருக்கு வழங்குமாறு சிபார்சு செய்தது. அதைக் கூட ரணில் செயல்படுத்தவில்லை.

ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிகாலத்தில் சண்டைக்கு ஒதுக்கிய நிதிகளை ஆதரித்ததோடு அவசர கால நிலையையும் ஏற்று ரணிலின் கட்சி வாக்களித்தது. அதன்மூலம் சந்திரிகா செய்த சகலதையும் ஐ.தே.கட்சி ஆதரித்தது. ரணில் ஏற்றுக் கொண்டார்.

பிரித்தானிய உதவி அமைச்சரின் முயற்சியோடு ஐ.தே.கட்சியும் பொ.ஐ முன்னணியும் சேர்ந்து இனப் பிரச்சினையைத் தீர்க்க ஒத்துக்கொண்ட தீர்வுகளை அரசியல் பொதியாக 03.08.2000ஆம் ஆண்டு பொதுசன ஐக்கிய முன்னணி பாராளுமன்றத்தில் கொண்டு வந்தது. அதையும் மூர்க்கத்தனமாக எதிர்த்தவர் ரணில்.

இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டுமானால் அரசியற்சட்டத்தை திருத்தப்பட்ட வேண்டும். சட்டம் மாற்றும்போது ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்க ஆளும் கட்சி விரும்புகிறது. ஆனால், ஐ.தே.கட்சியும் ரணிலும் அதை விரும்பவில்லை.

இந்தியாவைப் பாருங்கள் 80 சதவீதம் இந்துக்கள் உள்ள நாட்டில் சிறுபான்மையைச் சோர்ந்த இஸ்லாமியர், ஜனாதிபதி சிறுபான்மை இனமான சீக்கியர் பிரதம மந்திரி இந்த நிலை இங்கே நிகழ முடியுமா? இன்று ஐ.தே.கட்சியால் பாலூட்டி வளர்க்கப்பட்ட சிஹல உறுமய, இலங்கையில் தமிழரின் தாயகத்திற்குத் தொல்லியல் சான்றில்லை என்றும் இடைக்கால அரசு கொடுக்கக்கூடாது என்றும் கொக்கரிக்கின்றது. இவற்றை கேட்கும் சிறுபான்மைக் கட்சிகள், ஐ.தே.கட்சிக்குப் பந்தம் பிடிப்பது, தமிழ் மக்களுக்கு அவர்கள் வழங்கிய ஆணைக்கு இழைக்கும் மாபெரும் துரோகமாகும்.

சிறுபான்மைக் கட்சிகளிடம் அதுவும் தமிழரிடம் 33 பாராளுமன்றப் பிரதிநிதிகளின் பலம் உண்டு. தன்பலம் அறிந்தும் அம்பலமேறாது ஐ.தே.கட்சியின் அடிமையாவது ஏன்?

அரசாங்கத்திடம் 106 பிரதிநிதிகள் உண்டு. இரண்டும் இணைந்தால் 139 பாராளுமன்றப் பலம். இது அறுதிப் பெரும்பான்மையாகும். இனப்பிரச்சினை தீர்வில் முஸ்லிம்களும் இணைக்கப்பட்டால் (139+9)148 பிரதிநிதிகள். இது பலமில்லையா? இன்று வெளியிலுள்ள சிறுபான்மை உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு ஆதரவு கொடுத்தால் மக்கள் விடுதலை முன்னணியின் அனுங்குப்பிடி தளரும். சிஹல உறுமயவின் கொட்டமும் அடங்கும். கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலையும் முட்டாள்தனத்தைத்தான் சிறுபான்மைக் கட்சிகள் இன்று செய்கின்றன. இது என்ன துரதிர்ஷ்டமோ தெரியவில்லை.

தமிழரசுக் கட்சி, ஐ.தே.கட்சிக்கு வக்காலத்து வாங்குகிறது. ஆனால், ஏன் அந்த ஐ.தே.கட்சியை சிறுபான்மையோர் பிரச்சினையைத் தீர்க்க அரசோடு சேர்ந்துழைக்கக் கேட்கக் கூடாது. அவர்கள் உங்களுக்காக உதவ முடியாவிட்டால், நீங்கள் ஏன் அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும்? தமிழ் மக்கள் உங்களை அனுப்பியது அவர்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேயொழிய, ரணிலின் ஜனாதிபதி கனவுக்கு வக்காலத்து வாங்குவதற்கில்லை.

காற்றுள்ளபோது தூற்றிக் கொள்ளவிரும்பாதவன் விழலுக்கு நீரிறைப்பவன்; வரலாற்றில் கறைபடிந்த பக்கங்களில் தனக்கொரு இடத்தை ஏற்படுத்திக் கொள்வான்.

எந்த விலை கொடுத்தும் அரசியல் திட்டத்தை மாற்றச் சந்திரிகா தயார். ஒற்றையாட்சி அரசியலை மாற்ற 56 வருடகாலமாகத் தமிழர் துடியாகத் துடிக்கிறோம். அரசியல் வானில் அதற்கான சூழலும் சூழ்நிலையும் கருமேகமெனத் திரண்டு நிற்கிறது. இந்த அரிய சந்தர்ப்பத்தை சூழ்நிலையை சாணக்கியமிக்க தீர்க்கதரிசிகள் பற்றிப் பிடிப்பதை விட்டு விட்டு பழைய தலைவர்கள் போல போன பஸ்ஸுக்குக் கை காட்ட முடியாது.

காலம் அறிந்து நேரம் பார்த்து, சந்தர்ப்ப சூழலின் தன்மை, தாற்பரியம் தெரிந்து படை நடத்திப் பகை முடிப்பவன் தான் சிறந்த தளபதி தலைவன்.

எனவே, சிறுபான்மைக் கட்சிகளே கிடைக்கும் சந்தர்ப்பத்தை நழுவவிட்டீர்களேயானால் சரித்திரமும், வரலாறும் உங்களை 'துரோகி' என்று பதிவு செய்வதை யாராலும் தடுக்க முடியாது.

-தேனுரான்.

---

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

## கொடும்பாவி எரிப்பு

"பதவிகளைத் தூக்கி எறிந்து விட்டுச் சுதந்திர போராட்ட வீரர்களாக மாறுங்கள்"

"வாக்குறுதி கொடுத்த படி தமிழீழ அரசியலமைப்பு நிர்ணய சபையை எப்போது கூட்டப் போகிறீர்கள்"

இந்தக் கோசங்கள் 1980இன் மே தினத்தன்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக்கு எதிராகத் தமிழ் இளைஞர்களால் செய்யப்பட்டமையாகும். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மேதினப் பொதுக்கூட்டத்தின்போது இத்தகையதொரு எதிர்ப்புக் கிளம்பும் என்று கூட்டணியின் தலைவர்கள் சிந்தித்தும் எதிர்பார்த்திருக்கவில்லை. கோவை மகேசன், ஈழவேந்தன், மற்றும் டாக்டர் எஸ்.ஏ.தர்மலிங்கம் போன்ற கூட்டணி உறுப்பினர்களை உறுப்புரிமையிலிருந்து நீக்கிப் பதிலடி கொடுத்தது கூட்டணித் தலைமை. ஆனால், இது ஊர் வாயை மூட உலை மூடியைப் பயன்படுத்தியது போலவே முடிந்து போயிற்று.

1980இன் ஆகஸ்ட் எட்டாம் திகதியன்று பிரதமர் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை அமைப்பதற்கான மசோதாவைத் தாக்கல் செய்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபையில் இம் மசோதாவுக்கு அமோகமான ஆதரவு தெரிவிக்கப் பட்டது. இம் மசோதாவை ஒரு மாபெரும் வெற்றி எனவும், வரலாற்றுச் சாதனை எனவும் அமிர்தலிங்கம் விபரித்தார். அதிகாரப் பரவலாக்கல் மூலமாக மக்கள் மாவட்ட அபிவிருத்திப் பணிகளில் நேரடியாகப் பங்கு கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக வர்ணித்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் உண்மையான கள நிலைமைகளுக்கு வெகு தொலைவிலேயே இருந்தது என்பதை உணர்ந்து கொள்ளவில்லை.

இந்த மாவட்ட அபிவிருத்திச் சபை மசோதாவுக்கும், அமிர்தலிங்கத்தின் தலைமைக்கும் எதிராகக் கடுமையான விமர்சனங்கள் மேல் எழுந்தன. கூட்டணி யின் பொதுச் சபையில் சுமார் அரை மணிநேரத்திற்கும் மேல் நீண்ட விரிவுரை யொன்றை அமிர்தலிங்கம் நிகழ்த்தியிருந்தார். இந்த உரையின் போது அதிகாரப் பரவலாக்கம் என்பது நாடு முழுமைக்கும் பொதுவாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஒரு திட்டம் ஆகும். இதனைக் கூட்டணி ஏற்றுக் கொள்ளுகிறதோ இல்லையோ இது அமுலாக்கப் படப் போவது நிச்சயம். கூட்டணி இதனை ஏற்றுக்கொண்டு அமுல்படுத் துவதற்கு ஒத்துழைக்குமானால் தமிழ் மாவட்டங்கள் பொருளாதார ரீதியாக அபிவிருத்தி அடைவது சுலபமானதாகும் .இதனைக் கூட்டணி எதிர்த்து நிற்குமானால் தமிழர் பிரதேசங்கள் பொருளாதார ரீதியாகப் புறக்கணிக்கப் படுவது தவிர்க்க முடியாதது ஆகும் என்று குறிப்பிட்டார்.




இணைந்து எழுதுவது
த.சபாரத்தினம்
+
அம்பி மகன்

வவுனியா நகர மண்டபத்தில் சுமார் பத்து மணி நேரங்களுக்கும் மேலாக பொதுச் சபைக் கூட்டம் தொடர்ந்து கொண்டிருந்தது. ஆனால் தீவிரவாதப் போக்குகளை வெளிப்படுத்திய இளைஞர்களும், அவர்களது சகாக்களும் கூட்டணித் தலைவர்களின் கருத்துக்களால் கவரப்படவில்லை. அவகேள் மண்டபத்திற்கு வெளியே சத்தியாக்கிரகம் நடத்தினர். எமது இலக்கிலிருந்து திசை திரும்பிச் செல்லவைக்கவுள்ள மாவட்ட அபிவிருத்திச் சபை மசோதாவை கூட்டணி முற்றாக எதிர்க்க வேண்டுமென வலியுறுத்தினர். இரவு 9.00 மணியளவில் கூட்டம் நடைபெற்ற வவுனியா நகர மண்டபத்திலிருந்து அமிர்தலிங்கம் வெளியேறியபோது கிண்டல் கலந்த தொனியில் " அமிர்தலிங்கம் ஜயவேவா" எனக் கோசம் எழுப்பப்பட்டது.

அமிர்தலிங்கம் தலைமையில் கூட்டணியினர் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்றுக்கொள்ள முன்வந்ததை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

மாவட்ட அபிவிருத்திச் சபை மசோதாவுக்கு எதிரான கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் என்பன பகிரங்கமாக நடத்தப்பட்டதோடு, அது தொடர்பான பட்டிமன்ற விவாதங்களும் சூடு பிடித்தன. குற்றவாளிக் கூண்டில் கூட்டணித் தலைமையை நிறுத்திய வழக்காடு மன்றங்கள் பல நிகழ்த்தப்பட்டன. 1977இன் பொதுத் தேர்தலை தமிழீழத் தனியரசுக்கான சர்வசன வாக்கெடுப்பாகப் பிரகடனம் செய்து மக்கள் ஆணையைப் பெற்ற தலைவர்கள், அதே ஆணையை நிறைவேற்றும் பாதையில் ஒரு அடிதானும் முன்னோக்கி நகராமல் பின்வாங்கிச் செல்வதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. இந்த வகையிலான எதிர்ப்பு நடவடிக்கைகளின் உச்சக்கட்டமாக கூட்டணியின் கொடியினால் சுற்றப்பட்ட அமிர்தலிங்கத்தின் கொடும்பாவி யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்களால் தீக்கிரையாக்கப் பட்டது.

இவ்வாறு அமிர்தலிங்கத்தின் கொடும்பாவிக்குத் தீ மூட்டி எரித்தவர்களில் முன்னணியில் நின்றவர், அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவராக இருந்த செல்வன் அயிரேனியஸ் இதனால் அவருக்குக் கொடும்பாவிச் செல்வன் என்றோரு பெயரும் சூட்டப்பட்டது. ஆனால், இதே செல்வின் அய்ரேனியஸ். தான் புலிகளுக்கும் பிரதமர் ரணில் தலைமையிலான ஐ.தே..க அரசுக்கும் இடையில் நடந்த கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டவாறு அமைக்கப்பட்ட சிரான் உப குழுவுக்கு 2002ஆம் ஆண்டில் தலைமை ஏற்றார் என்பதும் குறிப்பிடத் தக்கது. அவசர மனிதாபிமானப் பணிகளைப் மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட இதே உப குழு ஏப்ரல் 2003இல் செயலிழந்து போனது தெரிந்ததே அதாவது 1980இல் கூட்டணித் தலைமை மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்கக் கூடாது என்று வலியுறுத்தி பல்கலைக் கழக மாணவர் சமூகத்தை வழிநடத்தியவர்கள் பின்னாளில் அரசாங்க நிர்வாக அதிகாரி களாகப் பதவிப் பொறுப்பேற்றுக்கொள்ள எந்த விதத்திலும் பின் நிற்க வில்லை என்பதே இங்கு அவதானத்திற் குரியதாகும்.

> அதிகாரப் பரவலாக்கம் என்பது நாடு முழுமைக்கும் பொதுவாக நடைமுறைப் படுத்தப்படவுள்ள ஒரு திட்டம் ஆகும். இதனைக் கூட்டணி ஏற்றுக்கொள்ளு கிறதோ இல்லையோ இது அமுலாக்கப் படப் போவது நிச்சயம்

இவ்வேளையில் ஈரோஸ் எனப்படும் ஈழப் புரட்சி அமைப்பின் பின்னணி அனுசரணையோடு யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட "தர்க் கீதம்" என்ற பத்திரிகை தந்தைக்குப் பின் தளபதி தலைவர் ஆவாரா? என்ற கேள்வியுடன் ஒரு முன் பக்கக் கட்டுரையைப் பிரசுரித்து இருந்தது. இக் கட்டுரையில் இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் தேசிய அந்தஸ்த்தை நிலைநாட்டுவதற்காகன போராட்டத்தைத் திசை திருப்புவதற்காகவே ஜே.ஆர். அரசு மாவட்ட அபிவிருத்திச் சபைகளை அறிமுகப் படுத்தியுள்ளதாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இம் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் நிர்வாக அதிகாரத்தைக் கூட்டணித் தலைமை ஜனநாயக பூர்வமாகப் பெற்றுக் கொள்ள அதன் உள்ளார்ந்த பலவீனங்களை அம்பலப்படுத்த வேண்டும் எனவுமே மாவட்ட அபிவிருத்தி சபை மசோதாவின் அமுலாக்கத்தை வன்செயல்கள் மூலம் எதிர்ப்பதாகக் காட்டிக் கொண்டு \ அங்கொரு கொலையிலும் இங்கொரு கொள்ளையிலும் ஈடுபடுவது விடுதலைப் போராட்டமாகாது எனவும் வர்ணிக்கப் பட்டிருந்தது. அதாவது தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வா எனப்படும் அமரர். சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்களின் மறைவுக்குப் பின்னர் தளபதியென வர்ணிக்கப்பட்டுவந்த அமிர்தலிங்கம் தலைவராக மிளிர வேண்டுமெனின் துணிவுடனும், தொலை நோக்குச் சிந்தனையுடனும், உளப்பூர்வமான அர்ப்பணிப்போடு செயற்படுவதே சிறந்த வழி என்று "தர்க் கீதம்" இதழில் இடித்துரைக்கப்பட்டிருந்தது. ஈழப் புரட்சி அமைப்பான ஈரோஸ் அமைப்பின் நிர்வாகி இளையதம்பி இரத்தினசபாபதி அவர்களால் எழுதப்பட்ட இக் கட்டுரை அப்போது பலராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது.

(தொடர்ந்து வடியும்....)

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்

# நெஞ்சினில் என்ன காயமோ...? 61

இப்படியாக அவன் உரையாடிக் கொண்டு இருக்கும்போது அவனின் கவனம் இலகுவில் சிதறடிக்கக் கூடியதாக இருந்தது. அதீத சந்தோஷத்தில் திளைத்திருந்த அவன் காரணமின்றி மனமுடைந்து அழவும் ஆரம்பித்தான். இந்த அழுகை சிறிது நேரமே இருந்தது. இவன் "மிகை மகிழ்ச்சி" நோயால் பாதிக்கப் பட்டவன். ஒரு வார காலமாக உள்ளக நோயாளராகச் சிகிச்சை செய்தபோது சிறிது சிறிதாக அவன் நடத்தை மற்றும் எண்ணங்கள் வழமை நிலைக்கு மாறின.

### *மிகை மகிழ்ச்சி நோய் என்றால் என்ன? (Mania)*

இந்நோயின் அடிப்படையாக அமைவது மிகையான அல்லது அளவிற்கு அதிகமாக மற்றவர்களால் எளிதில் விளக்க முடியாத எவ்வித காரணங்களும் அற்ற அதீத மகிழ்ச்சி நிலையாகும்.

### *மிகை மகிழ்வு நோயின் அறிகுறிகள் யாவை?*

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள்

## உள மருத்துவம்

அதீத மன மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதுடன் தங்களது உடலும், மனமும் மிகப் பலம் வாய்ந்த நிலையில் இருப்பதான ஓர் உணர்வைப் பெறுவார்கள். எதுவித கவலையுமற்ற நிலையில் இருப்பவர்கள் போல் தோன்றும் அவர்களின் நடத்தைகள் மற்றவர் களைப் பற்றிக் கருத்தில் எடுக்காத வகையில் அமையும். உரத்த குரலில் சத்தமாக பேசும் இவர்களைத் தடுக்க முயற்சிக்கும் போது அது சிரமமானதாக அமைவதுடன் சில வேளைகளில் நோயாளிக்குக் கோபத்தையும் ஏற்படுத்தும். இவர்களின் பேச்சு அதிகமான வேளைகளில்

> உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாக காணப்படும் இன்றைய காலகட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றுக்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத்துறையில் அநுபவம் பெற்றவர்களும் நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த. கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு. தி. சுவீந்திரன் பீ.ஏ (உளவியல்) எம்.பில். உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களை பகிர்வர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

பல்வேறுபட்ட அம்சங்களைத் தொட்டுச் செல்வதாகவும், அதிகளவு விவரிப்புடன் கூடியதாகவும் அமையும் இவர்களின் பேச்சு, கவிதை நடை வடிவிலும் இடையிடையே சினிமா பாட்டுகள், பழமொழிகள் என்பவற்றை உள்ளடக்கியதாகவும் காணப்படலாம். இப்படியான இவர்களின் பேச்சு, ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவுவது "எண்ணப் பறத்தல்" (Flight of Ideas) ஆகும்.

இவர்கள் பகட்டான உடையணிந்து காணப்படுவதுடன் அளவுக்கு அதிகமான அலங்காரப் பொருட்களை பாவிப்பதும் நிகழ்கிறது. பிரகாசமான நிறங்களைக் கொண்ட உடைகளை இவர்கள் அணியும் போது, அது அச்சந்தர்ப்பத்துக்கு, சிலவேளைகளில் அவர்களின் உடல் அமைப்புக்கோ பொருந்தாததாக அமையும்.

இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகளவு வேலைகளை நடு இரவில் இருந்தே செய்யத் தொடங்குவார்கள். தங்கள் உடம்பு வலுவாக இருப்பதால் நித்திரை கொள்வது அவசியமில்லை எனச் சொல்வார்கள். பல வேலைகளைத் தொடர்ந்து செய்யும் பொழுதும், அவர்கள் ஒரு வேலையைப் பாதி வழியிலேயே இடைநிறுத்தி மற்றவேலைக்குச் செல்வதனால் ஒரு வேலைகூட ஒழுங்காகச் செய்யப்படாத நிலை தோன்றும்.

இவர்களில் அதிகப் பசி காணப்படுவதுடன், விரைவாகவும், அவாவுடனும் உணவுகளை உண்ணத் தலைப்படுவார்கள். மற்றவர்களுடன் சேர்ந்து உணவருந்தும் சந்தர்ப்பங்களில் பொதுவாக கடைப்பிடிக்கப்படும் சமூக விதிகளைப் பற்றிக் கணக்கில் எடுக்கமாட்டார்கள். இந்நோயின்போது பாலியல் வேட்கை அதிகரிக்கின்ற காரணமாக சமூகத்திற்கு நாணமிக்க செயல்களை எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றி தன்னிலை மறந்த நிலையில் செயற்பட முற்படுவார்கள்.

(தொடரும்)

# எது சந்தோஷம்?

சூ.ஃபி இலக்கியத்தின் ஒரு முக்கிய கதாபாத்திரமான முல்லா நஸ்ருதீன் ஒருநாள் சோகமாக உட்கார்ந்திருந்தார். முல்லாவைப் பார்க்க வந்திருந்த நெருங்கிய சிநேகிதன், "ஏன் சோகமாக இருக்கிறாய்?" என்று கேட்க, முல்லா அழ ஆரம்பித்துவிட்டார். "என் மாமா, தன் பெயரிலிருந்த சொத்துக்களை என் பெயருக்கு எழுதி வைத்துவிட்டு, போன மாசம் இறந்துவிட்டார். அதை நினைத்தேன்... அழுகிறேன்..." என்றார் முல்லா.

"உன் மாமாவை எனக்குத் தெரியும். அவருக்கு எண்பது வயதாயிற்றே... மரணம் இயற்கையானதுதானே... அதற்கென்ன இத்தனை பெரிய சோகம்? உண்மையில் பார்த்தால், அவரது திரண்ட சொத்து கிடைத்ததற்காக நீ சந்தோஷமாகத்தான் இருக்க வேண்டும்!" என்று முல்லாவுக்கு நண்பன் ஆறுதல் சொல்ல முயன்றான்... முல்லாவோ, "என் சோகம் உனக்குத் தெரியாது நண்பா! போன வாரம்தான் என் சித்தப்பா, என் பெயரில் ஒரு இலட்ச ரூபாய் சொத்துக்களை எழுதி வைத்துவிட்டுச் செத்துப்போனார்" என்று சொல்லிவிட்டு, இன்னும் பெரிதாகச் சத்தம் போட்டு அழத் தொடங்கினார். நண்பனுக்குக் குழப்பம்! "உன் சித்தப்பாவையும் எனக்குத் தெரியுமே... அவருக்கு எண்பத்தைந்து வயது... பணம் வந்ததை நினைத்துச் சந்தோஷப்படாமல் முட்டாளைப் போல இப்படி அழுகிறாயே?" என்று நண்பன் எரிச்சலுடன் கேட்டான். "என் சோகம் இன்னும் அதிகம். எனது நூறு வயது தாத்தா இரண்டு இலட்ச ரூபாய்க்கு மேலே என் பெயரில் சொத்து எழுதி வைத்துவிட்டு நேற்று இறந்துவிட்டார்!" என்றார் முல்லா.

வெறுத்துப்போன நண்பன், "எனக்குப் புரியவில்லை. நீ ஏன்தான் அழுகிறாய்?" என்றான்.

முல்லா கண்களைத் துடைத்தபடியே சொன்னார்: "செல்வந்தர்களான என் மாமா, சித்தப்பா, தாத்தா மூவருமே இறந்துவிட்டார்கள். இனிமேல் என் பேரில் சொத்து எழுதி வைத்துவிட்டுச் சாக உறவினர்கள் யாருமே இல்லையே!"

மிக முக்கியமான ஒரு கருத்தை உணர்த்துவதற்காகச் சொல்லப்படும் கதைதான் இது. சந்தோஷத்துக்கும் திருப்திக்கும் எல்லையை நாம் வரையறுத்துக்கொள்வதில்தான் இருக்கிறது. எல்லைகளை நம் கட்டுப்பாட்டில் இல்லாமல் விரிவடையச் செய்துகொண்டே போனால், எந்தச் சந்தோஷமும் நமக்கு நிம்மதி தரக்கூடியதாக இருக்காது.

ஓட்டை வாளியில் தண்ணீர் ஊற்றினால் எப்படி நிற்காதோ, அதே மாதிரி, இது போல திருப்தியற்ற மனம் உடையவர்களுக்கு எத்தனை சந்தோஷம் வந்தாலும் அது தங்காது.

அவர்களின் மனம் சோகமயமாகவே இருக்கும்.

(தொடரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி 74

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | ■ |
| 4 | ■ | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | ■ |
| 12 | ■ | 13 | 14 | 15 |
| 16 | 17 | ■ | ■ | 18 |
| ■ | 19 | 20 | 21 | 22 |

### இடமிருந்து வலம்

1) இளம் பெண்.
5) துறவிகள் வாழும் இடம் (குழம்பியுள்ளது)
8) செங்கையாழியான் எழுதிய நாவலில் ஒன்று (குழம்பியுள்ளது)
13) மண்ணால் செய்த சட்டி போன்ற விளக்கு.
16) அரசன்.
19) இராமாயணத்தின் மூல ஆசிரியர்.

### மேலிருந்து கீழ்

1) அமெரிக்காவின் கைத்தொழில் நகரத்திலொன்று.
3) எட்டாம் நாள் நிலவு (தலைகீழாக உள்ளது)
6) பத்துப் பாட்டுக்களில் ஒன்று (தலைகீழாக உள்ளது)
15) அண்மையில் வெளிவந்த விஜய்யின் படம் (குழம்பியுள்ளது)
17) ஆகாயம் (தலைகீழாக உள்ளது).

**குறுக்கெழுத்துப் போட்டி இல.72க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

செல்வன். க. நிரஞ்சன், 22, பிரதிபிம்பராம வீதி, களுபோவில.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

| |
|---|
| நா. குகன், 22, தாமரைக்கேணி, மட்டக்களப்பு. |
| சி. லண்சியா, 34, கஸ்மீர் 1ஆம் வீதி, உப்புக்குளம், மன்னார். |
| இ. மிராளினி,வாசிகசாலை வீதி, கொம்மாதுறை, செங்கலடி. |
| சாருஜா சிவகுமார், நெசவு நிலைய முன் வீதி, அக்கரைப்பற்று - 07 |
| லோ. ஸ்டெரின் ஆகாசி, 366, சென்றல் வீதி, திருகோணமலை. |
| ரி. தவேஸ்வரன், புகையிரத நிலைய வீதி, மல்லாகம். |
| ஏ. ஆர். எம். இறுசாத், 2-19, மெஜஸ்டிக் ஸிடி., பம்பலப்பிட்டி. |
| வள்ளிநாயகி தேவராஜன், வலியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. |
| க. நௌஷாத், பழக்கடை, பழைய சந்தை, ஏறாவூர் - 03. |
| இ. தர்ஷினிதேவி, பிரதான வீதி, கூமாங்குளம் வவுனியா. |

**குறுக்கெழுத்துப் போட்டி 72 விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 வ | 2 ன் | 3 னி | 4 ய | 5 ர் |
| 6 ரி | ■ | 7 த | ■ | 8 த |
| 9 ப் | 10 ஆ | 11 பு | ■ | 12 ப |
| 13 பு | 14 ல | 15 ம் | ■ | ■ |
| 16 லி | 17 வா | ■ | 18 கோ | 19 டி |
| ■ | 20 ய் | 21 வ் | 22 வா | 23 செ |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 23.06.2004க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

**குறுக்கெழுத்துப் போட்டி இல-74**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ. இல - 1772,**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

**சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.**


# ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

## வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லாவிதமான,ஆண்கள்,பெண்கள்,குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சயபாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**
377,379A,Galle Road,Wellawatta,Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel:2364792

Branch:
No,33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும்　　மகளிர் மட்டும்

48

பெயர்:- ..............................
முகவரி:- ..............................
..............................
தொழில்:- ..............................
கையொப்பம்:- ..............................



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
☆ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா)
☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 23-06-2004

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர்,த.பெ.இல-1772,
கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு சேலை? கொஸ்லாந்தை வாசகிக்கு அதிர்ஷ்டம்! 46

**இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**

**ஆர். விஜயலட்சுமி;**
**இல.20, பிரதான வீதி,**
**கொஸ்லாந்தை.**

பரிசு பெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்த வாரம் யாருக்கு? ஒரு வாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா. இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசுபெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்ற பின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# "சிறைக்கைதிகளும் மனிதர்கள்தாம்!"......

தலைமுடியும் நன்றாக வளர்ந்துவிட்டது. அதை "வெட்ட வேண்டும்; வெட்ட வேண்டும்" என்று நினைத்து நாட்களும் பல நகர்ந்துவிட்டன. "இந்த சனிக்கிழமையாவது எப்படியாவது வெட்டிவிட வேண்டும்" என்ற எனது முடிவு இன்று நிறைவேறுகின்றது.

சனிக்கிழமை அரை நாள் வேலை! கடையை விட்டு வெளியேறும்போது மணி மூன்றைக் கடந்துவிட்டது. சவ்த் லேனில் இருந்து "மணிக்கூட்டுக் கோபுரப் பக்கமாக" "ரெஸ்ட் ஹவுஸை"க் கடக்கிறேன். ரெஸ்ட் ஹவுஸ் முன்பதாக பதுளை சேனநாயக்க அரங்கில் "நீலக்கூட்டணி" யின் விசேட கூட்டம். இதற்கு முன் நடந்த "பச்சைக் கூட்டணிக்கு" வந்திருந்த கிட்டத்தட்ட அதே கூட்டம்!

மேலோட்டமாக அவதானித்த வண்ணம், அண்மித்ததாக அமைந்திருக்கும் வாசிக சாலைக்குள் புகுந்து, கொஞ்சநேரம் காணாமல் போகிறேன். சரியாக நான்கு மணிக்கு பக்கத்தே இருக்கும் சிறைச் சாலையில் ஒரு ஓரத்தில் "கைதிகள் நடாத்தும் சலூன்!" மூடப்படும் என்பதால், வாசிகசாலையை விட்டு விரைவாக வெளியேறுகிறேன்.

சலூன் திறந்து பலகாலமானாலும் நான் புதிதாக முதன் முறையாக அங்கு போகிறேன்.

"வாங்க!" புன்னகைத்த வண்ணம் சிங்களத்தில் என்னை வரவேற்கும் அந்த முடி திருத்தும் கைதி!

"ஊங்கட பெயர் என்ன?" ... அன்றைய தினம் பொறுப்பாக இருக்கும் ஜெயில் காட் கேட்க, நான் என் பேர் சொல்ல, அவர் பெயர் பதிய, கூடவே நான் இருக்கையில் அமர்கிறேன்.

"எப்படி வெட்டுவம்?".... கைதி பணிவோடு கேட்கிறான். "உங்களுக்கு எப்படி விருப்பமோ? அப்படி வெட்டுங்க!".... நான் சந்தோஷத்தோடு சந்தர்ப்பத்தையளிக்கிறேன்.

"கொஞ்சம் முடியை முன்னுக்கு வைத்து வெட்டுவம் என்ன?"... பணிவு கலந்த அனுமதியோடு அவன் தன் வேலையை ஆரம்பித்தான்.

இந்த நல்லதொரு சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்தினாலென்ன? கைதியைப் "பேட்டி" கண்டது மாதிரியும் இருக்கும்; "முரசுக்கு" ஒரு கதைய எழுதின மாதிரியும் இருக்கும்! நான் சிக்கனமாகச் சிந்திக்கிறேன். கூடவே, ஆறுதலாக; அமைதியாக ஆரம்பிக்கிறேன்...

"உங்கட பெயர் என்ன?" சிங்களத்தில் விசாரிக்கிறேன்.

"ரங்கதாச!" 'ரங்க' என்று என்னை அழைப்பார்கள்.

"உங்கட ஊர் எங்க?"

"கொலம்ப!" நிறுத்தினான். "கொழும்பில் எங்க?" தொடர்ந்தேன்.

"வாழைத்தோட்டம்!" - அவன். "ம்!" - நான்.

"இங்க கிடைக்கிற காச என்ன செய்வீங்க?"

"முடி வெட்டுறதுக்காக கிடைக்கிற



கட்டணக்காச எங்க சிறைக் கைதிகளுக்கான "நலன்புரிச் சங்கம்" பொதுவான நல்ல விஷயங்களுக்குப் பயன்படுத்துவாங்க. எங்களுக்கு வேறாக வாடிக்கையாளர்கள் அன்பாகத் தரும் அன்பளிப்புக் காசுகள நாங்க எங்கட சின்னச் சின்ன அவசியத் தேவைகளுக்குப் பயன்படுத்துவம்!"...

கிட்டத்தட்ட அவனது கத்தி என் கழுத்துக்குக் கிட்ட இருந்ததால்!? அதை நினைவில் நிறுத்தி, முக்கியமான சில கேள்விக் கட்டங்களைத் தாண்டுவதற்காகவும், அவனைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பக்குவப் படுத்திக் கொள்வதற்காகவும் நான் நிதானமாக நகர்கிறேன்...

"எங்கட அப்பாட அப்பாவும் ஒரு ஜெயில் ஒபிசர்தான்!"...

"அப்பா பஸ் ட்ரைவர்!" நான் சொல்ல அவன் அதிகபட்சமாக ஆச்சரியப் பட்டான்.

"எங்க?" ஆர்வத்தோடு கேட்டான்.

"மட்டக்களப்பில்!"...

"அப்ப நீங்க வந்து பெட்டிக்கலோவா?!"

"ஓம்!" நான் தலையசைத்தேன்.

இதுதான் தருணம் என்று நினைத்த வண்ணம் எனது முக்கியமான பிரதான கேள்விக் காய்களை மெல்ல நகர்த்தத் தொடங்கினேன்.

"ஒண்டு கேட்டா கோவிச்சுக்கொள்ள மாட்டீங்களே?"... நான் சிங்களத்தில் இழுத்தேன்.

"இல்ல. பரவால்ல; கேளுங்க!" அவன் சின்னதாகச் சிரித்தான்.

"நீங்க இங்க வந்து எவ்வளவு காலம்?" - நான்.

"ஒரு வருஷம் போல இருக்கும்!" - அவன்.

"உங்களுக்கு எத்தன வயசு?"

"முப்பத்தஞ்சாவுது!"...

"எப்ப ரிலீஸ் ஆகுறீங்க?"

"வாற வெசாக்குக்கு!"...

"இங்க நீங்க ரெண்டுபேர் மட்டுமா வேல செய்யிறீங்க? இல்ல, வேற யாரும் மாறிமாறி வேலை செய்யிறீங்களா?"

"இப்போவுக்கு நாங்க இருவர் மட்டும்தான் வேல செய்யிறம். நல்ல எக்ஸ்பீரியன்ஸான ஆட்களத்தான் போடுவாங்க. நாங்க போன பிறகுஞ் நல்ல வேல பழகினவங்களப் போடுவாங்க. கிட்டத்தில தான் இங்க வேல செஞ்ச ஒருத்தர் ரிலீசாகிப் போனாரு. இவரும் வாற வெசாக்குக்குப் போயிடுவாரு!"

பக்கத்தில் சின்ன மாணவப் பையனுக்கு முடிதிருத்திக் கொண்டிருந்த சக கைதி நண்பரைக் காட்டினான். அவனது சக நண்பரை இடைக்கிடை அவதானித்தபோது, அவன் தன்பாட்டில் பணிபுரிவது புரிந்தது.

திடீரென்று கேட்டேன். "எதுக்காக நீங்க ஜெயிலுக்கு வந்தீங்க?..."

பல விடயங்களில் கேட்கக் கூடாத கேள்விகளில் இதுவும் ஒன்றுதான்! என்ன செய்வது, கேட்க வேண்டிதாயிற்று. கேட்ட வண்ணம் கண்ணாடியில் அவன் முகத்தை சற்று உற்று நோக்குகிறேன்.

கோபத்திற்குரிய, ஆத்திரத்திற்குரிய ஒரு மாறுதலும் அவன் முகத்தில் இல்லை! சாதாரணமாக லாவகமாக அவன் புரிந்த குற்றத்தை இயல்பாக எடுத்துக் கூறினான்.

"அதற்கான மூலகாரணம் என்ன?" என்று கேட்டேன். வழக்கம்போல் "குற்றவாளிகள் பிறப்பதில்லை; உருவாக்கப்படுகிறார்கள்!" என்பதற் கொப்ப, சந்தர்ப்பம் சூழ்நிலை என்பதைச் சுட்டிக்காட்டினான்.

"அப்போதைக்கும், இப்போதைக்கும் உங்களிடத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா?".....

"ஆம்! தெரிந்தோ, தெரியாமலோ நான் செய்த குற்றத்தை நான் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன். அதற்காக இப்போது நான் மிக மனம் வருந்துகிறேன். என் குற்றத்தோடு சம்பந்தப்பட்டவர்களிடத்தும், ஆண்டவனிடத்தும் நான் மானசீகமாக மன்னிப்பைக் கேட்டுக் கொள்கிறேன்!"....

"அப்ப விடுதலையான பிறகு நல்ல மனிதராக நாலுபேர் மதிக்கிற மாதிரி நடந்து கொள்வீங்க! இனி ஒரு குற்றமும் செய்யத் துணியமாட்டீங்க; அப்படிக் கனவிலகூட நினைக்க மாட்டீங்க! அப்படித்தானே சொல்றீங்க....."

அவன் மேலும் கீழுமாய்த் தலையசைத்து என் கேள்விகளை ஆமோதித்தான்.

"ரிலீசான பிறகு என்ன செய்வீங்க?"....

கைவசம் (கையிலிருக்கும் கத்திரியைக் காட்டிய வண்ணம்) வேலையிருக்கு! அண்டண்டைக்கு சமாளிக்கிறதுக்கு ஏதும் கிடைச்சாப் போதும். வேற பெரிசா நினைக்கிறதுக்கும் சொல்றதுக்கும் ஒண்டும் இல்லை!"

அவன் பதிலில் அவனே திருப்திப் படுவது தெரிந்தது.

"போதும் என்கின்ற மனமே, பொன் செய்யும் மருந்து!" என்பார்கள். நான் சிங்களத்தில் விளக்கினேன். அவன் சிரித்த சிரிப்பில் அதன் அர்த்தத்தை அவன் உணர்ந்தது தெரிந்தது.

"ஆண்டவன் உங்களை ஆசீர்வதிக்கட்டும்!"

அன்போடு பகர்ந்தேன். அவன் அதற்காக நன்றிகளை நவின்றான்.

முடி வெட்டி முடித்தான். நீண்டு வளர்ந்திருந்த தாடியை ஏற்கெனவே சொன்னதற்கேற்ப, சின்னதாக்கி அளவோடு கத்தரித்தான்.

"மசாஜ் பண்ண வேண்டுமா?" ஆதரவாகக் கேட்டான்.

"தேவையில்ல!" அவசரமில்லாமல் சொன்னேன்.

"சரி!" பவ்டர்போட்டு, டவலால் துடைத்து தன்பணி முடிக்கிறான்.

"சரியா? போதுமா, நல்லமா?" ... தொடர்கிறான்.

"ம்!.... என்று புன்னகைத்த வண்ணம் இருக்கையை விட்டு எழுகிறேன்.

"எவ்வளவு?" கேட்கிறேன்.

நியாயமான விலையைச் சொல்லக் கொடுக்கிறேன்.

கொஞ்சம் நினைத்துப் பார்க்கிறேன்... "கைதிகள் நடாத்தும் முடித்திருத்தும் நிலையம்!" எனும் தலைப்பை நானே எழுதி, நியாயமான விலையில் அது செயற்படுவது குறித்தும், உத்தியோகப் பற்றற்ற நிருபராகப் பத்திரிகைக்கு எழுதியதை நினைத்தும் பார்க்கிறேன்... நல்ல வேளை! எமது "ஆஸ்தான" முடிதிருத்துனர் "பாலா அண்ணா" அந்தச் செய்தியைப் பார்த்திருக்கவில்லை!

- கோட்டை முனை "முத்து மணி" அப்துல் வாஹிட் ஏ. குத்தூஸ், பதுளை.

# கேப்டன்

அவசர அவசரமாக யூனிபார்மை மாட்டி, அம்மா நீட்டிய சாப்பாட்டுத் தட்டை வாங்கி... அவசர அவசரமாகத் தோசைகளை ஆவேசமாய் வாய்க்குள் எறிந்து விட்டு, 'பஸ் லைன் 135' கண்டக்டர் ரவி தன் வேலைக்குப் போவதற்கு ஆயத்தமாகினான்.

இப்போ காலை ஆறு முப்பது.

இன்னும் பதினைந்து நிமிடங்களில் பஸ்ஸை, பஸ் டிப்போவிலிருந்து புறப்படவைக்க வேண்டும் என்ற வெறி அவன் செயலில் தெரிந்தது.

பசி வயிற்றிலிருந்தாலும், இந்த அவசர நேரம் சாப்பாட்டை ஒழுங்காகக் குடலுக்குள் அனுப்ப மறுத்தது.

"பார்த்தாயா ரவி...! நான் அப்பவே சொன்னேன். அக்காவையும் புருஷனையும் வீட்டுக்குள் சேர்க்காதே என்று. இப்ப பார்! நான் ஏற்கெனவே சொன்னது போல அவள் புருஷன் மாறவேயில்லை. அப்படியேதான் இருக்கான். நேற்றிரவு நல்ல வெறியில வந்து அக்காவை கண்டபடி ஏசிப்போட்டு... கிடந்ததையெல்லாம் வழிச்சு தின்னிட்டு, இப்போ என்னமாய் குறட்டைவிட்டுத் தூங்கிறான் பார்! வேலைக்கு ஒழுங்காகப் போகணும். கட்டிய பொண்டாட்டிக்கு ஒரு வழி சொல்லணுமே என்ற ஒரு அக்கறை இருக்கா...?"

- எஸ். உதயசெல்வன், நீர்கொழும்பு.

அம்மா நியாயத்தோடு சிடு சிடுத்தாள். என்றாலும் அவளின் வார்த்தைகள் அவன் நெஞ்சை அக்காவுக்காக சுட "இதோ பாருங்கம்மா...! என்ன இருந்தாலும் அவர் உங்க மருமகன்! அக்காவுக்கு புருஷன்! என்ன செய்யிறது? கொஞ்சம் பொறுங்க. எல்லாம் சரியாகிடும்..." என்றான்.

"ம்... பொறுக்கிறதா? உனக்குக் கீழே இன்னும் கல்யாணம் கட்டாம இன்னும் இரண்டு பெட்டைகள் இருக்குதுகள். பொறுப்பாகக் குடும்பத்தைப் பார்க்க வேண்டிய உன் அண்ணன் சுத்த சோம்பறியாக ஊர் சுத்திக் கொண்டிருக்கிறான். உன் அருமைத் தம்பியோ கண்ணாடியின் முன் நின்று அடிக்கடி கேசத்தை நீவிக் கொண்டு பெண்கள் காலேஜிற்கு முன்னால் தவம் செய்கிறான். இதையெல்லாத்தையும் கேள் என்றால் கேட்கிறியா? எல்லாம் நீ எல்லோருக்கும் குடுக்கிற இடம்தான். எல்லோரும் உன் உழைப்பில குளிர்காயுற ஜென்மங்கள் என்பதை ஏன் நீ புரிஞ்சு கொள்றாயில்லை...?"

"சரிம்மா... வந்து பேசிக்கிறேன். இப்ப முதல்ல வேலைக்குப் போக விடுங்க..." சிலிப்பரை மாட்டிக்கொண்டு அவன் வாசலுக்கு விரைய... கணக்காக அவனின் தங்கை அவன் முன் வந்து நின்று... "அண்ணா! இன்று நோட்ஸ் புக்ஸ் வாங்கணும்!" என்றாள்.

"என்னம்மா நீ? நேற்றிரவு சொல்லியிருக்கலாம்தானே. வேலைக்குப் போகிற அவசரத்தில் நிற்கும்போது கேட்கிறியே..." என்றபடி ரவி தன் பாக்கெட்டைத் தடவி ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்து நீட்ட... அவள் "என்னண்ணா? இந்த ஐம்பது ரூபாய் எந்த மூலைக்குக் காணும்?" என்று முகம் சோரச் சொன்னாள்.

அவன் ஒரு கணம் யோசித்துவிட்டு, மேலும் இன்னொரு ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்து அவளிடம் நீட்டியபடி சொன்னான் –

"இந்தாம்மா... இதுக்கு மேலே என் பர்சு தாங்காது. இதை வைச்சு எப்படியாவது சமாளி...!" சைக்கிளை எடுத்து வீதியில் இறக்கினான். டிப்போவில் '135 லைன்' பஸ் ட்ரைவரும், அவன் நண்பனுமாகிய கண்ணன் அவனுக்காக காத்துக் கொண்டிருந்தான்.

"ஏண்டா லேட்...?" என்றான் கண்ணன்.

"ம்... காரணம் சொல்லிக் கொண்டிருந்தால் பஸ்ஸை இப்ப எடுத்த மாதிரித்தான். பஸ்ஸை ஸ்ரார்ட் பண்ணு!" – பஸ்சில் பாய்ந்து ஏறிக்கொண்டான்.

வழமை போல் காலை நெரிசலில் பஸ் வழி பிதுங்கியது.

ரவியும் தன் குரலை உயர்த்தி ஒலிக்க ஆரம்பித்தான்.

"என்ன சார்...? கொஞ்சம் முன்னாடி போங்க! இப்படியே எல்லோரும் ஒரே இடத்திலேயே நின்றால் எப்படி மற்றவங்க ஏற முடியும்? ம்... ம்... ம்... போங்க! முன்னாலே போங்க...!"

'135 லைன்' பஸ் ரவியின் கண்ட்ரோலுக்கு வர ஆரம்பித்தது.

இந்தக் காலை நேரத்தில் பயணம் செய்யும் அலுவலக ஊழியர்கள், கல்லூரி மாணவர்கள் என்று நிரம்பி வழியும் '135 லைன்' பஸ், ரவியின் சாமர்த்தியத்தில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருந்தது.

ரவி இந்த லைனுக்கு ஒரு 'சூப்பர் ஸ்டார்' போல.



பஸ்ஸில் பயணிப்பவர்களுக்கு ஏற்றாற்போல் பேசி... எப்படியும் தன் கண்ட்ரோலுக்குள் கொண்டு வரும் சாமர்த்தியத்தைக் கண்ணன் பார்த்துப் பார்த்து வியப்பதுண்டு.

காலை நேர அவசரப் பயணம் மூன்று ட்ரிப் ஓடி முடிந்தபின் கொஞ்சம் ரிலாக்ஸ் டைம் வரும்.

அப்போது தன் நண்பனுடன் காண்டீனில் அமர்ந்து தேநீருடன் ஏதாவது ஒரு பலகாரத்தை எடுத்துக் கடிக்கும்போது ஏற்படும் ஓய்வு இருக்கே... வார்த்தையில் சொல்ல முடியாது.

ரவி ஒரு வடையை எடுத்துக் கடித்துக்கொண்டு அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்க... கண்ணன் உலுப்பினான்.

"ஏண்டா...? மீண்டும் குடும்பத்தை வேலைக்கு கூட்டிட்டு வந்திட்டியா...?"

"இல்லைடா... நினைக்கக் கூடாதென்றுதான் நினைக்கிறேன். ஆனா முடியல..." ரவியின் இயலாமை வார்த்தையில் தொனித்தது.

"டேய்... நான் உனக்கு ஒன்று சொல்லணும்ன்னு நினைச்சேன். ஆனா சொல்லமுடியல. ஆனா சொல்லாமலும் இருக்க முடியல. என்னதான் நாம நெருங்கிய நண்பர்களாக இருந்தாலும் குடும்ப விஷயம் என்று வரும்போது தலையிடுறது நல்லாயில்லைன்னுதான் நினைச்சேன். ஆனா சொல்ல வேண்டிய கட்டாயம் வந்ததால் சொல்றேண்டா..."

"என்னடா நீ...? நீ என் பெஸ்ட் ஃப்ரண்டுடா. நீ சொல்லாமல் வேறு யார்டா சொல்லுவாங்க? சொல்லுடா...!"

"இங்கே பார்! ஒரு கப்பலை ஒரு காப்டன்தான் வழி நடாத்துகிறார். ஒரு விமானத்தை ஒரு பைலட் தான் தன் கட்டுப்பாட்டுக்குள் வைச்சிருக்கார். ஒரு நாட்டை பிரதமர்தான் நிர்வகிக்கிறார். இவங்களெல்லாம் வீணான சென்டிமண்டுகளுக்கும், பலவீனங்களுக்கும் இடம் கொடுத்தால் என்ன நடக்கும் தெரியுமா...? ஒன்றும் ஒழுங்காக ஓடாது. கப்பல் தரையில்தான் ஓடும்! விமானம் தண்ணீரில் நீந்தும். இதே போல்தான் குடும்பமும்..." – ரவி விழிகளை விரித்தான்.

கண்ணன் தொடர்ந்தான்.–

"இப்படித்தான் உன் குடும்பமும். உன் குடும்பத்தில் எத்தனையோ குழப்பங்கள் உண்டு. எத்தனையோ ஓட்டைகள் உண்டு. அந்த ஓட்டைகளை முதலில அடைத்தால்தான் குடும்பத்திலுள்ள குழப்பங்கள் எல்லாம் நீங்கும். நீ இந்த லைன் பஸ்ஸை எப்படிக் கொண்டு நடாத்துகிறாய் என்பதையே ஏன் ஒரு உதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது? ஒவ்வொரு விதமான மனிதர்களை எப்படிச் சமாளிக்கிறாய். சில நேரம் பண்பாகவும்... சில நேரம் குரலை உயர்த்தியும் எல்லோரையும் சமாளித்து உன் கண்ட்ரோலுக்குள் பஸ்ஸை வைத்திருக்கும் உன்னால், உன் குடும்பத்தை உன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கத் தெரியாதா...? குடும்பம் என்பது உன் இரத்தம்... உன் உறவுகள்தான். என்றாலும் அதை ஒரு நல்வழிக்குக் கொண்டு வருவதற்கு சில சென்டிமன்டுகளையும், பலவீன பாசங்களையும் கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டு, கடுமையாகவும் நடந்து கொள்ளத்தான் வேண்டும். இதை உன் குடும்ப எதிர்கால நலனுக்காகத்தான் சொல்றேன்..."

"ஆ... ஆனால் கண்ணன்... என்னால..."

"உன்னால் முடியும். முடியனும்! உன் குடும்பத்தைக் கொண்டு நடாத்தும் காப்டனாக நின்று வழி நடத்த வேண்டியது உனது கடமை! ஏதோ உழைக்கிறோம். கொடுக்கிறோம் என்பது மட்டும் எமது கடமையல்ல. அதனால அவர்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அர்த்தமுமில்லை. குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் எதிர்கால பொறுப்புகள் நிச்சயம் இருக்கணும். அதுக்கு இப்போ உன் கண்டிப்பும் நிச்சயம் குடும்பத்திற்கு தேவை! அப்போதுதான் எல்லோர் மனதிலும் ஆரோக்கியமான பொறுப்புணர்ச்சி ஏற்படும்..."

அவன் சொல்லச் சொல்ல,

கண்ணன் அவனை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

'அர்ஜுனுக்காக தேர் சாரதியாக இருந்து பகவத்கீதையை உபதேசம் செய்த கிருஷ்ணனைப்போல... எனக்கும் என் நண்பன்.. பஸ் சாரதி கண்ணன்...'

உண்மை புரிந்தது. அவன் உபதேசம் புரிந்தது.

நட்பின் ஆழமும் அக்கறையும் தெரிந்தது.

மனம் முடிவு செய்து கொண்டது.

குடும்பத்தை ஒழுங்காகக் கரை சேர்க்க வேண்டுமானால் இப்படித்தான் இருக்க கவேண்டும்.

அவன் எழுந்தான்.

அவன் எழுந்த வேகம் கண்ணனை திருப்தியடையச் செய்ய... மெல்ல புன்னகைத்தான்.

(யாவும் கற்பனை)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க...

## பேரின்பமான நாளுக்கான சிந்தனைகள்

* திருப்தி உள்ளவர் வங்கியில் சிறிய கணக்கொன்றை வைத்திருப்பினும் பெரும் செல்வத்தைக் கொண்டவராய் உணர்வார்.

* சுதந்திரம் மனதில் உதயமாகின்றது கயிறுகளை வெட்டி விடுவதில் அல்ல.

* மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பது ஒரு பெரும் தர்மமாகும்.

* இன்முகம் ஒருவரின் ஆர்வத்தை உயர்த்தி வைப்பதுடன் மற்றவர்களின் உதடுகளில் புன்னகையையும் தவழச் செய்யும்.

* எந்தக் கஷ்டமான வேலையையும் ஒரு புன்னகை இலகுவானதாக்கிவிடும்.

* உங்கள் முன்னேற்றத்தில் கூடிய நேரத்தைச் செலவிடுங்கள். அப்போது மற்றவரை விமர்சிக்க நேரம் இருக்காது.

* வாழ்வின் இனிமையைச் சுவைப்பதற்கு, உங்களுக்கு கடந்த காலத்தை மறக்கும் சக்தி இருக்க வேண்டும்.

* வீணான வேலைகள் உங்களைச் சுமையாக்கிக் களைப்படைய வைத்துவிடும். நேர்முகமான வேலைகள் உங்களை மகிழ்ச்சியாகவும், இலேசாகவும், புத்துணர்ச்சியுடனும் இருக்கச் செய்யும்.

* மிகவும் சந்தோசமாக இருப்பவர்களுக்கு உள்ளார்ந்த சோம்பல் இருக்காது. சோம்பல் ஒரு பெரும் விகாரமாகும்.

* பேரின்பமான வாழ்வின் உண்மையான அத்திவாரம் சமநிலையாகும். இதை எப்போதும் மனதில் வைத்திருப்பின் உங்களது நிகழ்காலமும் எதிர்காலமும் எப்போதும் பிரகாசமாக இருக்கும்.

"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....

# "மீண்டும் ஒரு புன்னகை வீசி என் மனப் புண்ணை ஆற்றிவிடு"

இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

தை மாதக் குளிர் எலும்புகளுக்குள்ளும் குளிர் ஈட்டிகளைச் செருகியது. முரட்டுத் துணிச் சட்டையின் எதிர்ப்பை அது இலகுவாகத் தோற்கடித்துவிட்டிருந்தது. கைகளால் நெஞ்சை இறுக்கிக் கட்டிக்கொண்டபடி, தசைகளின் நடுக்கத்தைச் சமனப்படுத்திக்கொள்ளும் முனகல்களை உதடுகள் வெளியிட மெல்ல அடி வைத்து நடந்தான் அமிர்தன்.

'இந்தக் குளிருக்குள் எப்படி அவர்கள் குளித்துவிட்டும் வருகிறார்கள்!' என்று தனக்குள்ளாகக் கேட்டுக்கொண்டான். வழக்கமாக இவ்வளவு கெதியாக விடிவதற்கு முன் எழுபவனல்ல அமிர்தன். திருவெம்பாவை தொடங்கிய இந்தச் சில நாட்களாகத்தான் குளிரையும் காலைத் தூக்கத்தையும் உதாசீனம் செய்யப் பழகியிருந்தான்.

அன்று அவளை முதன்முதலில் பார்த்தபோதே, அதிகாலைக் குளிரில் எழுப்பி விரட்டிய தந்தையின் மீதான கோபம் காணாமல் போனது.

ஆற்றில் குளித்துவிட்டுத் தோழிகளுடன் திரும்பிக்கொண்டிருந்தாள். அத்தனை பேர் நடுவிலும் அவன் கண்களை அசையவொட்டாமல் கவர்ந்து தன்னிடமே தக்கவைத்துக்கொள்ளும் காந்த எழிலை அவள் கொண்டிருந்தாள்.

முகத்திலும் கை கால்களிலும் இருந்த நீர் முத்துக்கள் காலை ஒளியில் பளபளத்து, உடலெங்கும் முத்திழைத்துக்கொண்ட மோகினியாக அவளைச் செய்திருந்தது.

'என்ன அழகு இது!' உள்ளத்தின் உள்ளே வலியற்று வேல் ஒன்றைப் பாய்ச்சியது போல் அதிர்ந்தான் அமிர்தன்.

முழுநிலவென ஒளிவீசிய அவள் முகத்தைப் பார்த்தால் யாராவது திருஷ்டி போட்டுவிடவே செய்வார்கள் என்பதைத் தெரிந்து, நெற்றியிலும் கன்னத்திலும் கறுப்புக் கோடுகளென சில ஈரத் தலைமயிர்கள் வளைந்து ஒட்டிக் கிடந்தன. ஆனால், அவையும் அவள் அழகை மேலும் அதிகப்படுத்தினவே தவிர, களங்கப்படுத்த முடியவில்லை. அவள் பருவத்தின் கட்டற்ற திமிறலையும் வெறியையும் சமாளிக்க மாட்டாமல் அந்த ஈர உடைகள் திணறின.

இவனை அவள் பார்த்திருக்க வேண்டும். உடல் முழுக்க நாணம் ததும்ப, முகத்தில் அதன் அழகுத் தெறிப்பாய் புன்னகை கோலமிட, பார்வையை நிலத்தில் சாய்த்து நடந்து வந்துகொண்டிருந்தாள்.

'சே! அவள் பார்க்கும்போது என் கண்களால் அதைச் சிறைப்பிடிக்க முடியாமல் போனேனே...' தவித்தான் அமிர்தன். திரும்பவும் ஒருமுறையேனும் அந்த இமைகள் உயர்ந்து நாண விழித் தேனொளியைப் பாய்ச்சாதா என்று ஏங்கியபடி இமை வெட்டாமல் நடந்தான்.

"அதென்ன, நாணப்பட்டு தலைகுனிந்து அடக்க ஒடுக்கமாக வந்தால்தான் பெண்களுக்கு அழகு என்று சொல்லிச் சொல்லி எங்களை வெறும் அழகுப் பதுமைகளாக, உங்கள் தேவைக்கேற்றபடி வளைந்து குறுகி, இளித்து நிற்க வேண்டிய அடிமைப் பிராணிகளாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்!" என்று அவன் பள்ளித் தோழி மாலதி கோபத்தில் வெடிப்பது அவன் ஞாபகத்தில் வந்தது.

"என் மனதை மகிழ்ச்சிப்படுத்தும் அழகைத்தானே நான் அழகென்று கொண்டாட முடியும். அதில் என்ன தவறு?" என்று இவன் சொல்வான்.

"உங்கள் அழகுணர்ச்சியே பெண்ணை அடிமைப்படுத்தி அவளை இரண்டாந்தரமாக்கி உங்களுக்குக் கீழ் வைக்கும்



பாரம்பரியத்திலிருந்து பெற்றுக் கொண்டதுதான். பெண்ணின் அறிவு, திறமை பற்றியெல்லாம் உங்களுக்கு அக்கறை இல்லை. அவள் வெறும் அழகுப் பதுமையாய் நின்றால் போதும்... அதற்குக் கிளர்ச்சியடைந்து கவிதைப் பொய்களைப் புலம்புவதற்குத்தானே மரபு உங்களைப் பழக்கப்படுத்தி வைத்திருக்கிறது!"

மாலதியின் கோபத்தில் நியாயமிருப்பது புரிந்தாலும், பெண்ணின் அழகும், வெட்கமும் எனக்குக் கிளர்வூட்டுவதை ஏன் மறைக்க வேண்டும்? மரபிலிருந்தே வந்திருந்தால்தான் என்ன, என்னுடைய பழக்கங்கள் அனைத்தும் அப்படித்தானே வந்து சேர்ந்திருக்க வேண்டும். இப்படி நான் கிளர்ச்சியடைவது உயிரின இயல்புதானே... இதன் தொடர்ச்சியாய் பெண்ணை இரண்டாந்தரமானவளாயும், என்னை விடத் தாழ்ந்தவளாயும் நான் நடத்தினால் அதுதான் தவறு... என்று தனக்குள் சமாதானம் சொல்லிக் கொண்டான் அமிர்தன்.

அன்றிரவு தூக்கம் வராமல் அவஸ்தைப்பட்டான். அவளை நினைக்கையிலேயே இன்பமான ஏதோ ஓர் அலை இதயத்தை ஊடுருவிச் சென்றது.

அடுத்த நாளும் அதிகாலையே எழுந்து போனான். தோழிகளுடனேயே வந்தாள். முதல் நாளை விட இன்று தன்னை அதிகம் அலங்கரித்துக்கொண்டிருப்பதாகப் பட்டது. அவளது அலங்காரம் தன்னைக் குறித்தே செய்யப்பட்டது என்று நினைத்துப் பெருமிதம் கொண்டான். அது அவளுக்குத் தன் மீதிருக்கும் ஆவலையும் மதிப்பையும் தெரிவிப்பதாக நினைத்துப் புளகாங்கிதமடைந்தான்.

அவள் மட்டும் நானிருக்கும் திசையில் திரும்பி இன்று ஒரு கண நேரப் புன்னகையையேனும் எனக்குப் பிச்சையிடுவாளாக இருந்தால், கடவுள் என்று ஒருவர் இருப்பதையும், தன் மீது கூட அவருக்குக் கருணை இருப்பதையும் தான் நம்பவேண்டி வரும் என்று நினைத்துக் கொண்டான்.

அந்த சூழலையே ஒளிமயப்படுத்தியவளாக அவள் வந்துகொண்டிருந்தாள். முகம் பளிச்சென்று துல்லியமான பரிசுத்தத்தில் இருந்தது.

அவளைப் பார்க்கவே பிறந்தவன் போல அமிர்தன் பார்த்துக்கொண்டு நின்றான். மனதுக்குள் இன்பச் சிறகுகளின் சடசடப்பு!

திடீரென்று ஒரு கணம் இமைகளை உயர்த்தி இவனைப் பார்த்தபோது, தன் கண்களால் அந்தப் பார்வையைக் கைப்பற்றினான். சிறிது தடுமாறி, மறுகணம் ஒரு புன்னகையை இவனை நோக்கி எறிந்துவிட்டு அவள் போனாள். இவன் உடல் முழுவதும் பரவசம் ததும்ப நின்றுகொண்டிருந்தான். அந்தப் புன்னகை கிளைத்து வளர்ந்து இவனை ஆகாயத்தில் மிதத்தியது.

மனம் முழுக்க சந்தோசத்தைத் தவிர எதுவுமற்று, அவன் அது வரை இருந்த உலகம் எங்கோ காணாமல் போனதாய் உணர்ந்தான். மற்றவர்கள் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கும் உலகம் இது என்பதை மறந்து, பகிரங்கமாக தனக்குத்தானே சிரித்துக்கொண்டு செல்லும் ஒரு பைத்தியம் போல நடந்தான்.

அவள் போய்விட்டாள்.

அவளைக் கண்டபோது முளைத்த சிறகுகள் யாவும் வழியெங்கும் உதிர்ந்து விழ, சோர்வுடன் வீடு வந்து சேர்ந்தான்.

வீட்டில் இருக்க முடியவில்லை.

கால்களுக்குக் கீழே யாரோ கடும் நெருப்பைக் கொளுத்திவிட்டிருப்பது போல உணர்ந்தான். தலைக்குள்ளும் நெருப்பு தகதகவென்று எரிந்தது.

எழுந்து வெளியே வந்தான். காற்றிலும் யாரோ அந்தக் காலையிலேயே அனலைக் கலந்துவிட்டிருந்தார்கள்.

அவளை உடனே பார்த்தாக வேண்டும் என்ற பதைப்போடு இலக்கின்றி நடந்தான். அவள் வீடு எங்கிருக்கிறது? அவனறியான்! அந்த நீண்ட தோள்களையுடையவளை எங்கு தேடுவான்? அவளைப் பார்க்க வேண்டும். மீண்டும் ஒரு புன்னகை வீசி என் புண்ணை ஆற்றிவிடு என்று கெஞ்ச வேண்டும்; அல்லது உன் பார்வை முள்ளால் என் நெஞ்சைக் கீறு. வலிக்க வலிக்க இதயத்தைக் குதறியெடு. இரத்தம் பெருகி வடிந்து என் வெம்மை தணிக்காதா? அவளைப் பார்க்கும் வரை எப்படிப் பிழைத்திருக்கப் போகிறேன் எனப் பதறியபடி நடந்துகொண்டிருந்தான் அமிர்தன்.

***இழையணி ஆயமொடு தகுநாண்***
***தடைஇ தைஇத் திங்கள்***
***தண்கயம் படியும் பெருந்தோட்***
***குறுமகள் அல்லது மருந்து பிறிது***
***இல்லை யான்உற்ற நோய்க்கே.***
***( நற்றிணை - 80 : 6 - 9)***

---

பதில்கள்

**மீண்டும் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவிருக்கும் கிரேக்க நாட்டைப் பற்றி என்ன தெரியும் சிந்தியாவுக்கு?**

- இ. பரந்தாமன், குயின்ஸ் டவுன்.

*பண்டைய கிரேக்கத்தில் பிறந்த உடனேயே குழந்தைகளை ஒலிம்பஸ் மலைக்கு அப்பால் போட்டுவிட்டு வந்துவிடுவார்களாம். மறுநாள் காலையில் போய்ப் பார்க்கும்போது குழந்தை பிழைத்திருந்தால் தூக்கி வந்து வளர்ப்பார்களாம்!*

*வளர்ந்த பிறகு ஏகப் பிரதிநிதித்துவத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் உயிரோடிருக்க முடியாது என்று சமூக உறுப்பினர்கள் பொங்கும் எழுச்சியால் தெரிவு செய்யப்படுவதை விட, அது பரவாயில்லை போல்தான் தெரிகிறது!*

***

**ஒரு வரிக் கவிதை சொல்ல முடியுமா?**

- பெ. விக்னேஸ்வரன், ஹட்டன்.

*இலக்குமிகுமாரன் நானதிரவியத்தின் கவிதைத் தொகுதியொன்றின் தலைப்பு. அதுவே கவிதைதான்! இதோ:*

*"ஒன்றுமில்லை என்று ஒன்றும் இல்லை"*

***

**சமீபத்தில் உங்களைக் கவர்ந்த திரைப் பாடல்?**

- மனோ கோபாலன், ஹப்புத்தளை.

*சண்டியருக்குப் பிறகு நந்திதா ... ம் ..... பிறகு அம்புலி மாமா.*

***

**சிந்தியா, இன்றைய இளம்**

சிந்தியா பதில்கள்

**நடிகர்களில் யாருடைய நடிப்பு உங்களைக் கவர்ந்தது?**

- எம். றிஸ்வான், கொழும்பு - 12.

*விக்ரம், மாதவன், தனுஷ் என்று நம்பிக்கை வைத்த இவர்கள் அடுத்தடுத்த படங்களில் ஏமாற்றம் தந்துமிருக்கிறார்கள். படத்துக்குப் படம் நடிப்பில் வளர்ந்து வருபவர் மார்க்கண்டேயர் வாரிசுதான்!*

***

**நடுவர்களால் சந்தேகம் தெரிவிக்கப்பட்ட வேறு எந்த நாட்டுப் பந்துவீச்சாளர்களுக்கும் செய்யாத உடலியற் பரிசோதனைகளை (சதாம் ஹுசைனுக்கு அமெரிக்கர்கள் செய்தது போலவே ஒரு இழிவுபடுத்தல்) முரளிக்கு மட்டும் செய்தது ஏன்?**

- தேவி மகாதேவன், சிங்னாப்பிட்டி.

*அர்ஜுன ரணதுங்க சொன்னது போல, நம்மவர்கள் அவசரப்பட்டு "எங்கப்பன் குதிருக்குள் இல்லை" என்ற பதற்றத்தைக் காண்பித்துவிட்டார்களோ!*

***

**பிரதான தமிழ்த் தினசரிகள் புலிகள் அமைப்பின் துண்டுப் பிரசுரங்களாகத்தான் வெளிவருகின்றன என்று சொல்லப்படுவது பற்றி நீர் என்ன சொல்கிறீர்?**

- தமிழன்பன், ஏறாவூர் - 5.

*எனக்கும் அந்த வருத்தம் உண்டு. உதாரணமாக வடக்கு - கிழக்கில் வாக்களிப்பு நடைபெற்ற விதம் பற்றி தேர்தல் கண்காணிப்புக் குழுக்களும் அங்குள்ள மக்களும் பெரிய அளவில் தில்லுமுல்லுகள் நடந்ததாகத் தெளிவுபடச் சொல்கிறார்கள். மக்கள் தங்களுக்குள் பேசும்போது, இதுபற்றிய வல்லாண்மைத் திருவிளையாடல் களைக் கதை கதையாய்ச் சொல்லி 'தேர்தலே ஒரு கேலிக்கூத்துதானே' என்று சலித்துக்கொள்கிறார்கள். ஆனால், பத்திரிகைகளைப் பாருங்கள்! இதுபற்றி எதுவும் அசுக்கிடாமல் '96 வீத மக்கள் ஆணை... 96 வீத மக்கள் ஆணை' என்றே மந்திரம் போல செபித்து வருகிறார்கள். பத்திரிகா தர்மம், மக்களுக்கு உண்மையைத் தெரியப்படுத்தல், நடுநிலைமை என்பதெல்லாம் பத்திரிகைகளின் குண விசேடங்கள் என்று நீங்கள் ஏற்றுக் கொள்வதாக இருந்தால்... நமது பத்திரிகைகளைப் பற்றி என்ன சொல்ல முடியும்!*

***

**மீண்டும் சிம்ரன் நடிக்க வரப்போவது பற்றி?**

- என்.எம். நிஸாம், காத்தான்குடி.

*பலரது நெஞ்சங்களில் தேவதையாக அமர்ந்திருக்கும் ஒரு பிம்பம் உடையப் போவதை அவர் உணரவில்லை; அல்லது உடைந்தால்தான் என்ன...*

***

**சமீபத்தில் மறைந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றேகன் பற்றி ஏதாவது சொல்ல முடியுமா?**

- ஆர்.எல். ராதிகா, தெல்தொட்ட.

***

*நம்ம எம்.ஜி.ஆர், ராமா ராவ், ஜெயலலிதா போல நடிகராக இருந்து அரசியலுக்கு வந்தவர் என்று தெரியும். அதற்கு மேல்... ம் .... இந்த மாதிரி பரீட்சைகள்தானே வேணாமென்கிறது... சமாளிக்க, ஒரு ஜோக்கைத் தந்துவிடுகிறேன்.*

*ஜோ, முதியோர் கல்விக்கான, இரவுப் பள்ளிக்குப் போய்க்கொண்டிருந்தவன்., ஒருநாள் தன் நண்பன் பேடியிடம்,*

*"றொனால்ட் றேகன் யார் தெரியுமா?" என்று கேட்டான்.*

*"தெரியாது" என்றான் நண்பன்.*

*"அவர் அமெரிக்க ஜனாதிபதி. சரி, போகட்டும். மார்கிரட் தட்சரைத் தெரியுமா?" என்று கேட்டான் ஜோ.*

*"தெரியாது" என்றான் நண்பன்.*

*"அவர்தான் பிரிட்டிஷ் பிரதமர். நீயும் என்னைப் போல இரவுப் பள்ளிக்கூடத்துக்குப் போனால், இதெல்லாம் தெரிந்து கொள்ளலாம்" என்றான் ஜோ.*

*அதைக் கேட்ட நண்பன், "உன்னை நானொன்று கேட்கப் போகிறேன். உனக்கு மைக் ஓ சல்லிவனைத் தெரியுமா?" என்று கேட்டான்.*

*"தெரியாது" என்று ஒப்புக்கொண்டான் ஜோ.*

*"நீ இரவுப் பள்ளிக்கூடத்தில் இருக்கும்போது, உன் மனைவியுடன் வந்து குலாவிவிட்டுப் போகிறவன்தான் அவன்" என்றான் நண்பன்.*

***


**சிந்தியா! இந்தக் காதல் என்பது என்ன?**

- நா. பிரியா, மொறகொல்ல.

*ஓர் அறிஞர் சொல்லியது இது: "மறைந்து கிடக்கும் பிரபஞ்ச இருப்பை, ஒரு சின்ன றோஜாப் பூ வெளிப்படுத்திவிடுவது போல, உனது இருப்பில் காதல் ஒரு றோஜாப் பூ!"*

***

**இன்று பிரதான தமிழ்த் தினசரிகளில் எல்லாம் அரசியல் விளக்கக் கட்டுரை எழுதி வருகிறவர்கள், சுத்திச் சுத்தி "ஏகப் பிரதிநிதித்துவத்தை ஏத்துங்கள்!**



**நினைத்தபடி எல்லாம் நடக்கும்!" என்று சோதிடர்கள் பாணியில் சொல்லுவதைத் தவிர, வேறு என்னத்தைத்தான் சொல்லுகிறார்கள்?**

- இ. உமாபதி, கொழும்பு - 11.

*ஏன், மற்றவர்களின் பேச்சுக்களை அல்லது மூச்சுக்களையும் பறித்துவிட்டால்.... பிறகு, சுதந்திரத் தமிழீழம்தான் என்றும் சொல்லுகிறார்களே!*

***

**அஜித்தின் 'ஜனா' எப்படி?**

- பி. கௌரி, தோணிக்கல்.

*2006இல் அவர்தானாம் சூப்பர் ஸ்டார்! அப்பாடா, ஒன்றரை வருடத்துக்குக் கவலையில்லை.*

***

**பற்பசை கண்டுபிடிக்கப்படாத முந்தைய காலத்தில் பல் துலக்க எதைப் பாவித்திருப்பர்?**

- வைஷ்ணவி வேலுத்தேவர், வெள்ளவத்தை.

*ஏதோ ஒரு ஔவை காலத்தில் ஆல், வேம்பு, குச்சிகள். அதற்கும் முன் ஆற்று மணல். அதற்கும் முன்... பல் துலக்குவதா, எதுக்கு?*

***

**சிக்கனமாக இருப்பது என்னும் பேரில் மிகக் கஞ்சத்தனமாக நடந்துகொள்பவர்களைப் பார்த்தால் உங்களுக்கு எரிச்சல் வருவதில்லையா?**

- கே.எம். சுதன், திருக்கோவில் - 2.

*தேவையற்ற கஞ்சத்தனம் எரிச்சலூட்டக் கூடியதுதான். அப்பாவித்தனமான சிக்கனம் சிரிப்பையும் வரவழைக்கக் கூடியது. இதோ!*

*நாதன் நாஸ்பாம் என்பவர், ஒரு பெரிய புகழ்பெற்ற மருத்துவரிடம் சென்றார். மருத்துவர் அவரைப் பரிசோதித்து முடித்து மருந்தும் கொடுத்த பின்னர்,*

*"எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் டொக்டர்?" என்று நாதன் கேட்டார்.*

*"ஐந்நூறு டொலர்கள்" என்றார் மருத்துவர்.*

*"ஐந்நூறு டொலர்களா? அதிகம் போலிருக்கிறதே!" என்றார் நாதன்.*

*"சரி, உனக்காக முந்நூறு" என்றார் மருத்துவர்.*

*"என்ன டொக்டர், ஒரு முறை பார்க்க முந்நூறா?" என்றார் நாதன்.*

*"சரி, நூற்றைம்பது கொடுக்க முடியுமா?"*

*"அவ்வளவு பணமெல்லாம் இல்லை டொக்டர்"*

*"சரி, ஐம்பது கொடுத்துவிட்டுப் போ!"*

*"இருபது கொடுக்கிறேன். வாங்கினால் வாங்குங்கள். இல்லாவிட்டால் போங்கள்!"*


*"எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நீ ஏன் அதிக மதிப்புள்ள என்னிடம் வந்தாய்?" என்று கேட்டார், மருத்துவர்.*

*"இதோ பாருங்கள் டொக்டர்! என் உடல் ஆரோக்கியம் என்று பார்க்கும்போது, செலவெல்லாம் பார்த்தால் முடியுமா?" என்றார் நாதன்.*

***

# தணிக்கையைத் தாண்டும் திரை ஆபாசம்

சமகால வெளியீடுகளான திரைப்படங்களில் அதிகப்படியானவை வெற்றிப்படங்களாக அமைந்துள்ளன. இதற்குப் பிரதான காரணங்கள் திரைக்கதை, கருக்கதை, இசையமைப்பு, இயக்கம் என்பவற்றில் ஒவ்வொரு பகுதியினரும் அபரிமித முயற்சியை வெளிப்படுத்துவதாகும். 200 நாட்களையும் தாண்டி இன்னும் பலரது மனங்களிலிருந்து நீங்காத இடம்பெற்ற சேரனின் ‘ஆட்டோகிராப்’ தங்கர்பச்சானின் ‘அழகி’, ஹரியின் ‘சாமி’, தரணியின் ‘கில்லி’ ஆகிய படங்களெல்லாம் நல்ல திரைப்படங்களுக்கு இன்னும் மக்கள் மத்தியில் வரவேற்பு இருப்பதை உறுதிசெய்கின்றன. திரைப்படப் பிரியர்கள்கூட



கதாநாயகன், கதாநாயகி என்பவர்களுக்கப்பால் இயக்குநர்களையும் இசையமைப்பாளர்களையும் ஏன் படத்தொகுப்பாளர்களைக் கூட இனங்கண்டு அவர்களின் திறமைகளுக்காக சினிமாவைப் பார்க்கின்ற அளவுக்கு சினிமா வெற்றிகொண்டுள்ளது. வெறுமனே பொழுதுபோக்கு அம்சமாகக் கருதப்பட்டாலும் இப்போதெல்லாம் உண்மைக் கதைகளாக உணர்வுப்பூர்வ விஷயங் களையும், பிரமாண்டங்களையும் இரசிக்கும்படியான இரண்டரை மணிநேரத்தில் தயாரித்துத் தருவதென்பதே பெரும் போட்டிகள் நிறைந்த தொழிலாகிவிட்டது.

கடந்த வருடம் மட்டும் எல்லா வேலைகளும் முடிந்து திரைக்கு வராமல் பெட்டிக்குள்ளேயே சுருண்டு கொண்ட திரைப்படங்கள் சுமார் 2000க்கும் மேல். திரைப்படத் தயாரிப்புக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை முதலீடு செய்து வெற்றிகண்ட ஒரு சில தயாரிப்பாளர்களைவிட கடனாளியாகவும், அடுத்த வேளை உணவுக்கே வழியில்லாதவராகவும் தலைமறைவு வாழ்க்கையைக் கொண்டவராகவும் ஆகிப்போனவர்கள் அதிகம்பேர். இதில் கடைசி நபர் ‘காதல்தேசம்’ திரைப்பட இயக்குநரும், தயாரிப்பாளருமான கதிர். இப்படியான போட்டிகள் நிறைந்த சினிமா உலகில் குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பதற்காக மிகக் கீழ்த்தரமான திரைப்படங்களைத் தயாரிப்பதிலும், ஒரு சிலர் ஈடுபட்டுள்ளனர் என்பதையும் மறுப்பதற் கில்லை. அதிலும் தமிழ்ச் சினிமாவை விடவும் தெலுங்கு, மலையாளம் படத் தயாரிப்பாளர்கள் இவ்வாறான கீழ்த்தர சினிமா தயாரிப்பிலும் அதிக அக்கறை காட்டி வருகின்றனர்.

இலங்கையின் திரையரங்குகளில் நல்ல திரைப்படங்களாக இப்போதெல்லாம் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே நேரத்தில் வெளியிடப்படுகின்றன. இரண்டாந்தர திரையரங்குகள் நல்ல திரைப்படங்களைக் கொள்வனவு செய்வதில் இருக்கின்ற முதலீடு தொடர்பில் அக்கறை கொள்ளாமல் மலிவான விலையிலும், அதேநேரம் வசூல் நிலையை மட்டும் கருத்தில் கொண்டு தெலுங்கு, மலையாள திரைப்படங்களின் தமிழாக்கத்தில் அமைந்த ஆபாசத் திரைப் படங்களை இறக்குமதி செய்தும் திரையிடுகின்றன. திரைப்படத் தணிக்கைக் குழு ஆபாசத் திரைப்படங்கள் தொடர்பில் எவ்வளவு தூரம் சரியான அவதானிப்புகளைச் செய்கின்றதென்பது கேள்விக்குறியே. ஏனெனில், வயது வந்தவர்களுக்காக மட்டும் என்று விளம்பரங்களில் எழுதப்பட்டிருந்தாலும் திரையரங்கு களைப் பொறுத்தவரை பாடசாலை மாணவர்களும், பராயமடையாத சிறுவர்களும் கூடி நிற்பதைக் காணமுடிகிறது. இவ்வாறு வெளியிடப்படுகின்ற ஆபாசத் திரைப்படங்கள் உண்மையில் இயற்கையான தேவையென விசமத்துக்கு நியாயம் கற்பித்தாலும், அது சமூகச் சீரழிவையும், முரண்பட்ட எண்ணப்பாடுகளையும் தோற்றுவிக்கிறதேயொழிய, நற்சிந்தனைகளைத் தோற்றுவிப்பதாக இல்லை. தற்சமயம் இலங்கையில் திரையிடப்பட்டிருக்கும் ***அறியாத பையன், இரவு விடுதி, சுகமான அனுபவம், சாயக்கடை சரசு, ப்ளீஸ் வெயிட், நாகவள்ளி*** - இவ்வாறான படங்கள் பெயர்களிலேயே அருவருப்புகளைக் கொண்டிருக்கின்றன என்பதைப் புரிந்துக்கொள்ள முடியும். திரையரங்க உரிமையாளர்கள் பணத்தை மட்டும் பார்க்கிறார்களே ஒழிய, இவ்வாறான திரைப்படங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் விளைவுகள் குறித்து துளியளவேனும் கவலை கொள்வதில்லை. ஆனால், புதிய திரைப்பட தணிக்கைக்குழு இத் திரைப்படங்கள் குறித்த விடயத்தில் அதிக அக்கறையோடும் சமூகப் பார்வையோடும் கண்டிப்பான முடிவுகளை எடுக்குமென எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு குரல் கொடுக்கும் மக்கள் விடுதலை முன்னணி அமைச்சர்களோடு சேர்ந்து குரல் கொடுக்கத் தகுதி வாய்ந்த அனைவரும் முன்வர வேண்டும். இவ்விடயத்தில் ஊடகங்கள் தமது பங்களிப்பை வருமானம் கருதாது செலுத்த வேண்டியதும் அவசியமாகும். தணிக்கைக் குழுவின் பார்வைக்குப் பின்பு இணைத்துக் கொள்ளப்படும் ஆபாசக் காட்சிகள் தற்போது திரையிடப்பட்டிருக்கும் திரைப்படங்களில் காண்பிக்கப்படுவதாக சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். நடைபெற்ற யுத்தத்தால் ஏற்பட்ட சமூகச் சீரழிவும் வளர்ச்சிப் பிற்போக்கும் ஒருபுறமிருக்க, இவ்வாறான ஆபாசத் திரைப்படங்கள் சமூகச் சீரழிவையும், பிற்போக்கு எண்ணங்களையும், பாலியல் வன்முறைத் தூண்டல்களையும் தோற்றுவித்து சமூகத்தின் மறுபுறத்தேயும் அழிவுக்கு இட்டுச் செல்கின்றன. இது நிறுத்தப்பட வேண்டுமெனில் இளைஞர்கள், தகுதிவாய்ந்த அதிகாரிகள், ஊடகங்கள் ஒன்றிணைந்து இவ்வாறான திரைப்படங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம்.

## வாரம் ஒரு சிரிப்பு

**இரு தோழிகள் பேசிக்கொண்டது :-**

"நானும் பார்க்கறேன்...உன் வீட்டுக்காரர் உன் சேலையைத் துவைக்கும்போது நீ அநியாயமா அவரைத் திட்டுறியே."

"உனக்குத் தெரியாது! அப்படித் திட்டினால்தான், அந்தக் கோபத்தில் என் புடவையை அடிச்சித் துவைப்பாரு! என் புடவை நல்லா வெளுக்கும்."

**இரு நண்பர்கள் பேசிக்கொண்டது :-**

"தினமும் உன் மனைவிக்கு பூவாங்கிட்டுப் போறியே, உன் மனைவி மேலே உனக்கு அவ்வளவு பிரியமா?"

"அட நீ ஒண்ணுப்பா! அந்தப் பூக்காரி ரொம்ப அழகா இருக்கா! அதனால்தான்!"

**இருவர் பேசிக்கொண்டது :-**

"இந்த பஸ் எதுவரைக்கும் போகும்?"

"டீசல் இருக்கிறவரைக்கும் போகும்."

**இருவர் பேசிக்கொண்டது :-**

"என்னை எழுத்தாளனாக ஆக்கியது என் மனைவிதான்."

"அப்படியா!"

"ஆமாம்! தினம் நான் செய்ற சமையலை எழுதி புத்தகமா போட்டுட்டேன்."

**இரு தோழிகள் பேசிக்கொண்டது :-**

"அடுத்த பிறவியிலும் நாம ஒண்ணா இருப்போம்னு என் காதலர்கிட்ட சொன்னது தப்பாப் போச்சு."

"ஏண்டி?"

"சரி! இன்னொரு சான்ஸ் இருக்குது இல்லே! இப்ப என்னை விட்டுடுன்னு சொல்றார்."

## வாரம் ஒரு தகவல் தெரிந்துகொள்ளுங்கள்

### சிகிரியாவின் பழைய பெயரும் வரலாறும் என்ன?

சிகிரியாவின் பழைய பெயர் சிவகிரி. அதைக் கட்டிய மன்னன் சிங்கமகாசூரன். சூர பரம்பரையின் குல விருது சிங்கம். அதனாலே தான் சிங்க முகத்தோடு அக்கோட்டை அமைக்கப்பட்டது. காசியப்பன் தாதுசேனனின் வைப்பாட்டியின் மகன். மகாவம்சம் எழுதிய தமிழ் தேரான மகாநாமாவின் மருமகன் தாதுசேனன். காசியப்பன் தாதுசேனனைக் கொலை செய்த போது பௌத்த மக்களோ அல்லது மகாநாமனோ தடுக்கவில்லை. காசியப்பன் பாதுகாப்புக் கருதி பதுங்கிய இடமே சிவகிரி. அதை மகாநாமனே சிகிரியா என மாற்றினான். சிகிரியா காசியப்பனால் கட்டப்படவில்லை எனத் தொல் பொருளாய்வாளர் தெரணியகல திட்டவட்டமாகக் கூறுகிறார்.

## எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்? என்ன அதிர்ஷ்டம் பெறுவீர்கள்?

மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலாபலன்களாகும்.

சொல்பவர் :
ஜோதிட அறிஞர், பேராசிரியர்,
டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,
(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)

### ஆதிக்கம் –3 : பிறந்த கிழமை– செவ்வாய்

மூக்காலம் என்பதை மூன்றினுள் உலகம் அடக்கியுள்ளது. மும்மூர்த்திகள் என்பதுவும் மூன்றினுள்தான் இருக்கிறது. இந்தச் சிறப்புகள் எண் 3 இற்கு இருக்கிறது. செவ்வாய்க்கிழமையில் பிறந்திருக்கின்றீர்கள். நீங்கள் கோபக்காரர்களாகவே இருப்பீர்கள். கோபம் வந்தால் முன்பின் தெரியாது உங்களுக்கு. பின்னர்தான் அறிவு வேலை செய்யும். அப்போதுதான் வருந்துவீர்கள். இந்த இயற்கையான நிகழ்வுக்கு நீங்கள் காரணமல்ல. உங்கள் ஆதிக்க எண்ணின் வேலைதான் அது. இந்தக் குணம் ஆயுள் வரைக்கும் நீடிக்காது. 48 வயதிற்குப்பின் இந்தக் குணம் மாறிவிடும். பின்னர் சாந்தகுணம் வந்துவிடும்.

எவ்வளவுதான் உங்களுக்குக் கோபம் ஏற்பட்டாலும் காரியத்தில் அதிக அக்கறை காட்டிக் கண்ணுங் கருத்துமாகச் செயற்படுவீர்கள். வேலை விடயத்தைப் பொறுத்தவரையில் ஒழுங்கு, நேரந் தவறாமை, கடமை, விருப்பு போன்றவற்றில் கண்டிப்பாக இருப்பீர்கள். எந்தக் காரியமாக இருந்தாலும் நாளை செய்வோம் அடுத்த நாள் செய்வோம் என்ற அலட்சியப் போக்கு உங்களிடம் கிடையாது. குறிப்பிட்ட காலத்தினுள் விரைவாகச் செய்து முடிக்கும் திறன் கொண்டவர் நீங்கள்.

நாணயந் தவறாதவர்களாக இருப்பீர்கள். ஒன்றைச் சொன்னால் சொன்னதுபோல் உயிரைக் கொடுத்தாவது சிரமம் ஏற்பட்டாலும் பொருட்படுத்தாமல் செய்வீர்கள். அந்தளவிற்கு மனச்சாட்சிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டவர்களாக இருப்பீர்கள். கையில் பணம் இருக்கும் அளவுக்கு யோசிக்காமல் செலவு செய்வீர்கள்.

சேமிப்பைப் பற்றியோ திடீர்த் தேவை பற்றியோ சிந்திக்கமாட்டீர்கள். கையில் பணம் இல்லாவிட்டால் எப்படியாவது கடன் வாங்கி விடுவீர்கள். கடன் வாங்குவது பெரியதல்ல. அதனைத் திருப்பிக் கொடுப்பதில் தான் மனிதத்தன்மையும் நாகரிகமும் அடங்கி இருக்கிறது. அதேபோல் திருப்பிக் கொடுத்து விடுவீர்கள்.

யாராவது எந்த வகையிலாவது கஷ்டப்பட்டால் அல்லது துன்பப்பட்டால், அது உங்களுக்குத் தெரியவந்தால் நிச்சயமாக உதவி செய்வீர்கள். நீங்கள் பிறந்த ஒரு வருடத்தில் நோயின் பாதிப்புக்கு உள்ளாகிவிடுவீர்கள். கஷ்டப்பட்டு உயிர் பிழைப்பீர்கள். 21 வயதுக் காலத்தில் ஒரு கண்டம் ஏற்பட்டு விலகும். பின்னர் ஆயுள் வரை எந்த விதமான ஆபத்துக்களும் இல்லை.

நீங்கள் அணியும் சர்ட் வெள்ளை நிறமாக இருந்தால் அதிர்ஷ்டம் கிடைக்கும். நீளமாகக் கோடுபோட்ட சர்ட் இன்னும் சிறப்பினை உங்களுக்கு ஏற்படுத்தும். கைக்குட்டையும் இதே நிறத்தில் வைத்திருக்க வேண்டும். மோதிரம் அணிவதற்கு விருப்பமென்றால் இப்படிச் செய்யுங்கள் - உயர்தரமான பச்சைக்கல் அல்லது இமிடேசன் பச்சைக்கல் பதித்த தங்க மோதிரம் அணியுங்கள்.

42 வயது வரை ஆரோக்கிய வாழ்வுண்டு. நீங்கள் 43 – 49 வயது வரைக்கும் மேக நோயினால் பாதிக்கப்படுவீர்கள். அரிப்பு, சொறி, சிரங்கு, புண் ஏற்பட்டு சிகிச்சைக்குப் பின்னர் குணமடைவீர்கள். வாயுத் தொல்லையும் உங்களுக்கு ஏற்படும். இது அடிக்கடி ஏற்படும். இந்த நிலை ஆயுள்வரை தொடரும். ஆனால், உங்கள் உயிருக்கு ஆபத்து இல்லை.

நீங்கள் பிறந்த எண் 3 ஆக இருந்தாலும் உங்கள் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களையும், திருப்பங்களையும் ஏற்படுத்தக்கூடிய அதிர்ஷ்ட எண் ஏழு. எனவே, மாதத்தில் வருகின்ற 7, 16, 25ஆம் திகதிகளில் நல்ல காரியங்களைச் செய்யுங்கள். வெற்றி கிடைக்கும். இந்தத் திகதிகள் செவ்வாய்க்கிழமையில் அமையுமானால் அதிர்ஷ்டம் இரட்டிப்பாகும்.

நீங்கள் வசிக்கின்ற வீட்டு இலக்கம் உங்கள் வாழ்க்கையில் பல பலன்களை ஏற்படுத்தும். ஆதலால், வீட்டு எண் இவ்வாறு அமைந்திருக்க வேண்டும். 7, 16, 25, 34, 43, 52, 61, 70, 79, 88, 97, 106, 115, 124.

எந்தவிதமான நல்ல காரியங்களுக்கும் செவ்வாய்க்கிழமையினைத் தெரிவு செய்யுங்கள். அதிர்ஷ்டம் கிடைக்கும்.


நீங்கள் ஒரு முக்கிய காரணமாக வெளியே செல்கின்றீர்கள்; அந்தக் காரியம் வெற்றியா, தோல்வியா என்பதில் சந்தேகமா? நீங்கள் செல்லும்போது ஒரு ஆண் அல்லது ஒரு பெண் வந்தால் காரியம் வெற்றிதான். இரு ஆண்களோ அல்லலு இரு பெண்களோ வந்தால் காரியம் காலதாமதமாகும்.

ஆகவே, ஆதிக்க எண் 3 ஐயும், செவ்வாய்க் கிழமையினையும் உடைய நீங்கள் வாழ்க்கையில் சகல யோகங்களும் பெற்று வாழ என் ஆசீர்வாதங்கள்.

***செவ்வாய், சிறப்புக்கு இலக்கணம். அது மூன்றில் வந்தால் இன்னும் சந்தோசம். நல்வாழ்வுக்கு நீங்கள் அதிபதி. என்றும் நல்யோகத்திற்குக் காரணம் நீங்கள்.***

***(அடுத்து புதன்கிழமை பிறந்தவர்களைப் பார்ப்போம்)***

“மாஜிக் தந்திரங்கள்” குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.



# மாஜிக் தந்திரங்கள்

மேசை மேல் வைத்தால் ஒரு படி போல இருக்கும். இப்போது இதனுள் ஒரு பொருளைப் போட்டு குழாயை சரிவாகப் பிடித்து மேல் நோக்கித் தூக்கினால் அந்தப் பொருள் இந்தப் புனல் போன்ற பாகத்தில் போய் தங்கிவிடும். குவளையைத் தலைகீழாகக் கவிழ்த்தால் பொருள் கீழே விழாது. அரைப் புனல் பாகத்தில் தங்கிவிடும். இப்படிப்பட்ட ஒரு குவளை தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

மேடையில் இந்தக் காட்சியை ஆரம்பிக்கும்பொழுது குவளையைக் கவிழ்த்து சபையோருக்குக் காண்பித்து உள்ளே ஒன்றுமில்லை என்று சொல்லி அதை ஸ்ரூலின் மேல் வைத்து, ஒரு ரூபாயை சபையோரிடம் காண்பித்து, எல்லோருக்கும் எதிரில் அந்த ரூபாயை குவளையில் ஆட்டி ஓசை உண்டாக்கிக் காண்பித்துவிட்டு, மேலே ஒரு கறுப்புக் கைக்குட்டையைப் போட்டு மூடி, மந்திரக்கோலை ஆட்டி மந்திரம் போடுவது போல பாவனை செய்து, குவளையை எடுத்து ரூபாய் அரைப் புனல் பாகத்தினுள் போகும்படி நைசாக குவளையைத் திருப்பி தலைகீழாகப் பிடித்தால் ரூபாய் அரைப் புனலுக்குள் மறைந்துவிடும். கீழே விழாது. உள்ளே போட்ட ரூபாய் மறைந்துவிட்டதாக சபையோர் நினைப்பார்கள். மறுபடி குவளையின் மேல் கைக்குட்டையால் மூடி, மந்திரம் போட்டு கைக்குட்டையை எடுத்து குவளையிலுள்ள ரூபாய் வெளிவரும்படி குவளையைத் திரும்பிச் சாய்க்க, ரூபாய் வெளியே வரும். சபையோர் ஆச்சரியப்படுவார்கள்.


## சீட்டை ரயில் டிக்கெட்டாக மாற்றுதல்

மஞ்சள் அட்டையில் அச்சிடப்பட்ட ஒரு ரயில் டிக்கெட்டைக் கொண்டுவந்து அதை தண்ணீரில் போட்டு வைத்தால் அது நன்றாக ஊறிவிடும். பிறகு அச்சிடப்பட்ட மஞ்சள் தாளை மெதுவாக பெயர்த்து எடுத்தால் அது தனியே வந்துவிடும். அதை வெயிலில் காயவைத்து எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

சீட்டுக் கட்டில் ஒரு சீட்டை எடுத்து அதன் நடுவில் இந்த டிக்கெட் தாளை வைத்து அதே அளவிற்கு சீட்டை உள்பக்கமாக மடித்துவிட வேண்டும். நான்கு பக்கமும் மடித்தபின் ஒவ்வொரு பகுதியிலும், சீட்டின் மடிப்பு ஒன்றன்பின் ஒன்றாக மடிந்திருக்கும். அதன் பின் நடுவில் டிக்கெட் அளவுள்ள இடத்தில் டிக்கெட் காகிதத்தில் பசை தடவி அதை சரியான அளவில் சீட்டின் மேல் ஒட்டிவிட வேண்டும். பிறகு மடிப்புகளைப் பிரித்துவிட வேண்டும். இதை மேடையில் மேசை மேல் வைத்துவிட வேண்டும்.

இந்தக் காட்சியைக் காண்பிக்கும்பொழுது சீட்டுக் கட்டை எடுத்து, அதை நன்றாகக் குலுக்கிவிட்டு ஒரு சீட்டை எடுப்பதுபோல ரெயில் டிக்கெட் ஒட்டிய சீட்டை எடுத்து, சீட்டின் முன் பக்கத்தை சபையோரிடம் காண்பித்து, அதை கையில் பிடித்து வேகமாக இரண்டு மூன்று முறை கையை வீசிக்கொண்டே சீட்டை ரெயில் டிக்கெட் அளவிற்கு மடித்து ரெயில் டிக்கெட் ஒட்டிய பகுதியை டிக்கெட் போல கையில் பிடித்துக் காண்பித்துவிட்டு மறுபடி மடிப்புகளைப் பிரித்து முன்பக்கத்தைச் சபையோரிடம் காண்பித்து விட்டு சீட்டுக் கட்டுடன் சேர்த்துவிட வேண்டும்.

இதே போன்று ஓர் உண்மையான ரெயில் டிக்கெட்டை வாங்கி, சட்டையின் ஜேபியில் போட்டு வைத்துக்கொண்டு, சீட்டு ரெயில் டிக்கெட்டைக் காண்பித்தவுடன் அதை உடனே ஜேபியில் போட்டுக்கொண்டு நல்ல டிக்கெட்டை எடுத்து சபையோரிடம் கொடுத்துப் பார்க்கச் சொல்லி மறுபடி அதை ஜேபியில் போட்டு, சீட்டு டிக்கெட்டை எடுத்து கையில் பிடித்து இரண்டு மூன்று முறை வீசி விட்டு, வீசும் நேரத்தில் சீட்டின் மடிப்பை விரித்து, டிக்கெட்டை சீட்டாக மாற்றிக் காண்பித்து சீட்டில் வைத்துச் சேர்த்து குலுக்கி வைத்துவிட வேண்டும்.



**கவனிப்பு** : இந்தக் காட்சியை நடத்த நல்ல பழக்கம் வேண்டும். புதிதாகக் காட்சி நடத்துபவர் இந்தக் காட்சியைப் பலமுறை செய்து பழக்கத்திற்குக் கொண்டு வந்த பின்னரே சபையில் செய்து காண்பிக்க வேண்டும். ஜேபியின் உள்ளே வைத்திருக்கும் நல்ல டிக்கெட்டின் பின்புறமாக வரும்படி இந்த சீட்டு டிக்கெட்டை வைத்து, எடுக்கும் பொழுது ஞாபகமாக எடுக்க வேண்டும். மறந்துவிடக் கூடாது.

## மூலையைக் கிழித்த சீட்டை துப்பாக்கியால் ஒட்டுதல்

இந்தக் காட்சியை நடத்த ஒரு காற்று துப்பாக்கி தேவைப்படும். இதை ஆங்கிலத்தில் ஏர்கன் என்று சொல்வார்கள். இதில் ஒன்று வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

சீட்டுக் கட்டில் இரண்டு சீட்டுகள் ஒன்றைப் போலவே உள்ள மற்றொன்றை எடுத்து இந்த இரண்டு சீட்டில் ஒரு சீட்டின் வலது பக்கம் மேல் மூலையை சுமார் 1 1/2 செ.மீ. அகலம் வைத்து அதைப் பின்புறமாக மடக்கி நன்றாக அழுத்திவிட வேண்டும். இது பார்ப்பதற்கு மூலையை வெட்டியது போலத் தோன்ற வேண்டும். ஆனால், மடிப்பு பின் புறம் மடிந்து இருக்க வேண்டும். மடிப்பை நிமிர்த்தினால் முழு சீட்டு போல இருக்க வேண்டும். இந்த விதமான ஒரு சீட்டை தயார் செய்துகொள்ள வேண்டும்.

மற்றொரு சீட்டை மூலையை மடக்காமல் கிழிக்காமல் அப்படியே வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு சீட்டு டைமண்ட் 5 என்றால் மற்றொரு சீட்டும் 5 ஆகவே இருக்க வேண்டும்!

இந்தக் காட்சி ஆரம்பமாகுமுன் ஒரு சீட்டுக் கட்டை மேசையின் மேல் வைத்துவிட்டு பக்கத்திலேயே மூலை மடக்கி விடப்பட்ட சீட்டையும் வைக்க வேண்டும். மூலை மடக்கப்பட்ட சீட்டை ஒரு தீப்பெட்டியின் மேல் வைத்தால் அதைச் சட்டென்று எடுக்க சுலபமாக இருக்கும்.

காட்சி நடத்துகிறவர் மேடைக்கு வந்து மேசை மேலிருக்கும் சீட்டுக்கட்டை எடுத்து, அதைக் குலுக்கிக் கலந்து சீட்டுக்களை விரித்துப் பிடித்து சபையோருக்குக் காண்பித்து, அதில் டைமண்ட் 5 என்ற சீட்டை எடுத்து சபையோருக்குக் காண்பித்து, அதன் வலது மேல் மூலையை 1 1/2 செ.மீ. அளவிற்கு கிழித்து எடுத்து சபையோருக்குக் காண்பித்துவிட்டு அந்தச் சீட்டையும் கிழித்த துண்டையும் மேசையின் மேல், வைத்துவிட்டு, மூலை மடித்த சீட்டையும் கிழிந்த சிறிய துண்டையும். கையில் எடுத்து வந்து, மடித்த சீட்டில் மூளியாயிருக்கும் பகுதியை சபையோரிடம் காண்பித்து, உதவியாளரை மேடையில் நடுவில் நிற்க வைத்து, இடது கையில் மடித்த சீட்டைக் கொடுத்து கட்டை விரலையும், மூன்றாவது விரலையும் கொண்டு சீட்டைப் பிடித்து சபையோர் பார்க்கும்படி வைத்துக்கொண்டு, இடதுகை ஆள்காட்டி விரலை சீட்டுக்குப் பின்னால் வைத்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும். இந்த சீட்டின் வலது பக்க மேல் மூலை மூளியாகவே தென்பட வேண்டும்.

காட்சி நடத்துகிறவர் துப்பாக்கியை எடுத்து அதன் நீண்ட முன்பகுதியிலுள்ள துளையில் சீட்டில் கிழிந்த மூலையைச் சபையோர் காணும்படி போட்டு மேடையின் முன்பக்கம் கீழே இறங்கி சீட்டைக் குறிபார்த்து ஒன். - டு- த்ரீ என்று சொல்லி துப்பாக்கியை வெடிக்கச் செய்ய வேண்டும். அதே நேரத்தில் சீட்டைப் பிடித்திருக்கும் உதவியாள் தன் ஆள்காட்டி விரலினால் மடிந்திருக்கும் மூலையை சட்டென்று மேலே நிமர்த்திப் பிடிக்க வேண்டும். இந்தச் சமயம் ஆள்காட்டி விரல் சீட்டுக்கு மேல் வரக் கூடாது.

(தொடர்ந்து வரும்...........)

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வதெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை.
-காதில பூ கந்தசாமி-

டண்ட டண்டா டண்ட டண்டா/டண்ட டண்டா டா - டி
டண் டண்டா டண். டண்டா/டண்ட டண்டா டா

ம்.....தூக்கலான பாட்டொண்டு, ஞாபகம் வருகுதில்லையே. எதையெண்டாலும் சொல்லிப் பாடிப் பாப்பம்.

‘செங்கோலத்தான் தூக்கிக்கிட்டு ஓடிப்போலாமா - இல்லை ஓடிப்போயி செங்கோலத்தான் தூக்கிக்கலாமா.’

அட பாராளுமன்றத்தில செங்கோல் காணாமல் போனதாச் செய்தி கேட்டதிலயிருந்து அதே நினைப்பாத்தான் கிடக்கு. அப்பிடி என்ன கிடக்குதிந்தச் செங்கோலில. எதுக்கும் ஒரு நாலு பேரிட்டக் கேட்டு வைச்சாத்தானே என்னட்ட ஒரு நாலு பேர் கேட்டால் ஜம்பமாய் பதில் சொல்லலாம்! சரி, கேட்டுப் பாப்ப மெண்டிட்டு டெலிபோனைச் சுழட்டினன்.

**காபூ** :- ஹலோ.....யார் பேசிறது?

() :- நீர் முதல் யார் பேசிறீரெண்டு சொல்லும்.

**காபூ** :- அது நான் செங்கோல்.....

() :- செங்கோலோ?

**காபூ** :- சொறி சொறி...நான்...காதில பூ கந்தசாமி.

() :- சரி, இப்ப என்ன வேணும் உமக்கு?

**காபூ** :- எனக்கொரு செங்கோல் வேணும்.

() :- செங்கோலோ? அது என்ன சாமான் தம்பி?

**காபூ** :- அதத்தான் நானும் தெரிஞ்சுகொள்ள வேணும்.

() :- நீர் பிழையான நம்பருக்கு எடுத்திட்டீரெண்டு நினைக்கிறன். இது பார்லிமெண்ட்.

**காபூ** :- நீங்கள் யார் பேசிறீங்கள்.

() :- நான்தான் சபாநாயகர்.

**காபூ** :- அட சபா! எங்க சுபாவின்ர புருஷன் சபாவே?

**சபா** :- ஐஸே சபாநாயகரெண்டிறன் நீர் யாரோ. சுபாவை என்னோட முடிச்சுப் போடுறீர். எக்கணம் ஹக்கீமைப் போல என்னையும் கிசுகிசுவில மாட்டிவிடப் பாக்கிறீரோ?

**கா.பூ** :- சபா நாயகரெண்டிறியள். அப்பிடியெண்டால் எந்தச் சபா?

**சபா** :- என்ன உமக்குப் பாராளுமன்றமெண்டு ஒரு சபை இருக்கிறது தெரியாதே. அதின்ர நாயகர்தான் நான்.

**காபூ** :- அப்ப உங்கட சபையிலதான் அந்தச் செங்கோல் களவு போனதாமெண்டு பேப்பரில சொல்லிக் கிடக்குது. அதுதான் என்ன சமாச்சாரமெண்டு அறியக் கேட்டால், நீங்களே அறியாப் பொருளாக் கிடக்குதே?

**சபா** :- எது? அது அண்டைக்குக் களவு போன இரும்புத் துண்டையோ சொல்லுறீர்? அடடா...அது தம்பி ஏதோ ஒரு குண்டாந்தடி போல ஒண்ட, எங்கட படைக்கல நாயகர் அடிக்கடி தூக்கிக் கொண்டு வாறவர். நான் ஏதோ காகிதம் பறக்காமல் பாரத்துக்கு வைக்கிற சாமானெண்டு நினைச்சிட்டிருந்தன். அதுக்கு இத்தின மவுசு இருக்கெண்டு இப்பதான் விளங்கிச்சுது. ஏன் அதைப் பற்றி விசாரிக்கிறீர்?

**காபூ** :-அது சபா, வேற ஒண்டுக்குமில்லை. களவு போயிருக்கிறபடியால் ஏதும் விசேஷமான சாமனாயிருக்குமெண்டு தோணிச்சுது. அப்படி என்ன விசேஷமெண்டு அறிஞ்சால் நானும் ஒண்ட வாங்கி வீட்டில தொங்கப் போடலாம் எண்டு ஒரு ஐடியா?

**சபா** :- அது விசேஷமோ அதிவிசேஷமோ எனக்கொண்டும் தெரியாது. ஏதோ ஒரு பிக்கு சத்தியப் பிரமாணம் எடுக்க வேணுமெண்டு கேட்டார். சரி செய்யுங்கோவெண்டன். அதுக்குள்ள உவங்கள் அந்த தடியத் தூக்கிக்கொண்டு ஓடிட்டாங்கள். சரி! தடியில்லாவிட்டால் என்ன? சத்தியந்தானே! நான் என்ர மனசிக்கு எத்தின தரம் செய்து குடுத்திருக்கிறன். தாராளமா எத்தின தரமெண்டாலும் செய்யுங்கோ எண்டன். செங்கோல் இல்லையெண்டு கத்திறாங்கள்!

**கா.பூ** :- ஏன் சபா, உந்தச் செங்கோல் இல்லாட்டால் ஒரு சத்தியமும் செல்லாதே?

**சபா** :- சத்தியமா ஏன் கேக்கிறீர்?

**காபூ** :- இல்லை, என்ர மனிசிக்கும் நான் நிறையச் சத்தியங்கள் செய்து குடுத்திருக்கிறன். உப்பிடியெண்டு தெரிஞ்சா, செங்கோலில்லாமல் செய்த சத்தியங்கள் செல்லாதெண்டு சொல்லி எல்லாத்துக்கும் ‘பெப்பே’ சொல்லிவிடலாமெண்டு ஒரு ஐடியா கிளிக் பண்ணிச்சுது.

**சபா** :- எனக்கு உதப் பற்றித் தெரியாது காணும். செங்கோல் இருந்தாலென்ன. இல்லாவிட்டாலென்ன. சத்தியம் செய்யிறவை செய்திட்டுப் போங்கோ.

**காபூ** :- ஆனால் சபா, ஏதோ கோட்டால தடையுத்தரவு போட்டிருக்கினமெண்டு சொல்லி அமளிதுமளிப் பட்டிச்சினமாமே?

**சபா** :- தடையுத்தரவொண்டும் என்னைத் தடுக்காது கண்டீரோ! ஏனெண்டால், நான் அது கிடைக்கேல்லையே எண்டிட்டன்.

**காபூ** :- உப்பிடித்தான் நானும் கண்டீரோ. கடன்காறர் யாரும் கடனைத் திருப்பிக் கேட்டு லெட்டர் போட்டால் கிடைக்கேல்லையே எண்டு சொல்லித் தப்பிவிடுவன். அது சரி சபா, உந்தத் தடையுத்தரவு அனுப்பின கோட் என்ன தொலைதூரத்திலயே இருக்கு? சும்மா ஒரு ஃபோன் அடிச்சு விசாரிச்சுப் பாத்தால் உண்மையோவெண்டு தெரிஞ்சிருக்குமே?

**சபா** :- உண்மையெண்டு தெரிஞ்சுகொண்டிட்டுச் சத்தியம் செய்யச் சொல்ல ஏலுமே? விவரம் தெரியாதவராயிருக்கிறீர்?

**காபூ** :- எனக்கெண்டால் ஒரே குழப்பமாயிருக்கண்ண. அவங்கள் ஏதோ தடையுத்தரவு எண்டிறாங்கள். நீங்கள் தபால் வரயில்லையெண்டுறீங்கள். பிறகு அவங்கள் செங்கோல் இல்லையெண்டிறாங்கள். நீங்களோ சத்தியம் செய்விச்சிருக்கிறியள். எது தர்மம்? எது நியாயம்? எதுவும் புரியேல்லை.

**சபா** :- தர்ம நியாயங்கள் சனத்துக்குப் புரிஞ்சால் நாங்கள் ஏன் இங்கயிருக்கிறம்? அது சரி, நீர் இப்ப என்னட்டக் கனநேரத்தைக் கறந்திட்டீர். பார்லிமன்ட் ஸ்பீச்சுக்கே நான் உந்தளவு ஒதுக்கிறதில்லை. உமக்கிப்ப என்ன பிரச்சினை உந்தச் செங்கோலால? அதச் சொல்லும்.

**கா.பூ** :- இல்லை, உது உங்கயிருந்து பிரயோசனமில்லையெண்டால் கொஞ்ச நாள் வீட்ட கொண்டுபோய் வைச்சிருந்திட்டுத் தரலாமெண்டு பாத்தன். ஆஃப்ட ரோல் ஒரு இரும்புத் துண்டுதானே? ஆளாளுக்குத் தூக்கிக்கொண்டு போறத எனக்குத் தூக்கித் தந்தியளெண்டால்.....

**சபா** :- இந்தாரும் பிடியும்! (சபாநாயகர் செங்கோலைத் தூக்கி எனக்கு எறிய, அது, என்ர தலையில மோதி தலை உடைய...அட அத்தனையும் கனவு எண்டு விழித்து எழுகிறேன். போன் அலறியபடியிருக்கிறது.)

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(20.06.2004 தொடங்கி 26.06.2004 வரை)

சோதிட மாமணி தில்லை

## இந்த வாரக் கிரக நிலை

மிதுனம் - சூரியன், சனி, புதன், கர்க்கடகம் - செவ்வாய், சிங்கம் - வியாழன், துலாம் - கேது, மேடம் - இராகு, இடபம் - வெள்ளி, சந்திரன் கர்க்கடகம், சிங்கம், கன்னி இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் கலக்கம், பண விரயம், உறவினரால் கெடுதி, பிரயாண மிகுதி, தேக சுகம் பாதிப்பு, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**இடபம்** : (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழில் விருத்தி, பண வரவு, பூமியால் இலாபம், அன்னியர் உதவி, குடும்ப சுகம், உத்தியோகச் சிறப்பு, பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் கஷ்டம், பண முடங்கல், கடன்படல், குடும்ப கலகம், உத்தியோக மாற்றம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் மேன்மை, பண வரவு, அன்னியரால் கஷ்டம், வீண் குறை கேட்டல், குடும்ப சுகம், உத்தியோக மேன்மை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் நிலை கலக்கம், அன்னியரால் தொல்லை, வீண் குறை கேட்டல், முயற்சி தடை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் பலிதம், பண வரவு, வீண் குறை கேட்டல், குடும்ப கலக்கம், உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் மந்தம், காரியத் தடை, குடும்ப நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோகச் சிக்கல், மனக் கவலை, மாணவர் கல்வி மந்தம், ஊக்கம் குறைவு, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை ) தொழில் நன்மை, கௌரவம், பண வரவு, அன்னியர் சகவாசம், மன மகிழ்ச்சி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 05.**

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் உயர்ச்சி, காரியானுகூலம், வெளியிட வாழ்க்கை, இனசன நன்மை, பெரியோர் சகாயம், உத்தியோக முயற்சி, மாணவர் கல்விப்பேறு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் பலிதம், பண வரவு, வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை, உத்தியோகக் கஷ்டம், மனக் கலக்கம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் நன்மை, பாரிய முதலீடு, பொருள் வரவு, குடும்ப மகிழ்ச்சி, இனசன நன்மை, உத்தியோகச் சிறப்பு, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**மீனம்** : (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் உயர்ச்சி, முன்னேற்றம், பணக் கஷ்டம், கடன்படல், வெளியிடப் பயணம், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**


## கை கண்ட பலன்



எனது கிளை நிறுவனத்தில் மாந்திரிக ஜோதிட, வேலைகளுக்கு கைமேல் பலன்.
நுவரெலியாவில் எனது மூத்த சகோதரனாகிய P.T.R அவர்களிடம் சென்று
உங்கள் வேலைகளை
அப்பொழுது நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். ஸ்ரீ துர்க்கா தேவி
ஆலயம் மாந்திரிக உச்சாடன பீடம் பேராசிரியர் டாக்டர் பி.கே. சாமி.

Prof.Dr.P.K. SAMY (J.D.G.A.N.)J.P.
33, DAILY FAIR COMPLEX
NUWARAELIYA.
T.P 052-2222508

நுவரேலியாவை தவிர வேறு எங்கும் கிளைகள் கிடையாது இங்கும் தீயவேலைகளுக்கு இடமில்லை.

# இலக்கு......

கத்தியுள்ளவன் கை சும்மா இருக்காதென்பது பழமொழி. துப்பாக்கியுள்ளவன் கையும் அப்படித்தானாக்கும். அல்போட் பாலைவனத்திற்கு அருகில் உள்ள புல்வெளிக்கிடையில் நடப்பட்டுள்ளது இந்த பெயர்ப் பலகை. முன்பொரு காலத்தில் இப் பகுதி ஆடு மேய்ப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேய்ப்பர்களாக பெண்களே அதிகமாக ஈடுபட்டனர். பின்பு இப் பகுதி சட்ட விரோதமான விபசாரத் தொழில் மையமாகவும் மாறிப்போனதால், இப்போது அப் புல்வெளிகளில் ஆடு மேய்ப்பதற்கு மட்டுமல்லாது, மனித நடமாட்டத்துக்கே தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவித்தலை தெரிவிக்கும் பெயர்ப் பலகைதான் இது. போர் நடந்த இடத்தில் இருப்பது போன்று காட்சி தந்தாலும், போக்குவரத்தில் இலக்கைச் சரிபார்த்துக்கொள்ள சுடப்பட்ட அடையாளங்களே அவை.


## நிபுணத்துவ கைரேகை






கைரேகை என்பது ஒரு கடல் போன்றது. அப்படியே அதை ஆராய்ச்சி செய்வதென்றால் ஆதி பராசக்தியின் அருட்கடாட்சம் வேண்டும். இக் கூற்றுக்கமைய உலக நாடுகளுக்கு சென்று கைரேகைக் கலையை அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்து நிபுணத்துவம் பெற்ற என்னைச் சந்தியுங்கள். உங்கள் கைரேகையை பார்த்துப் பலா பலனை தெரிந்து கொள்ள முன்னறிவித்தலுடன் வந்தால் கைரேகை வாசிக்க காலநேரம் கொடுக்கப்படும்.

Tel: 2344832

கே.கங்காதரன் (M.A) J.P.
162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.
Booking Time 4.00 p.m To 7.00 p.m Only


ஜப்பானிலுள்ள ஒன்னா தீவு, சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவர்ந்திருக்கிறது. இங்கு தண்ணீருக்கடியில் நடக்கும் போட்டி பிரசித்தி பெற்றுள்ளது. மூக்குக்கண்ணாடி, ஒட்சிசன் சிலிண்டர், தலைக் கவசம் இவற்றின் துணையோடு மேற்படி நடைபோட்டியில் எவரும் பங்குகொள்ளலாம். இப்போட்டியானது ஜப்பானுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் முயற்சியாகும். மேற்படி தண்ணீருக்குள் நடக்கும் போட்டியில் கலந்துகொள்வதற்காகவும், ஜப்பானின் அழகை அநுபவிக்கவும் வருடத்திற்கு மூன்று மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தண்ணீருக்குள்ளே





# புது அநுபவம்

படத்தைப் பார்த்தீர்களா? ஏதோ நம்மூர் ஆட்டோ போன்ற வாகனம் ஒன்றில் அமெரிக்க அதிபர் புஷ்ஷும் அவரது வீட்டு அம்மாவும் ஜாலியாக டூர் கிளம்பி விட்டது போல இருக்கிறது அல்லவா? படத்தில் உள்ள வாகனத்தின் பெயர் ஜெம். குளோபல் எலக்ட்ரிகல் மோட்டார் என்பதன் சுருக்கம்தான் இந்த ஜெம். மின்சாரத்தில் இயங்கக்கூடிய இந்த வாகனம் சத்தமில்லாமல் ஓடக்கூடியது. நாமாக ஹார்ன் அடித்து சத்தம் எழுப்பினால்தான் உண்டு. அமெரிக்காவில் உள்ள சீ ஐலண்டு பகுதியில் ஜீ-8 நாட்டு தலைவர்களுக்கான இரவு விருந்து நடந்தது. அதில் பங்கேற்கத்தான் புஷ் இந்த வித்தியாசமான வாகனத்தில் வருகிறார். படத்தில் அதைக் காணலாம். பயங்கரவாதம் - சண்டை என்று திரியும் புஷ்ஷுக்கு இது புது அநுபவம்.

## 2ஆவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி அ. அமிர்தா**

**12.06.2004**

இணுவிலைச் சேர்ந்த சி. அழகரத்தினம் - மாலினி தம்பதிகளின் செல்வப் புதல்வி அமிர்தா தனது இரண்டாவது பிறந்தநாளை 12.06.2004இல் ITALY NAPOLI எனும் இடத்திலுள்ள தனது இல்லத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

அன்புச் செல்வம் அமிர்தாக் குட்டியை அன்பு அப்பா - அம்மா, இலங்கையில் இணுவிலில் இருக்கும் அப்பம்மா, உரும்பிராய் அம்மம்மா மற்றும் பெரியப்பா அருமைத்துரை குடும்பத்தினர், கோண்டாவில் - சின்னமாமா ரவிச்சந்திரன் குடும்பம், லண்டனிலுள்ள இணுவிலைச் சேர்ந்த சந்திரமணி அத்தை குடும்பத்தினர்/ வசந்தி அத்தை குடும்பத்தினர்/ சாந்தி அத்தை குடும்பத்தினர்/ தேவனா அத்தை குடும்பத்தினர், சிவா சித்தப்பா - ஊரெழு, வண்ணக்கிளி அத்தை குடும்பத்தினர் - நுணாவில், துரைரத்தினம் பெரியப்பா குடும்பத்தினர், சார்ஜாவில் வசிக்கும் தங்கத்துரை சித்தப்பா, உரும்பிராய் மதிப் பெரியம்மா குடும்பத்தினர், ரஞ்சி அத்தை குடும்பத்தினர், இத்தாலியில் இருக்கும் மகேந்திரன் பெரியப்பா, நகுலன் மாமா, சதியகுமார் பெரியப்பா குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கடவுள் கிருபையுடன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: சி. அழகரத்தினம் Italy.

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து

**செல்வன் ரிதனி**

**24.06.2004**



ஒந்தாச்சிமடம், முனைத்தீவைச் சேர்ந்த திரு. திருமதி சுரேஸ் - ரஜினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ரிதன் தனது முதலாவது பிறந்ததினத்தை 24.06.2004 அன்று LONDON - CROYDON இல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

அன்புச் செல்வன் ரிதன் குட்டியை லண்டனில் உள்ள அன்பு அப்பா - அம்மா, ரமேஷ் மாமா, வேவா மாமி, மச்சான் அஜய், வசந்தன் மாமா, இலங்கையில் ஒந்தாச்சிமடத்தில் இருக்கும் அப்பப்பா - அப்பம்மா, சின்ன அப்பம்மா, விக்னேஸ் குடும்பம், இராஜேஸ் குடும்பம், இராஜன் குடும்பம் மற்றும் முனைத்தீவைச் சேர்ந்த அம்மம்மா, சின்ன அம்மப்பா, சின்ன அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், பூட்டன், பூட்டி, அண்ணன்மார், அக்காமார், தம்பிமார், தங்கச்சிமார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் முனைத்தீவு மாணிக்க விநாயகர் அருள் பெற்று பல்கலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் வளமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல் - வசந்தன் - லண்டன்
004479 86220039